விலை : 20.00
பக்கங்கள்: இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 வைகாசி 21 வியாழக்கிழமை (04.06.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 167

# தமிழ் இளைஞர் காணாமல்போனதில்

# கடற்படை அதிகாரிகளுக்குத் தொடர்பு!

## சி.ஐ.டி நீதிமன்றில் தெரிவிப்பு

(கொழும்பு)

**கடந்த 2008 ஆம் ஆண்டு கொழும்பில் ஐந்து தமிழ் இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமல் போன சம்பவத்துடன் இலங்கைக் கடற்படை அதிகாரிகள் சிலர் சம்பந்தப்பட்டுள்ளதாக குற்றப்புலனாய்வுத் திணைக்களம் கொழும்பு மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.**

காணாமல்போனோர் தொடர்பான வழக்கின் விசாரணை நேற்று நடந்தபோது சாட்சியமளித்த குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் பொறுப்பதிகாரி ரஞ்சித் முனசிங்க, சம்பந்தப்பட்ட இளைஞர்களின் கடத்தல்களுடன் சுமித் ரணசிங்க மற்றும் சந்தன குமார ஆகிய இலங்கை கடற்படை அதிகாரிகள் சம்பந்தப்பட்டிருப்பதாக தான் மேற்கொண்ட விசாரணைகளின்போது தெரிய வந்ததாகக் கூறியுள்ளார்.

இது தொடர்பான விசாரணைகள் தொடர்ந்து முன்கொண்டு செல்லப்படுகின்ற காரணத்தினால் அவர்களைக்கைது செய்யவில்லை என்று கூறிய பொறுப்பதிகாரி, ஆனால் அவர்களின் வெளிநாட்டு பயணங்களைத் தடைசெய்யும் உத்தரவொன்றை நீதிமன்றத்திடமிருந்து பெற்றுக்கொண்டதாகவும் தெரிவித்தார்.

இவர்கள் இருவர் தவிர சம்பத் முனசிங்க எனும் மேலும் ஒரு கடற்படை அதிகாரியும் இந்த கடத்தல்களில் சம்பந்தப்பட்டுள்ளதை தான் மேற்கொண்ட விசாரணைகளின் போது ஊர்ஜிதப்படுத்தப்பட்டதாகவும் பொறுப்பதிகாரி ரஞ்சித் முனசிங்க கூறினார்.

மேலும் இந்த மூன்றாவது சந்தேக நபருக்கு கடந்த காலத்தில்

24ஆம் பக்கம் பார்க்க

## நீதிமன்றத் தாக்குதல்;

## சந்தேக நபர்களுக்கான விளக்கமறியல் நீடிப்பு!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் கடந்த 20ஆம் திகதி யாழ்.நீதிமன்றக் கட்டடத் தொகுதியின் மீது தாக்குதல் நடத்தியமை உள்ளிட்ட பல்வேறு வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த 130 பேரில் 43 பேருக்கான விளக்கமறியல் எதிர்வரும் 12 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் மீதான வழக்கு விசாரணை நேற்று யாழ்.நீதிவான் நீதிமன்ற பதில் நீதிவான் ஜெ.கஜநிதி பாலன் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இவ் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

கடந்த மாதம் 20ஆம் திகதி யாழ். நீதிமன்றக் கட்டடத் தொகுதிக்கு முன்பாக ஒன்று கூடியவர்களால் நீதிமன்றம் தாக்கப்பட்டதுடன், சிறைச்சாலை வாகனம், சட்டத்தரணியின் வாகனம் என்பன மீதும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

அங்கு கடமையில் நின்ற பொலிஸார் மீதும் ஒன்று கூடியவர்களால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இச் சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட அனைவரும் மறுநாள் காலை யாழ்.நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் குறித்த வழக்கு நேற்று மீண்டும் யாழ்.நீதவான் நீதிமன்ற மேலதிக நீதிபதி கஜநிதி பாலன் முன்னிலையில் 3 பிரிவாக பிரிக்கப்பட்டு விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

23ஆம் பக்கம் பார்க்க

## நாடாளுமன்றம் 9ஆம் திகதி வரை ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

நாடாளுமன்றம் எதிர்வரும் 9ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தலைமையில் நேற்று காலை 9.30க்கு நாடாளுமன்றம் கூடியது. விசேட அமர்வை நடத்துவதற்கு நாடாளுமன்றம் கூடப்பட்டபோதும்

24ஆம் பக்கம் பார்க்க

## நீதிமன்றக் கலகத்தால்! ரூ.10 இலட்சம் இழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் கடந்த 20 ஆம் திகதி இடம்பெற்ற கலகத்தால் சேதமாக்கப்பட்ட யாழ்.நீதிமன்ற கட்டடத் தொகுதிக்கு ஏற்பட்ட சொத்து இழப்பு 10 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த 20ஆம் திகதி யாழ்.நீதிமன்றம் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் கலகத்தில் ஈடுபட்டதாக

24ஆம் பக்கம் பார்க்க

## சீரழிவுகளை கட்டுப்படுத்த கோரி பருத்தித்துறையில் ஆர்ப்பாட்டம்!

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு மாணவி வித்தியாவின் கொலையைக் கண்டித்தும் சமூக விரோதச் செயல்களை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர வலியுறுத்தியும் பருத்தித்துறையில் நேற்று ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடைபெற்றுள்ளது.

பருத்தித்துறை நகர சபைத் தலைவர் சபா ரவீந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்த ஊர்வலம் மு.ப 9.30 மணியளவில் பருத்தித்துறை காந்தி சிலையடியில் இருந்து ஆரம்பமாகியது.

இந்த ஊர்வலத்தில் நகரசபை, பிரதேச சபை உறுப்பினர்களும் பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

காந்தி சிலையடியிலிருந்து ஆரம்பமாகிய இந்த ஊர்வலம் கொட்டடி சித்தி விநாயகர் ஆலயத்தைச் சென்றடைந்தது.

அங்கு பருத்தித்துறை நகர சபைத் தலைவர் சபா ரவீந்திரன் நகர சபை உறுப்பினர் சிவயோகன், பிரதேச சபை உறுப்பினர் ச.சுகிர்தன் ஆகியோர் உரையாற்றினர்.

இவர்கள் தமது உரையில் சமூக விரோதச் செயல்களைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்கு அனைத்துத் தரப்பினரும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென வலியுறுத்தினர்.

இதனைத் தொடர்ந்து பருத்தித்துறை மாவட்ட நீதிபதிக்கு முகவரியிடப்பட்ட மகஜர் காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஜபாரிடம் கையளிக்கப்பட்டது.

மேற்படி ஊர்வலம் நடைபெறுவதையிட்டு கலகம் அடக்கும் பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (11,3,60)

# புதிய தமிழ் அரசியல் கூட்டணி உதயம்




(கொழும்பு)

தமிழ் முற்போக்கு கூட்டணி எனும் பெயரில் மனோ கணேசன் தலைமையிலான ஜனநாயக மக்கள் முன்னணி, அமைச்சர் திகாம்பரம் தலைமையிலான தொழிலாளர் தேசிய சங்கம் மற்றும் அமைச்சர் இராதாகிருஷ்ணன் தலைமையிலான மலையக மக்கள் முன்னணி ஆகியவை இணைந்து இந்தப் புதிய கூட்டணியை உருவாக்கியுள்ளன.

புதிய கூட்டணிக்கு மனோ கணேசன் தலைவராகவும், திகாம்பரம் மற்றும் இராதாகிருஷ்ணன் ஆகியோர் துணைத் தலைவர்களாகவும் தேர்தெடுக்கப்பட்டுள்ளனர்.

நாட்டின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளுக்கு வெளியே வாழும் சுமார் 15 லட்சம் தமிழ் மக்களுக்கு போதிய அரசியல் அதிகாரம், பிரதிநிதித்துவம் மற்றும் தலைமைத்துவத்தை அளிப்பதே இந்தப் புதிய கூட்டணியின் நோக்கம் என மனோ கணேசன் தெரிவித்தார்.

எப்படி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்கு-கிழக்கு பகுதிகளில் வாழும் தமிழ் மக்களை பிரதிநிதித்துவம் செய்கிறதோ, அவ்வகையில் மலையகம் மற்றும் கொழும்பு உட்பட பல மாகாணங்களில் வாழும் தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்துவதே தமது நோக்கம் என்றும் அவர் கூறுகிறார்.

இருந்தாலும் மலையகப் பகுதியில் முக்கியமான ஒரு அரசியல் கட்சியாக பார்க்கப்படும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸுடன் தமக்கு எந்த உறவும் இல்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அடுத்து வரக்கூடிய நாடாளு

24ஆம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சஜின்வாஸின் மறியல் நீடிப்பு

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சஜின்வாஸ் குணவர்தனவின் விளக்கமறியல் நீடிப்பு செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் 17-ம் திகதி வரையில் இவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப் பட்டுள்ளது.

கொழும்பு கோட்டை நீதவான் நீதி மன்றத்தில் நேற்று சஜின்வாஸ் குணவர்தன ஆஜர்படுத்தப்பட்டார். இதனையடுத்து அவரை எதிர்வரும் 17-ம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதவான் உத்தர விட்டார்.

ஜனாதிபதி செயலகத்தின் 11 வாகனங்களை முறைகேடாக பயன்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் சஜின்வாஸ் குணவர்தன கடந்த மே மாதம் 11-ம் திகதி புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

சஜின்வாஸ் குணவர்தன தனியார் பாதுகாப்பு நிறுவனம் ஒன்றுக்காக இந்த வாகனங்களை பயன்படுத்தியுள்ளதாக புலனாய்வுப் பிரிவினர் கடந்த மாதம் நீதிமன்றத்தில் தெரிவித்திருந்தனர். எனினும் குணவர்தன இந்த குற்றச்சாட்டுக்களை மறுத்துள்ளார். (இ-5)

# இந்தியப் பிரஜைக்கும் விளக்கமறியல் நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் கடந்த 20ஆம் திகதி இடம்பெற்ற கலகத்தில் கைது செய்யப்பட்ட இந்தியப் பிரஜைக்குப் பிணை வழங்க மறுத்து எதிர்வரும் 12ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ் நீதவான் நீதிமன்ற மேலதிக நீதவான் கே.கஜநிதிபாலன் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த மாதம் 20 ஆம் திகதி நீதிமன்றம் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் கலவரத்தில் ஈடுபட்டதாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட 129 பேரில் ஒரு தொகுதியினர் நேற்று மன்றில் ஆஜர் படுத்தப்பட்டனர்.

குறித்த சந்தேக நபரின் கைத் தொலைபேசியில் கலவரம் தொடர்பான ஒளிப்படங்கள் இருப்பதாக கூறி பிணையில் விட வேண்டாம் என பொலிஸார் ஆட்சேபனை தெரிவித்தனர். (9)


SPEED
PURIFIED DRINKING WATER
சுத்தமான குடி தண்ணீர்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள
மங்கல நிகழ்வுகள், விடுதிகள், ஹோல்கள் (Hall) விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.
ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 5392
(C-1151) (C-8284)



டயானா பிளாஸ்டிக் மீள் சுழற்சி
கழிவு பிளாஸ்டிக் விலைக்கு வாங்கப்படும்
வாளிவேசன்-1Kg-50/=
கதிரை-1Kg-80/=
கான்-1Kg-35/=
தொடர்புகளுக்கு:-0212228680, 0775925088
108, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்க எம்முடன் இணையுங்கள்
(C-1159)


# உசனில் ரயில் மோதி இளைஞன் படுகாயம்

(மிருசுவில்)

சாவகச்சேரி உசன் பகுதியில் ரயில் மோதியதில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்து ஆபததான நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். இச்சம்பவம்நேற்று புதன்கிழமை பி.ப. 2.30 மணியளவில் இடம்பெற்றது. உசன் சந்திப் பகுதியில் அமைந்துள்ள பாதுகாப்பற்ற ரயில்கடவையை சைக்கிளில் கடக்க முற்பட்ட இளைஞரை கொழும்பிலிருந்து யாழ். நோக்கி வந்த ரயில் மோதித்தள்ளியது.

படுகாயமடைந்த அவர் ஆபத்தான நிலையில் சாவகச்சேரி வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலைக்கு அம்புலன்ஸ் மூலம் அனுப்பி வைக்கப்பட்டார். உசனைச் சேர்ந்த ஜெபநாம கணேசன் யதுர்த்தன் (வயது 16) என்ற இளைஞரே படுகாயமடைந்தவராவார். இது தொடர்பில் கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளைமேற் கொண்டுள்ளனர். (11-85)

# நாரந்தனையில் வாள்வெட்டு ஒருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிளில் வந்த நால்வர் ஒருவரை வாளால் வெட்டினர். இதில் படுகாயமடைந்த நபர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்த சம்பவம் நேற்று புதன்கிழமை காலை நாரந்தனையில் இடம்பெற்றுள்ளது. இரு சமூகப் பிரிவுகளுக்கு இடையே கடந்த ஒரு மாத காலமாக நிலவும் பிரச்சினையே இந்த வாள்வெட்டுக்குக் காரணம் எனக் கூறப்படுகின்றது.

இந்நிலையிலே இதில் படுகாயமடைந்தவரை அப்பகுதி மக்கள் மீட்டு ஊர்காவற்றுறை வைத்தியசாலையில் சேர்ப்பித்தனர். பின்னர் அவர் மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

இந்த சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் ஒருவரை ஊர்காவற்றுறைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். (11)

# நெல்லியடிப் பேருந்து நிலையத்தில் இருக்கைகள் அமைக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

அண்மையில்திறந்து வைக்கப்பட்ட நெல்லியடி மத்திய பேருந்து நிலையத்தில் பொருத்தப்படவேண்டிய இருக்கைகளின் ஆரம்ப வேலைகள் ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் வெகு விரைவில் இருக்கைகள் பொருத்தப்படும் என வடமாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இம்மாதம் முதலாம் திகதி வலம்புரி பத்திரிகையில் பிரசுர மாகியிருந்த செய்தி குறித்து அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

நெல்லியடி மத்திய பேருந்து நிலையம் எனது அமைச்சில் இருந்து 20 இலட்சம் ரூபாயும் வடமாகாண சபை மற்றும் பிரதேச சபை உறுப்பினர்க ளின் நிதியில் இருந்து 15 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த பேருந்து நிலையம் அமைப்பதற்குரிய வேலை களை பிரதேச சபை மேற்கொண்டிருந்தது.

அங்கு இருக்கும் சிறு குறைபாடுகள் விரைவில் சரிசெய்யப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# ஜனாதிபதி இப்படியுமா?

(கொழும்பு)

பொலநறுவையை பிறப்பிடமாக கொண்ட மைத்திரிபால சிறிசேன என்ற சாதாரண ஒருவரை இந்நாட்டு ஜனாதிபதியாக நியமித்தது இந்நாட்டு மக்களினால் மேற்கொள்ளப்பட்ட ஒரு மாற்றம்.

இவ்வாறு நியமிக்கப்பட்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனக்கு அவசியமான பாதணிகளை கொள்வனவு செய்வதற்காக தான் செல்லும் பயணத்தின் இடையில் இருந்த சாதாரண பாதணி கடை ஒன்றிற்கு சென்றுள்ளார்.

இதன்போது சாதாரண ஒருவர் அணியும் பாதணி இரண்டினையும் பெற்றுக்கொண்டுள்ளார். கடந்த காலம் நாட்டை ஆட்சி செய்தவர்கள் மிக ஆடம்ர சொகுசு வாழ்க்கை வாழ்ந்த நபர்கள் அவர்கள் மக்கள் பணத்தையும் சேர்த்து வீணடித்தார்கள்.

அவர்களின் பிள்ளைகள் அணியும் பாதணிகளின் பெறுமதி 3 இலட்சத்தை தொடும். அவ்வாறானவர்கள் பயன்படுத்திய இடுப்பு பட்டியின் விலை ஒரு இலட்சத்திற்கும் அதிகமானதாகும்.

இப்படியிருக்கும் போது தற்போதுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாட்டில் வாழும் சாதரண மனிதனாக வாழ்ந்து வருவது வியக்கத்தக்கது. நாட்டின்ஜனாதிபதிஏனையவர்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாக மிளிர்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (11)


யா/ யூனியன் கல்லூரியின் இரு சகாப்த நிறைவு விழா

இவ் விழாவின் ஓர் அங்கமாக கல்லூரியில் அர்ப்பணிப்பு மிக்க சேவையை நல்கிய ஆசிரியர்களது விபரங்கள், நயப்புரைகள், அவர்கள் பற்றிய கட்டுரைகள் உள்ளடங்கிய மலர் ஒன்று வெளியிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இதற்கான ஆலோசனைக்கும் செயற்குழுவிலும் பங்குபற்ற விரும்புகின்ற முன்னைநாள் அதிபர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் மற்றும் நலன்விரும்பிகள் எதிர்வரும் சனிக்கிழமை (06.06.2015) மு.ப. 9.00 மணிக்கு கல்லூரியில் ஒன்றுகூடுமாறு வேண்டுகிறேன்.

- அதிபர்

(C-1160)



2-வது பிறந்தநாள் வாழ்த்து



உ.சுவிகா

வல்வெட்டி துரையன் செம்பாட்டைச் சேர்ந்த குணரத்தினம் உதயகுமார் என்பவரின் செல்வப்புதல்வி உ.சுவிகா அவர்கள் இரண்டாவது பிறந்தநாளை தனது இல்லத்தில் இன்று 04.06.2015 வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் வெகுவிமர்சையாக கொண்டாடுகிறார். பிறந்தநாளை கொண்டாடும் உ.சுவிகாவை அப்பா, அப்பப்பா (பொ.குணரத்தினம்), அப்பம்மா (கு.தங்கராணி) மற்றும் திரு.திருமதி தங்கவேலாயுதம் குடும்பத்தினர், சாந்தகுமார் குடும்பத்தினர் (சுவிஸ்), ஜெயக்குமார் குடும்பத்தினர் (சுவிஸ்), பெரியப்பா (ராஜ்குமார் - சுவிஸ்) ஆகியோர் செல்வப் புதல்வியை நீடூழிகாலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

மற்றும் அவரின் உயிர் நண்பனான சர்வேஸ்வரன் (வெள்ளை) மற்றும் அவரின் நண்பர்கள் செல்வியை பல்லாண்டுகாலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

T.P : 077 9594 783

துரையன் செம்பாடு,
வல்வெட்டி மத்தி,
வல்வெட்டித்துறை.

(C-1165)



பதவி வெற்றிடம்

எமது நிறுவனத்தில் இணைந்து வாழ்க்கையை புதிதாக எழுதுவதற்கு இதோ உங்களுக்கு அரியதோர் சந்தர்ப்பம். சர்வதேச நிறுவனம் ஒன்றில் அங்கத்தவராகும் வாய்ப்பு உங்களுக்கு கிடைத்துள்ளது.

● வயதெல்லை - (20-60) ● கல்வித்தகைமை - G.C.E A/L

Note : பகுதி நேர வேலையில் ஆர்வம் உள்ளவர்களும் விண்ணப்பிக்கலாம்.

T.P. No. : 075 917 1759
0777 121 868

(645)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# செல்ஃபி

உங்கள் செல்ஃபிகளை
photosofvalampurii@gmail.com
என்னும் முகவரிக்கு உங்கள் பெயர், முகவரியுடன்
அனுப்பிவையுங்கள்.
சிறந்த செல்ஃபிக்கு பரிசில்கள் உண்டு


ஜோய்லன் மரியதாஸ்


அஜந்தன்
கொக்குவில்


சுதிர்தன்
யாழ்ப்பாணம்


ஜெயம்
நிரோஷ்


நகுலராஜ்
தேவகஸ்



அருண்குமார்
கரவெட்டி

## அர்ஜூன் மகேந்திரன் பிரஜாவுரிமை குறித்து கேள்வி எழுப்புவது நியாயமானதல்ல- ரணில்

(கொழும்பு)

**மத்திய வங்கி ஆளுநர் அர்ஜூன் மகேந்திரனின் பிரஜாவுரிமை குறித்து கேள்வி எழுப்புவது நியாயமானதல்ல என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**



நாட்டின் உயர் பதவியான பாதுகாப்பு செயலாளர் பதவியை கோத்தபாய ராஜபக்ஷ போன்ற அமெரிக்க பிரஜை வகித்த நிலையில் சிங்கப்பூர் பிரஜையான அர்ஜூன் மகேந்திரன் மத்திய வங்கி ஆளுநராக நியமிக்கப்பட்டமை தொடர்பில் கேள்வி எழுப்புவது நியாயமானதல்ல என பிரதமர் தெரிவித்தார்.

பாராளுமன்றில் நேற்று அர்ஜூன் மகேந்திரன் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்த்தன எழுப்பிய கேள்விக்கு பதில் அளித்தபோதே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

மகிந்த ராஜபக்ஷ ஆட்சியில் காணப்பட்ட உயிர் அச்சுறுத்தல் காரணமாகவே அர்ஜூன் மகேந்திரன் நாட்டை விட்டுச் சென்றதாகவும் அவர் இலங்கையில் இருந்திருந்தால் லசந்த விக்ரமதுங்கவிற்கு நடந்தது நேர்ந்திருக்கும் என்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டினார்.

நாட்டுக்கு சேவை செய்யக்கூடிய நபர்களை நாட்டைவிட்டு விரட்டும் கொள்கையை அன்றி நாட்டிற்கு அவர்களை மீள அழைத்து சேவைகளை பெற்றுக் கொள்ளும் யுகத்தை ஏற்படுத்தியுள்ளதாக பிரதமர் கூறினார்.

தினேஸ் குணவர்த்தன போன்ற பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இன்று பாராளுமன்றில் சுதந்திரமாக பேசக்கூடிய சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளதை இட்டு மகிழ்ச்சி அடைவதாகவும் மகிந்த ராஜபக்ஷ ஆட்சியில் பேசக்கூடியவர்களுக்கு அமைதியாக இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டதாகவும் பிரதமர் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-5)


## அதிரடிச் சலுகை

வலம்புரியின் அதிரடிச் சலுகை

- மரண அறிவித்தல்கள்
- கண்ணீர் அஞ்சலிகள்
- நினைவு கூருதல்

ஆகியவற்றுக்கு
01.06.2015 முதல்

மேலதிக விபரங்களுக்கு இன்றே வலம்புரி காரியாலயத்தை நாடுங்கள்...

தொடர்புகளுக்கு :-
021 221 7603,
021 321 0815
021 567 1543

Valampuriijaffna@gmail.com


## இராசி பலன்

04.06.2015
(வைகாசி 21, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.54 மணிக்கு
துதியை முன்னிரவு 8.45 மணிவரை
மூலம் முன்னிரவு 8.25 மணிவரை
இராகுகாலம் 1.22-2.52 மணிவரை
சுபநேரம் 7.22-8.52 மணிவரை
திருஞானசம்பந்தர் குருபூசை,
திருநீலகண்டர், யாழ்ப்பாணர் குருபூசை

வளவன்

**மீனம்** தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், வசதி வாய்ப்புக்களை பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், மனதில் இனம் புரியாத மகிழ்ச்சி குடிகொள்ளும், போசன நன்மையுண்டு.

**மேடம்** மனக்குறைவகன்று மகிழ்ச்சி கூடும் நாள், வீட்டை அழகாக வைத்திருப்பதில் அக்கறை காட்டுவீர்கள், சேமிப்பை ஈடு கட்டும் எண்ணம் உருவாகும், வீண்பழிகள் மாறும்.

**இடபம்** வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், சுற்றத்தாரை அனுசரித்து செல்வது நல்லது, உடல் நலனில் கவனம் தேவை, பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம்.

**மிதுனம்** விருந்தினர் வருகையால் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், நண்பர்களால் ஒரு சில நன்மைகள் நடைபெறலாம், ஆசைப்பட்ட பொருளொன்றை வாங்கி மகிழ்வீர்கள்.

**கும்பம்** வருமானத்தை அதிகரிக்க முற்படுவீர்கள், குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள், சமயோசிதப் புத்தியால் பலரையும் கவர்வீர்கள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் மகிழ்ச்சி உண்டு.

**கடகம்** சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பழைய கடன்களை அடைக்க புதிய வழிகளை கையாள்வீர்கள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறும்.

**மகரம்** மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், பெரியவர்களின் ஆலோசனைகளை கேட்டு நடப்பது நல்லது, சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**சிம்மம்** எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், சிறப்பான நாள், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும்.

**தனுசு** சிக்கனத்தை கட்டுப்படுத்த முற்படுவீர்கள், திடீர் பயணத்தால் வழக்கமான பணிகளில் சுணக்கம் ஏற்படலாம், வழிபாட்டால் சுகம் காண வேண்டிய நாள், சிந்தனை மிகுதியான நாள்.

**விருச்சிகம்** வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், பெரிய மனிதர்கள் வீடு தேடி வருவர், திடீர் பயணங்கள் தித்திக்க வைக்கும், குடும்பத்தினரின் எண்ணங்களை நிறைவேற்றுவீர்கள்.

**துலாம்** பாராட்டும் புகழும் கூடும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, இளைய சகோதர வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள்.

**கன்னி** வம்பு வழக்குகளை சமாளித்து வளம் பெறுவீர்கள், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், குடும்பத்தினர் உங்களின் சொற்களை கேட்டு நடக்க முன்வருவர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புங்குடுதீவில் மாணவி கொலை

# நடந்தது என்ன?



மாணவி வித்தியா

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ். மாவட்ட செயலகத்தில் ஆர்ப்பாட்டப்பேரணி நடந்து மகஜர் கையளிப்பும் இடம்பெற யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி மாணவர்களும் யாழ்ப்பாணம் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவிகளும் தத்தம் பாடசாலை முன்றலில் கூடி அமைதியான முறையில் தங்களின் எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

புங்குடுதீவு மாணவி வித்தியாவின் படுகொலையைக் கண்டித்து 20.05.2015 அன்று மாணவர்கள் ஒரு மணிநேரம் தமது எதிர்ப்பை வெளிப்படுத்த முடியுமென வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் அறிவித்திருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

20 ஆம் திகதி யாழ். குடாநாடு முழுவதிலும் பதற்றம் நிலை கொண்டிருந்தது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களும் இந்த ஆர்ப்பாட்டப் பேரணிகளில் தங்களின் பங்களிப்பை வழங்கியிருந்தனர்.

இதுதவிர ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையான இளைஞர்கள் மோட்டார் சைக்கிள்களில் ஊர்வலமாகச் சென்றனர். அவர்களின் கைகளில் உருவப் பொம்மைகள், புகைப் படங்கள், பதாகைகள் இருந்ததைக் காணமுடிந்தது.

இப்படியாக எல்லாம் சுமுகமாக நடந்ததாயினும் பிற்பகல் ஒரு மணிக்குப் பின்னர் கதிரவன் மேற்றிசையில் சாய்ந்தது போல் பேரணியும் தனது இலக்கை- இலட்சியத்தை சாய விட்டது.




ஆம் 20.05.2015 அன்று பிற்பகல் ஒரு மணியளவில் பல திசைகளிலும் வந்த பேரணியினர் யாழ்ப்பாணம் பிரதான வீதி, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி முன் வீதி வழியாக யாழ். நீதிமன்றத்தை நோக்கிச் செல்லலாயினர்.

யாழ்ப்பாணம் பிரதான வீதி, யாழ். மத்திய கல்லூரி வீதி ஆகியன பொலிஸாரால் தடை செய்யப்பட்டிருந்த போதிலும் வீதித்தடையில் இரண்டு மூன்று பொலிஸாரே காவலில் நின்றமையால் பேரணியில் வந்தவர்கள் தடைகளைத் தாண்டி யாழ்ப்பாண நீதிமன்றத்தை நோக்கி நகர்ந்தனர்.

ஆர்ப்பாட்டப் பேரணி யாழ்ப்பாண நீதிமன்றத்தை நோக்கி நகர வேண்டிய தேவை என்ன? என்ற கேள்வி எழுவது இங்கு நியாயமானதே. அவ்வாறான கேள்விக்குப் பதிலும் இல்லாமல் இல்லை.

19.05.2015 அன்று புங்குடுதீவில் உயர்மட்ட மாநாடு நடந்தபோது மாணவி வித்தியாவின் கொலையுடன் சம்பந்தப்பட்டவர் எனச் சந்தேகிக்கப்படும் சுவிஸ்குமார் கொழும்பில் நிற்பதாகக் கிடைத்த தகவலை அடுத்து மாநாட்டில் பெரும் களேபரம் ஏற்பட்டிருந்தது.

இச்சந்தர்ப்பத்தில் 20.05.2015 அன்று அதாவது புங்குடுதீவில் மாநாடு நடந்த மறுதினம் சுவிஸ் குமாரை யாழ்ப்பாணத்திற்குக் கொண்டு வந்து அவரை நீதிமன்றில் ஆஜர் படுத்துவேன் என்ற உறுதி மொழியை வடக்கு பிரதிப் பொலிஸ்மா அதிபர் எழுத்துமூலம் வழங்கியிருந்தார்.

மாணவி வித்தியாவின் கொலையுடன் இதுவரை ஒன்பதுபேர் சம்பந்தப்பட்டதாக நம்பப்படுகின்ற போதிலும் சுவிஸ் குமார் என்ற சந்தேக நபர் மீதே பொதுமக்களுக்குக் கடுமையான கோபம்.

வித்தியாவின் கொலையிலும் கூட்டு வன்முறையிலும் சுவிஸ்குமாரின் திட்டமிடலே இருந்ததாக மக்கள் கருதுவதால் சுவிஸ் குமார் எந்த வகையிலும் தப்பிச் செல்லக்கூடாது என்பதில் பொதுமக்கள் மிகவும் உறுதியாக இருந்தனர்.

பணபலம்; செல்வாக்குப் பலம் என்பவற்றின் துணைகொண்டு சுவிஸ் குமார் தப்பிவிடலாம் என்ற கோபத்தோடு இருந்த பொதுமக்கள் 2015 மே மாதம் 20 ஆம் திகதி யாழ்ப்பாண நீதிமன்றில் சுவிஸ்குமார் முன்னிலைப்படுத்தப்படுவார் என்ற நம்பிக்கையோடு இருந்தனர்.



சுவிஸ்குமாருக்கு தமது எதிர்ப்பைக் காட்ட வேண்டும் என்ற நோக்கத்திலும் பேரணியில் கலந்து கொண்டவர்கள் யாழ்ப்பாண நீதிமன்றத்தை நாடிச் சென்றிருந்தனர்.

எனினும் வடக்கின் பிரதிப் பொலிஸ்மா அதிபர் பொதுமக்களுக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்றத் தவறினார்.

அவர் எழுத்து மூலம் கொடுத்த உத்தரவாதம் நிறைவேற்றப்படவில்லை. இதனால் பொதுமக்கள் ஆத்திரமடைந்தனர். கொழும்பில் நின்ற சுவிஸ்குமார் தப்பி விட்டதாகவே பேரணியில் இருந்தவர்கள் கருதியிருக்க வேண்டும்.

சுவிஸ் குமாரை பொலிஸார் கைது செய்யவில்லை; அவரை நீதிமன்றுக்குக் கொண்டு வரவில்லை என்ற ஆத்திரம் மேலிட கோசங்கள் பலத்தன.

எனினும் உண்மையாக- உணர்வுபூர்வமாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தங்கள் மனவெழுச்சியை கோசமாக வெளிப்படுத்தினரேயன்றி நீதிமன்றத்தைத் தாக்கும் எண்ணத்தைச் சிறிதும் கொண்டிலர்.

இருந்தும் பேரணியோடு நின்றவர்கள்- நீதிமன்றத்தைத் தாக்கினால் அதன் விளைவு என்னவாக இருக்கும் என்பதை அறியாத- பொறுப்பற்றவர்கள் மனதினுள் கறுப்பு வைத்து அவ்விடத்தில் நின்றது தான் வேதனைக்குரிய விடயம்.

(தொடரும்)

புருசோத்மன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### விக்னேஸ்வரன் ஜனாதிபதி அல்ல!

# வடக்கிலுள்ள ராணுவத்தை வெளியேற்றவே கூடாதாம்

## எதிர்க்கட்சித் தலைவர் கூறுகிறார்

(கொழும்பு)

**அரசாங்கத்தின் அச்சாணி வடமாகாண சபையிடமே உள்ளது. வட மாகாணத்தின் தேவைக்கேற்ப அடிபணிந்தும் அஞ்சியுமே அரசாங்கம் செயற்படுகின்றது. வடக்கில் உள்ள இராணுவத்தை வெளியேற்றுமாறு கூற விக்னேஸ்வரன் ஜனாதிபதி அல்ல. யார் சொன்னாலும் வடக்கில் உள்ள இராணுவத்தை வெளியேற்றக்கூடாது என எதிர்க்கட்சித் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.**



வடக்கில் உள்ள இராணுவத்தை வெளியேற்ற வேண்டும் என்ற வகையில் வட மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் கருத் துக்களை முன்வைத்ததாக கடந்த வாரத்தில் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ள நிலையில் அது தொடர்பில் கருத்துக் கூறிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

விடுதலைப் புலிகளை முழுமையாக அழித்துவிட்டதாக குறிப்பிட்டாலும் அவை இலங்கையில் மட்டுமே கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. ஆனால் சர்வதேச அளவில் புலிப் பயங்கரவாதம் இன்னமும் பலமாகவே செயற்படுகின்றது.

விடுதலைப் புலிகளின் சர்வதேச வலையமைப்பு மீண்டும் இலங்கையை தாக்கக்கூடிய சந்தர்ப்பங்கள் அதிகமாகவே உள்ளன. இவ்வாறான நிலையில் எமது நாட்டை பாதுகாக்க வேண்டியது எமது கடமையாகும். வென்றெடுத்த விடுதலையை மீண்டும் தாரை வார்க்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

வடக்கில் அட்டூழியங்கள் அதிகரித்துள்ளதுடன் அச்சுறுத்தல்களும் ஏற்பட்டுள்ளன. அதேபோல் புலம்பெயர் அமைப்புகள் மற்றும் புலிகள் இயக்கத்தின் தலையீடுகள் மீண்டும் வடக்கை ஆக்கிரமிக்கும் சூழலும் ஏற்பட்டுள்ளது. எனவே மீண்டும் வடக்கு கிழக்கு உள்ளிட்ட நாட்டின் முக்கிய பகுதிகளில் இராணுவப் பாதுகாப்பை பலப்படுத்தவேண்டிய தேவை உள்ளது.

அதேபோல் வடமாகாண முதலமைச்சர் மீண்டும் இனவாத செயற்பாடுகளை ஆரம்பித்து விட்டார். தடைசெய்யப்பட பயங்கரவாத இயக்கத்தை நினைவுகூர்ந்து வடக்கில் புலிகள் தினத்தை வட மாகாண முதலமைச்சர் தலைமையில் அனுஷ்டிக்கின்றார்கள். வடக்கில் சட்டத்துக்கு முரணான வகையில் நீதிமன்ற தடைகளை மீறி ஆர்ப்பாட்டங்கள், பேரணிகள் நடத்தப்பட்டுள்ளன. அதேபோல் வடக்கில் நீதிமன்றம், பொலிஸ் நிலையம் என்பன தாக்கப்பட்டுள்ளன. மக்களை தூண்டிவிடும் செயற்பாடுகள் மீண்டும் வடக்கில் ஆரம்பித்துள்ளன.

இந்நிலையில் வடக்கில் உள்ள இராணுவத்தை வெளியேற்றும் செயற்பாடுகளை அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது. வடக்கில் பாதுகாப்பு வலயங்கள் நீக்கப்பட்டு அனைத்து பகுதிகளும் மக்களுக்கு வழங்கப்படுகின்றன.

மக்களின் காணிகளை அம் மக்களுக்கு வழங்க வேண்டும். அதில் எந்த மாற்றுக் கருத்துகளுக்கும் இடமில்லை. ஆனால் மக்களை சாட்டி வடக்கில் மீண்டும் ஆக்கிரமிப்புகள் நடைபெறுகின்றன. அதேபோல் இந்த அரசாங்கத்தின் ஐந்து மாத காலத்தில் வடக்கில் உள்ள அதிகளவான இராணுவத்தை வெளியேற்றியுள்ளது.

இந்நிலையில் வடக்கில் உள்ள ஒட்டுமொத்த இராணுவத்தையும் வெளியேற்றும் முயற்சியை வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் மேற்கொண்டு வருகின்றார். வடக்கில் உள்ள இராணுவத்தை வெளியேற்றுவது தொடர்பில் தீர்மானம் எடுக்கும் பொறுப்பு அரசாங்கத்துக்கே உள்ளது.

ஜனாதிபதியின் அதிகாரங்களை மாகாண முதலமைச்சர் எடுத்துக் கொள்ளும் நிலைமை இன்று நாட்டில் ஏற்பட்டுள்ளது. இராணுவத்தை வெளியேற்றக் கூற விக்னேஸ்வரன் ஜனாதிபதி அல்ல என்பதை அவர் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும்.

வடமாகாணத்துக்கு இன்று அரசாங்கம் அடி பணிந்துள்ளது. வடக்கில் மட்டுமே இவர்களின் சேவைகள் மற்றும் அரசியல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதை நாம் வன்மையாக கண்டிக்கிறோம். வடக்கில் இருந்து ஒருபோதும் இராணுவத்தை வெளியேற்றக்கூடாது.

வடக்கில் மக்களின் பாதுகாப்பு இராணுவத்தின் கைகளில் மட்டுமே உள்ளது. அதை மீண்டும் சீரழிக்கக் கூடாது. தொடர்ந்தும் வடக்கில் இராணுவம் பலப்படுத்தவேண்டும் என்பதை நாம் அரசாங்கத்துக்கு தெரிவிக்க விரும்புகின்றோம்.

மேலும் எமது அரசாங்கத்தை மீண்டும் உருவாக்கும் முயற்சிகளை நாம் முன்னெடுத்து வருகின்றோம். எமது ஆட்சியில் நாட்டின் பாதுகாப்புக்கே முக்கியத்துவம் வழங்கினோம். ஆனால் இன்று நிலைமை மாறியுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)


## அன்பு வாசகர்களே !

01.06.2015 முதல் உங்கள் வலம்புரியில்

**செல்ஃ(f)பி**

சிறந்த செல்ஃ(f)பி அனுப்புவர்களுக்கு வாராந்தம் பரிசில்கள் உண்டு.

நீங்கள் அனுப்ப வேண்டிய மின்னஞ்சல்
photosofvalampurii@gmail.com

## பதவி வெற்றிடம்

கிளிநொச்சி ஆனந்தபுரத்தில் உள்ள வலம்புரியின் உப அலுவலகத்தில் பணியாற்றுவதற்காக பின்வரும் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு இடம்பெறவுள்ளது.

- அலுவலக உத்தியோகத்தர் (ஆண்)
- கணனி இயக்குநர் (ஆண்)
- அலுவலகப் பணியாளர் (ஆண்)

**தகைமை**

- கல்வித் தகைமை: க.பொ.த உயர்தரத்தில் சித்தி
- வயது: 25-35
- உப அலுவலகம் அமைந்துள்ள இடத்திற்கு அண்மையாக இருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

பொருத்தமானவர்கள் தங்கள் சுயவிபரம் அடங்கிய விண்ணப்பத்தை விண்ணப்பிக்கும் பதவியை கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிட்டு

**பிரதம ஆசிரியர்,**
**வலம்புரி**
**இல.03, 2ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

-பொது முகாமையாளர்

## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 86<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: IT/ சொந்த தொழில் UK<br>தொ.இ: B/734 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 14 1/4 செவ் 2 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: BSC/ அரச தொழில்<br>தொ.இ: G/2041 |
| பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 61 1/2 செவ் 8 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: O/L/ தனியார் தொழில்<br>தொ.இ: B/736 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 60 சூரிசெவ் 2 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: ஆசிரியர்<br>தொ.இ: G/1310 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா: 25 உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: A/L/ தனியார் தொழில்<br>தொ.இ: B/737 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 58 செவ் 7 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/1311 |
| பிறப்பு: 1976 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 26 1/2 சூரிசெவ் 6 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: BA, MA/ அரச தொழில்<br>தொ.இ: B/748 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 44 1/2<br>உயரம்: 4'10"<br>தகைமை/தொழில்: முன்பள்ளி ஆசிரியர்<br>தொ.இ: G/1314 |

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவி படுகொலையைக் கண்டித்து நேற்றும் போராட்டம்







புங்குடுதீவு மாணவி வித்தியா படுகொலை செய்யப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் போதைவஸ்து பாவனையால் ஏற்படும் விபரீதங்களை கட்டுப்படுத்தக் கோரியும் பருத்தித்துறையில் நேற்று இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது... (படங்கள்:- கரணவாய் செய்தியாளர்)

## காணியைக் கையகப்படுத்துவது குறித்து பாதுகாப்பு அமைச்சு கடிதம் அனுப்பிவைப்பு

(யாழ்ப்பாணம்)

**ஆனைக்கோட்டை கூழாவடியில் இராணுவத்தினரால் பயன்படுத்தப்பட்டு வரும் தனியார் ஒருவரது வீட்டையும் காணியையும் கையப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவ தாக பாதுகாப்பு அமைச்சு கடிதம் மூலம் அறிவித்துள்ளது.**

திருமதி.ஜேசுதாசன் விக்ரோறியா என்பவருக்கு முகவரியிடப்பட்டுள்ள அக்கடிதத்தில் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திற்குட்பட்ட கூழாவடி பிரதேசத்தில்அமைந்துள்ள காணியை கையகப்படுத்தல் தொடர்பான நடவடிக்கைகள் தற்போது நடைபெற்று வருகின்றது.

இக்காணிக்குரியநட்டஈட்டுபணம் தொடர்பாக பிரதேச சபையினால் காணி யாருக்குரியது என்பது விசாரணைகள் மூலம் அறியப்பட்ட பின்னரே தீர்மானிக்கப்படும்.

மேலும் இலங்கை பாதுகாப்பு படைவீரர்களால் இக்காணிகளுக்குரிய வாடகைப் பணமானது இக்காணிகள் கையப்படுத்தப்படும் வரை செலுத்தப்படும் என்பதனையும் தங்களுக்கு அறியத்தருகின்றோம்.

தயவு செய்து மேலே குறிப்பிடப்பட்டுள்ள விலாசத்திற்கு தங்களுடைய காணி தொடர்பான ஆவணங்களை ஒப்படைத்து தங்களுடைய காணியினுடைய உரிமத்தை உறுதிப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

## கல்லுண்டாயில் கழிவகற்ற தனியாரிடம் உதவி கோரல்

கல்லுண்டாய் வெளி கழிவகற்றல் நடவடிக்கைக்கு மேலதிகமாக தேவைப்படும் 5 உழவு இயந்திரங்களையும் 15 தொழிலாளர்களையும் தனியாரிடம் இருந்து பெற்றுக் கொள்ளவுள்ளதாக யாழ். மாநகர சபை ஆணையாளர் செ. பிரணவநாதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ். மாநகர சபையின் கழிவகற்றல் செயற்பாடானது நாளாந்தம் 90 தொன் கழிவுகளை அகற்ற வேண்டிய நிலையில் உள்ளது. தற்போது குப்பைகளின் தேக்கம் அதிகரித்து வருவதால் அவற்றை உடனடியாக அகற்ற வேண்டிய தேவை காணப்படுகின்றது.

மாநகர சபையின் வாகனங்கள் பழுதடையும் சந்தர்ப்பத்தில் அவற்றை நிறுத்துவதில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடைமுறைகளை பின்பற்றி திருத்த வேலைகளை மேற்கொள்ளும் போது காலதாமதம் ஏற்படுகின்றது. ஆனால் பொது மக்களால் தரம் பிரித்து வழங்கப்படுகின்ற கழிவுகள் நாளாந்தம் அகற்றுவது அவசியம் ஆகும்.

மாநகர சபைக்குட்பட்ட 47 கிராம சேவையாளர் பிரிவுகளிலும் உள்ள தரம் பிரிக்கப்பட்ட திண்மக் கழிவுகளை உரியமுறையில் உரிய காலப் பகுதியில் அகற்றுவதற்கு நாளாந்தம் 20 உழவு இயந்திரங்கள் தேவைப்படுகின்றது.ஆனால் சபையில் 15 உழவு இயந்திரங்கள் தான் பாவனையில் உள்ளது.

எனவே மேலதிகமாக தேவைப்படும் உழவு இயந்திரங்களையும் அவற்றில் கழிவுகளை ஏற்றுவதற்கு தேவையான 15 தொழிலாளர்களையும் தனியாரிடம் கட்டண அடிப்படையில் பெற்று தனியார் பங்களிப்புடன்எமது சபையும் இணைந்து கழிவகற்றல் செயற்பாட்டை மேற்கொள்ளவுள்ளோம்.

தனியாரிடம் இருந்து மேலதிகமாக தேவைப்படும் 5 வாகனங்களுக்கும் 15 தொழிலாளர்களுக்கும் நாளாந்தம் சராசரியாக 50 ஆயிரம் ரூபாவும் மாதாந்தம் 1.5 மில்லியன் ரூபா செலவில் இத் திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## திருஞானசம்பந்தர் குருபூசை நிகழ்வு

யாழ்.ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய இந்து மாமன்றத்தின் ஏற்பாட்டில் திருஞான சம்பந்தர் குருபூசை இன்று காலை 7.30 மணியளவில் வித்தியாலய பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விசேட பூசை ஆராதனையைத் தொடர்ந்து நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. (இ-3)

• • • • • • • • • • • • • • •


யாழ்.அளவெட்டி தெற்கு றோ.க.த.க பாடசாலையின் இந்து மன்றத்தின் தலைவர் திருமதி த.கற்பகராணி தலைமையில் திருஞான சம்பந்தர் குருபூசை இன்று காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ்.கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலய ஆசிரியர் தி.சாந்தகுமாரின் சிறப்புரை இடம்பெறவுள்ளது. (இ-3)




## வைகாசி விசாக பொங்கல் விழா

தெல்லிப்பழை சித்தியம்புளியடி அருள்மிகு அண்ணமார்தேவஸ்தான வைகாசிவிசாகப் பொங்கல்விழா எதிர்வரும் 6ஆம் திகதி சனிக் கிழமை அதிகாலை 5 மணிக்கு விசேட அபிஷேகப் பூசையுடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.காலை 6 மணிக்கு வளந்துப் பானை வைக்கும் பூசையும் பொங் கலும் காலை 8 மணிக்கு பாரம் பரிய முறைப்படி மடைபரவி விசேட பூசையும் வழிவெட்டல் நிகழ்வும் நடைபெறும். எதிர்வரும் 12ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு எட்டாம் மடைப்பூசையும் இடம்பெறும். (இ-3)

மக்கள் வங்கியின் தலைவர் ஹேமசிறி பெர்னாண்டோ வங்கியின் கொடிகாம கிளையினை கடந்த திங்கட்கிழமை நாடாவெட்டி திறந்து வைப்பதையும் அருகில் முகாமையாளர் நிற்பதையும் பாடசாலை அதிபர் மாணவர் ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- சாவகச்சேரி செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸ் இராச்சியமொன்றை ஐ.தே.கட்சி உருவாக்கமுயற்சி

ஐக்கிய தேசியக் கட்சி பொலிஸ் இராச்சியமொன்றை உருவாக்க முயற்சிப்பதாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் விதுர விக்ரம நாயக்க தெரிவித்துள்ளார்.


அரசியல் அமைப்புச் சபை மற்றும் பொலிஸ் ஆணைக்குழு நிறுவப்படுவதற்கு முன்னதாக கட்சிக்கு சார்பானவர்களை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளாக நியமிக்கும் முயற்சிகளில் ஐக்கிய தேசியக் கட்சி ஈடுபட்டுள்ளது.

இது பொலிஸ் இராச்சியமொன்றை அமைப்பதற்கான முதல் கட்ட நடவடிக்கையாக கருதப்பட வேண்டும்.

இதற்கு முன்னதாக சில பொலிஸ் அதிகாரிகளின் இடமாற்றங்களை ஜனாதிபதி தடுத்து நிறுத்தியிருந்தார்.

எனினும், இந்த பொலிஸ் அதிகாரிகளை புதிய அரசாங்கம் கட்டம் கட்டமாக இடமாற்றம் செய்து வருகின்றது.

பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான இடமாற்றங்கள் ஜனாதிபதியின் செயலாளர், உள்விவகார அமைச்சின் செயலாளர் மற்றும் பொலிஸ்மா அதிபர் ஆகியோரினால் உருவாக்கப்பட்ட கமிட்டியினால் மேற்கொள்ளப்பட வேண்டுமென விதுர விக்ரம நாயக்க சிங்கள பத்திரிகையொன்றுக்குத் தெரிவித்துள்ளார். (இ-5)




## இலங்கையில் சட்டம், நீதித்துறை உள்ளிட்ட

# நல்லாட்சியினை வலுப்படுத்த அமெரிக்கா பூரண ஒத்துழைப்பு

(கொழும்பு)

**இலங்கையில் வலுவான ஆட்சியை ஏற்படுத்த அமெரிக்கா பூரண ஒத்துழைப்பு வழங்கத் திட்டமிட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. விசேடமாக இலங்கையின் சட்டம் மற்றும் பொருளாதாரத் துறையை வலுப்படுத்த அமெரிக்கா உதவி புரியும் என அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான பிரதி உதவிச் செயலாளர் ரிச்சாட் ஈ.ஹோக்லன்ட் தெரிவித்துள்ளார்.**



ஜனநாயகத் தேர்தல் மாற்றம் இலங்கை மற்றும் அமெரிக்கா இடையேயான உறவை மேலும் வலுப்படுத்தியுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

பிரிவினை அரசியல் மற்றும் போலி முதலாளித்துவத்தில் இருந்து இலங்கையை மாற்றி நல்லிணக்கம் மற்றும் அபிவிருத்தி குறித்து கவனம் செலுத்தியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் இந்த புதிய பாதை நோக்கத்திற்கு ஒத்துழைப்பு வழங்க அமெரிக்கா தீர்மானித்துள்ளதாகவும் சட்டம், பொருளாதாரம் உள்ளிட்ட ஆட்சித் துறையை வலுப்படுத்த உதவி அளிக்கும் என்றும் ரிச்சாட் ஈ.ஹோக்லன்ட் கூறியுள்ளார்.

புதிய மாற்றமானது இலங்கை மக்களுக்கு கிடைத்த வரம் என்றும் அமெரிக்க நலன் என்றும் அதனால் இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து நல்லாட்சியை வலுப்படுத்தி மனித உரிமைக்கு மதிப்பளித்து இந்திய கடலில் பாதுகாப்பை பலப்படுத்தும் வகையில் இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்க அமெரிக்கா தீர்மானித்துள்ளதாக வோஷிங்டன் சர்வதேச வர்த்தக மாநாட்டில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# பிரதமருக்கு எதிரான பிரேரணையில் ஒப்பமிட சு.க.அமைச்சர்கள் தயக்கம்

பிரதமர் ரணில் விக்கிர சிங்கவுக்கு எதிராக ஐ.ம.சு.மு. கொண்டு வரவுள்ள நம்பிக்கையில்லா பிரேரணையில் அரசாங்கத்திலுள்ள சுதந்திரக்கட்சி அமைச்சர்கள் பலர் கையொப்பமிடமாட்டார்களெனத் தெரியவருகிறது.

இது குறித்து கருத்துத் தெரிவித்த அமைச்சர் மஹிந்த சமரசிங்க, தான் அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையில் கையெழுத்திடவில்லை எனவும் பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையிலும் கைச்சாத்திடப் போவதில்லை எனவும் தெரிவித்தார்.

பிரதமருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றை கொண்டு வருவதாக ஐ.ம.சு.மு. கூட்டுக்கட்சித் தலைவர்கள் சிலரும் சுதந்திரக்கட்சி எம்.பிக்கள் சிலரும் இருவாரங்களுக்கு முன்னர் அறிவித்திருந்தனர்.

பெரும்பான்மை எம்.பிக்களின் கையொப்பத்துடன் பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை 9 ஆம் திகதி சபாநாயகரிடம் கையளிப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

இருந்த போதும் இதுவரை சுமார் 80 பேர் இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையில் கையொப்பமிட்டிருப்பதாக பந்துல குணவர்தன எம்.பி. தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மத்திய குழுவிலோ ஐ.ம.சு.மு. நிறைவேற்றுக் குழுவிலோ தீர்மானிக்கப்படாத நம்பிக்கையில்லாப் பிரேரணையில் கையெழுத்திட முடியாது என சுதந்திரக்கட்சி அமைச்சர்கள் சிலர் தெரிவித்துள்ளதாக அறியவருகிறது.

இதேவேளை, பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையில் சுதந்திரக் கட்சி எம்.பிக்களை கையெழுத்திட வேண்டாம் என ஜனாதிபதி கோரியுள்ளதாகவும் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

20ஆவது திருத்தத்தை நிறைவேற்ற வேண்டுமானால் நம்பிக்கையில்லாப் பிரேரணையை கைவிடுமாறு ஐ.ம.சு.மு. தலைவர்களிடமும் ஜனாதிபதி கோரியிருந்தார்.

பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையில் எதிர்க்கட்சித் தலைவர் நிமால் சிறிபால டி சில்வாவும் இதுவரை கையெழுத்திடவில்லை என கட்சி வட்டாரங்கள் கூறின.

ஆனால் ஜனாதிபதியின் அறிவிப்பையும் மீறி பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையில் கையெழுத்திட எதிர்க்கட்சித் தலைவர் முன்வந்திருப்பதாக விமல் வீரவன்ச எம்.பி. தெரிவித்தார்.

இதன்படி ஏனைய சுதந்திரக் கட்சி எம்.பிக்களும் இதில் கைச்சாத்திடுவர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை குறித்து வினவியதற்கு பதிலளித்த அமைச்சர் மஹிந்த சமரசிங்க,

சுதந்திரக்கட்சி எடுத்த முடிவின் பிரகாரமே நாம் அமைச்சுப் பதவிகளை ஏற்றோம். அரசாங்கத்திலிருந்து கொண்டு பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையில் கையெழுத்திட முடியாது.

அமைச்சர் ரவி கருணாநாயக்க, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரும் முடிவு சுதந்திரக் கட்சி மத்திய குழுவில் எடுக்கப்பட்டதல்ல.

ஐ.ம.சு.மு. கூட்டுக் கட்சிகள் சிலவும் சுதந்திரக் கட்சி எம்.பிக்கள் சிலரும் இணைந்தே இதனை முன்னெடுத்து வருகின்றனர். எனவே, இதில் கையெழுத்திட முடியாது.

யாரும் என்னிடம் கையெழுத்துப்பெற வரவுமில்லை. அமைச்சு பதவியை ஏற்ற பின்னர் நாம் எதிர்க்கட்சி பாராளுமன்ற குழு உறுப்பினராக இல்லை. நான் அமைச்சராக பதவி ஏற்ற பின்னர் ஐ.ம.சு.மு. பாராளுமன்ற குழுக் கூட்டத்தில் பங்கேற்ற போது சில ஐ.ம.சு.மு. கூட்டக் கட்சி தலைவர்கள் அதற்கு ஆட்சேபனை தெரிவித்தனர்.

அதனால் நான் அந்த கூட்டங்களில் பங்கேற்பதில்லை. அவர்களின் தீர்மானங்களையும் ஏற்க முடியாது என்றார். (இ-5)

# திஸ்ஸ அத்தநாயக்கவிற்கு எதிராக மோசடி வழக்கு தொடரப்படவுள்ளது

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்கவிற்கு எதிராக மோசடி வழக்குத் தொடரப்பட உள்ளது. ஜனாதிபதி தேர்தலின் போது போலி ஆவணமொன்றைத் தயாரித்து கையொப்பமிட்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

வடக்கிலிருந்து இராணுவத்தை அகற்றிக்கொள்வதாக உறுதியளித்தது போன்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் கையொப்பங்களை போலியாக இட்டுள்ளதாக திஸ்ஸ மீது இரகசிய பொலிஸார் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இதன் அடிப்படையில் போலி ஆவணத் தயாரிப்பு அடிப்படையில் வழக்குத் தொடரப்பட உள்ளதாக கொழும்பு கோட்டை நீதவான் பிரியந்த லியனகேயிடம் இரகசிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த இரண்டு கையொப்பங்களும் போலியானவை என அரச இரசாயன பகுப்பாய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

முறைப்பாடு குறித்த வழக்கு விசாரணைகள் ஓகஸ்ட் மாதம் 5ஆம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. இதேவேளை திஸ்ஸ அத்தநாயக்க நீதிமன்றில் முன்னிலையாகியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ-5)

# ஜனாதிபதி மைத்திரியை திட்டியதோடு வாகனங்களை ஒப்படைத்த வாசுதேவ

கடந்த ஜனாதிபதி தேர்தலின் பின்னர் சுதந்திர கட்சி உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட மோட்டார் வாகனங்களில் தனக்கு கிடைத்த 2 வாகனங்களை நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார, ஜனாதிபதியிடம் மீண்டும் ஒப்படைத்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை குற்றம் சுமத்தும் வகையிலான கடிதத்துடனே வாகனத்தை ஒப்படைத்துள்ளார்.

மேலும் ஜனாதிபதி ஒரு அரசியல் கூட்டாளி அல்ல எனவும் அவர் ஒரு போட்டியாளர் எனவும் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அண்மையில் இடம்பெற்ற கூட்டணி கட்சி தலைவர்கள் சந்திப்பில் ஜனாதிபதி, முன்னாள் ஜனாதிபதிக்கு பிரதமர் வேட்புரிமை வழங்க முடியாதென தெரிவித்தமையினாலே இவ்வாறான ஒரு நிலைமை தோன்றியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த இரண்டு நாட்களுக்கு முன்னர் ஜனாதிபதியை தகாத வார்த்தைகளினால் திட்டியதோடு கட்சி தலைமை பதவியில் இருந்து விலகுமாறும் வாசுதேவ நாணயக்கார கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வடக்கு மாகாண சபையினுடைய நிர்வாகத்தின் கீழ் முன்பள்ளி ஆசிரியர்களைக் கொண்டுவரவேண்டும்

## ஜனாதிபதிக்கு சிறீதரன் எம்.பி. கடிதம் மூலம் வேண்டுகோள்

வடக்கு மாகாணத்தில் ஒரு தொகுதி முன்பள்ளி ஆசிரியர்கள் இராணுவக் கட்டமைப்பின் கீழும் இன்னொரு பகுதி குறைந்த அளவு ஊதியத்துடன் பலர் ஊதியங்களுமின்றியும் வலயக்கல்வி பணிமனை நிர்வாகத்தின் கீழும் முன்பள்ளி ஆசிரியர்களாக கடமையாற்றிவருகின்றனர்.

இந்த நிலையில் இராணுத் துணைப் படையின் கீழ் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு நியமனங்கள் வழங்குவது தொடர்பில் பா.உறுப்பினர் சி.சிறீதரன் ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார். அக்கடிதத்தில் உள்ள விடயங்கள் வருமாறு

**முன்பள்ளி ஆசிரியர்களின் நியமனம்.**

**கிளிநொச்சிமாவட்டம்.**

கிளிநொச்சி.முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களின் முன்பள்ளிஆசிரியர்களில் அரைப்பங்கினரை இராணுவத் துணைப் படையாக நியமித்து இராணுவநிர்வாகத்தின் கீழ் முன்பள்ளிகளில் கற்பிப்பதற்குகட்டாயப் படுத்துவதுதொடர்பில் 2015.01.28ஆம் திகதி கடிதம் மூலம் தங்களுக்குத் தெரியப்படுத்தியிருந்தேன். போரினால் பாதிக்கப்பட்ட எமது மாவட்டங்களின் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான நிரந்தர நியமனம் வடக்கு மாகாண கல்விநிர்வாகத்தின் கீழ் கிடைக்கும் என்ற அவாவுடன் தங்களுக்குத் தெரியப்படுத்தியிருந்தேன்.

ஆனால் கடந்த2015.05.31ஆம் திகதி தங்களால் பொலநறுவையில் வைத்து இம்மாவட்டங்களின் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு சிவில் பாதுகாப்புதிணைக்களத்தின் துணை ப்படைக் கட்டமைப்பின் கீழ் நிரந்தர நியம னங்களுக்கானகடிதங்கள் வழங்கப் பட்டிருப்பது கவலையையும் அதிர்ச்சியையும் அளித்துள்ளது .தங்களது நல்லாட்சி அரசாங்கத்தில் நீங்கள் முன்னெடுத்துள்ள பல அணுகுமுறைகள் எமதுமக்கள் மத்தியில் தங்கள் மேல் நம்பிக்கையையும், எதிர்பார்ப்பையும் ஏற்படுத்தியுள்ளநிலையில் இலங்கையில் எந்தமாவட்டத்திலும் இல்லாத ஒரு புதிய அணுகுமுறை கிளிநொச்சி,முல்லைத்தீவு,வவுனியா ஆகிய மாவட்டங்களில் மட்டும் எமது சின்னஞ்சிறு பாலர்களுக்கு கற்பிக்கின்ற முன்பள்ளிஆசிரியர்களுக்கு இராணுவத் திணைக்களத்தின் கீழ் நியமனம் வழங்கு வது கடந்த அரசாங்கத்தின் இராணுவச் சர்வாதிகாரப்போக்கை மாற்றம் இன்றி அடையாளப்படுத்துவதுபோல் தமிழ் மக்கள் உணருகிறார்கள்.

உளவியல் ரீதியாக பாலர்கள் இயற்கையான சூழலில் மகிழ்ச்சியான கற்பித்தலைப் பெறவேண்டும்.

இவர்கள் இராணுவச் சூழலுக்கு கொண்டுவரப்படுதல் ஆபத்தானது என்பதைத் தாங்கள் அறிவீர்கள். முன்பள்ளி நிர்வாகம் என்பது வடக்குமாகாணசபைக்கு பகிரப்பட்ட அதிகாரத்தின் கீழ் உள்ள நிலையில் இராணுவப்பிடியில் முன்பள்ளிகளை நடத்துதல் கல்வி உளவியல் ரீதியாக மிக ஆபத்தானதாகும். அத்தோடு வடக்கு மாகாணத்தின் அதிகார, நிர்வாக நடவடிக்கைகளையும் இந்நியமனம் கேள்விக்கு உட்படுத்தியுள்ளது.

எனவே பல்கலைக்கழக மாணவர்களுக்கு வழங்கிய இராணுவப் பயிற்சியை நிறுத்தியமை, அதிபர்களுக்கு வழங்கிய இராணுவப் பதவிகளை மீளப்பெற்றமை, தங்களை உச்சமான ஜனநாயகத் தலைவராக காட்டியதுபோல், இம்முன்பள்ளி ஆசிரியர்கள் அனைவருக்கும் இதேசம்பளத்துடன் வடக்குமாகாண கல்வி நிர்வாக மேற்பார்வையின் அதிகாரத்தின் கீழ் நியமனம் கிடைக்க வேண்டுமென அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (2)






சர்வதேச புகைத்தல், மது எதிர்ப்பு வாரத்தையொட்டி ‘என்றும் போதையற்ற ஒழுக்கம் நாட்டிற்கு தேவை’ எனும் தொனிப்பொருளில் கிளிநொச்சி விவேகானந்தா நகரில் வாழ்வின் எழுச்சி உத்தியோகத்தர்களின் ஏற்பாட்டில் கொடிவாரம் அனுஷ்டிக்கப்பட்டதைப் படத்தில் காணலாம். (படங்கள்:- கிளிநொச்சி-1 செய்தியாளர்)

# கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் பெண் பொலிஸார் பற்றாக்குறை

## முறைப்பாடுகளை பதிவு செய்வதில் நெருக்கடி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் பெண் பொலிஸார் அதிலும் குறிப்பாக தமிழ் பெண் பொலிஸார் பற்றாக்குறையாகவுள்ளதாக கிளிநொச்சி பொலிஸ் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதனால் பெண்கள் தொடர்பான முறைப்பாடுகளை பதிவு செய்வதில் பொலிஸார் நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றனர்.

கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் 1 தமிழ் பெண் பொலிஸாரும் இரண்டு சிங்கள பெண் பொலிஸாரும் கடமையில் உள்ளனர். கிளிநொச்சியில் தற்போது குடும்ப வன்முறைகள் மற்றும் பெண்கள் தொடர்பான பிரச்சினைகள் அதிகமாகக் காணப்படுவதால் அது தொடர்பில் பெண்களால் முறைப்பாடு செய்ய முடியவில்லை.

ஆண் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்வதற்கு பெண்கள் வெட்கப்படுவதுடன், பிரச்சினை தொடர்பில் முழுமையான விடயங்களைத் தெரிவிப்பது இல்லை. இதனால் முழுமையான விசாரணைகள் மேற்கொள்ள முடியாமல் பொலிஸார் இருக்கின்றனர்.

அத்துடன், முறைப்பாடு செய்ய வருபவர்கள் மிகவும் நீண்ட நேரம் காத்திருந்த பின்னரே முறைப்பாட்டை பதிவு செய்ய வேண்டியுள்ளதாக பொலிஸ் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (2)

## திருஞானசம்பந்தர் குருபூஜை



(கிளிநொச்சி-1)


சைவ சமய முதற்குறவர் திருஞான சம்பந்தர் குருபூஜை நிகழ்வு இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.30மணியளவில் கிளிநொச்சி திருநெறிக்கழக வளாகத்தில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கான ஆசியுரையினை தவத்திரு கணேசானந்த மகாதேவ சுவாமிகள் ஆற்றவுள்ளார்.

சிறப்புரைகளை கிளி/ஊற்றுப்புலம் அ.த.க. பாடசாலை அதிபர் ம.உமாசங்கர், ஓய்வுநிலை சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் திருமதி.செ. சோமசேகரப்பிள்ளை, யாழ்ப்பாணம் சிம்மயமிஷன் சிவானந்த சைத்தன்யா சுவாமி ஆகியோர் நிகழ்த் தவுள்ளனர்.

கிளிநொச்சி திருநெறிக்கழகத்தின் தலைவர் வே.மகாலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் அடியார்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கிளி.திருநெறிக்கழகத்தினர் கேட்டுள்ளனர். (2-277)

# மன்னார் ஆயரின் உடல்நிலையில் முன்னேற்றம்; தொடர்ந்தும் வைத்தியசாலையில் சிகிச்சை



மன்னார் ஆயர், மேதகு இரா. யோசேப்பு ஆண்டகைக்கு தற்போது அளிக்கப்பட்டு வரும் இயன் மருத்துவம் மூலமாக அவருடைய உடல் நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டு வருவதாகவும் இவற்றுடன் இரத்த அழுத்தம், நீரழிவு, ஆஸ்துமா போன்ற வைகளும் கண்காணிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகவும் மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை ஏ.விக்டர் சோசை அடிகளார் தெரிவித்து ள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையொன்றிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு.

உடல் நிலை [illegible] மத்தியில் இருந்து அக்கறையும் கரிசனையும் தெரிவிக்கப்பட்டு வரும் நிலையில், கொழும்பு தேசிய வைத்தியசாலையின் நரம்பியல் சத்திரசிகிச்சை நிபுணர் வைத்திய. கலாநிதி எச். கே. டீ. எஸ். குலரெட்னத்தனின் தகவலை அடிப்படையாகக் கொண்டே இந்த அறிக்கை விடுக்கப்பட்டுள்ளது.


கடந்த மே மாதம் 2ஆம் திகதி, மூளையில் ஏற்பட்ட இரத்தக்கசிவு காரணமாக கொழும்பு தேசிய வைத்தியசாலையின், நரம்பியல் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த ஆயர், துரதிர்ஷ்டவசமாக மே மாதம் 17ஆம் திகதி பக்கவாதத்தினாலும் பாதிக்கப்பட்டார்.

இதனால், அவருடைய வலது கை மற்றும் வலது கால் பாதிப்படைந்துள்ளன. இந்நிலையில் ஆயர், தொடர்ந்தும் வைத்தியசாலையில் இருந்து மருத்துவ சிகிச்சை பெற வேண்டிய நிலையில் உள்ளார் என்று அவ்அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆயரின் உடல்நிலையில் அக்கறையுள்ள அனைவருடைய பிரார்த்தனைக்காகவும் நன்றி தெரிவிக்கின்ற அதேவேளையில், அவருடைய உடல்நலம் முன்னேறுவதற்கு தொடர்ந்தும் பிரார்த்திக்குமாறு கேட்டுக் கொள்கிறோம் என்றும் கோரப்பட்டுள்ளது.

நாளை வெள்ளிக்கிழமை ஆயருக்கான [illegible] தினமாக அனுஷ்டி[illegible] அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (2)

# விசேட கண்காட்சிக் கூடாரம்



(முல்லைத்தீவு)

பொசன் தினத்தை முன்னிட்டு முல்லைத்தீவு மாவட்ட இராணுவத் தலைமையகத்தின் ஏற்பாட்டில் விஷேட கண்காட்சிக் கூடாரமொன்று நேற்று முன்தினம் மாஞ்சோலையில் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது.

அதில், புத்தரின் பிறப்பு, அவரின் ஞானோதயம், பரிநிர்வாணம் ஆகிய மூன்று ஞானங்கள் காணப்பட்டன.

மிகிந்தலை காட்சி, நலபான ஜாதகய, பாதுகாப்பான பயணம், பட்டாசாறாவின் வாழ்க்கை வரலாறு, சுல்ல பதுமவின் ஜாதகக் கதை என்பவற்றை சித்திரிக்கும் காட்சிகளும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாறிவரும் கலாசார விழுமியங்களை பாதுகாக்கும் பொறுப்பு எமக்குரியதே

## வைத்திய கலாநிதி சிவமோகன் தெரிவிப்பு





(குருமன்காடு)

மாறிவரும் பேரினவாத அரசுகள் சொல்லில் அடங்காத அடக்குமுறைகளை தமிழர் தேசமெங்கும் கட்டவிழ்த்து விட்டுள்ளது. எமது இளைஞர்களை மதுபோதைக்கும் ஏனைய துர்நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கும் மறைமுகமாக தூண்டுகிறார்கள் என வடக்கு மாகாணசபை உறுப்பினர் வைத்திய கலாநிதி சி.சிவமோகன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண கல்வித்திணைக்களத்தின் அனுசரணையுடன் பௌர்ணமி கலை விழா நேற்றுமுன்தினம் மு/பாண்டியன் குளம் மகாவித்தியாலயத்தில் துணுக்காய் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி மாலினி வெனிற்றன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த அவர்,

எமது கலாசார விழுமியங்களை நாம் பாதுகாத்து அடுத்த சந்ததிக்கு அதை எடுத்துச் செல்லும் பொறுப்பு எமக்குரியது.

இன்று மாறி வரும் பேரினவாத அரசுகள் சொல்லில் அடங்காத அடக்கு முறைகளை எமது தமிழர் தேசத்தின்மேல் கட்டவிழ்த்து விட்டுள்ளது. எமது இளைஞர்களை மதுபோதைக்கும் ஏனைய துர்நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கும் மறைமுகமாக தூண்டுகிறார்கள் என வெளிப்படையாக குற்றம் சாட்ட முடியும். இன்றும்கூட மது வியாபாரத்தில் துணை இராணுவ அணியினர் வெளிப்படையாக ஈடுபட்டு வருகின்றனர்.

கரைதுறைப்பற்று பிரதேசத்திற்கு அதிகாரம் அளிக்கப்பட்ட மது விற்பனை நிலையங்கள் இல்லாததை சாட்டாக வைத்து கிராமங்கள் தோறும் இளைஞர்களுக்கு வயது வேறுபாடு இன்றி வழங்குகிறார்கள். இது ஒரு சமுதாய சீர்கேடு நடவடிக்கையாகும்.

முன்னர் ஒரு தடவை கேப்பாப்பிலவு கிராமத்தில் விளையாட்டு போட்டி நடத்திய ராணுவத்தினர் வெற்றிபெற்ற எமது இளைஞர்களுக்கு பியர் கான்களை பெட்டி பெட்டியாக வழங்கினர்.

எனவே எமது சமுதாயத்தின் தவறான நடவடிக்கைகளுக்கும் கலாசார சீர்கேடுகளுக்குமான காரணிகளாக துணை ராணுவ அணிகளே இருக்கின்றன. இன்று பல பத்தாயிரம் சிவில் பாதுகாப்பு பிரிவைச் சேர்ந்த இளைஞர்களுக்கு நிரந்தர நியமனத்தை வழங்கியது இந்த நல்லாட்சி அரசு.


நாம் கூறுகிறோம். இவர்கள் யாரும் எமது சமுதாயத்தினுள் வேண்டாம். இவர்கள் வெளியேற்றப்பட வேண்டியவர்கள். ஒழுக்கமுள்ள நீதி நியாயம் உள்ள பொலிசாரை தவிர இராணுவ தலையீடு எதுவும் எமது சமுதாயத்திற்கு தேவையற்றது..

இன்று நாம் கலாசார விழுமியங்களை பாதுகாத்து வழங்கவேண்டிய தேவைகள் உள்ளது. அதனடிப்படையில் வடமாகாண சபை மேற்படி பௌர்ணமி விழாவை நடத்த ஊக்கமளித்துள்ளது. இந்நிகழ்வினது வெற்றி எமது மக்கள் கலாசார விழுமியங்கள் மேல் எவ்வளவு பற்று வைத்திருக்கிறார்கள் என்பதற்கு சான்றாக அமைகிறது என்றார்.

மேற்படி விழாவில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் வைத்திய கலாநிதி சி. சிவமோகன்,மாகாண கல்விப் பணிப்பாளர் செ. உதயகுமார், மாகாண உதவிக் கல்விப் பணிப்பாளர் (அழகியல்), பிரதிக் கல்விப் பணிப்பாளர் (கல்வி அபிவிருத்தி) மற்றும் பிரதேச கலைஞர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர். (2-250)

# காடாகக் காணப்படுகின்ற காணிகளை பொதுத்தேவைக்கு பயன்படுத்த வேண்டும்

## வடக்கு மாகாணசபை உறுப்பினர் வை.தவநாதன் தெரிவிப்பு



பராமரிப்பின்றி காடாகிக்கிடக்கும் காணிகள் பாவனைக்கு கொண்டுவரப்பட வேண்டும்.இதுவே சமூக சீர்கேட்டு சக்திகளுக்கு வாய்ப்பாக அமைகின்றன.இதனால் வித்தியாவின் கொலை மட்டுமல்ல அதுபோன்று மேலும் பல சம்பவங்கள் ஏற்படுவதற்கும் வாய்ப்புக்கள் உள்ளன என வடக்குமாகாண சபை உறுப்பினர் வை.தவநாதன் தெரிவித்துள்ளார்.

உருத்திரபுரம் கிழக்கு பொது நோக்கு மண்டபத்தினை அண்மையில் திறந்து வைத்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்

இன்று நாடளாவிய ரீதியில் புங்குடுதீவில் கூட்டு வன்புணர்வின் பின்கொலை செய்யப்பட்ட மாணவி வித்தியாவின் கொலை தொடர்பாக பேசப்படுகின்றது.அதற்கு நீதி வேண்டி போராட்டங்களும் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்நிலையில் எமது பிரதேசங்களில் காணப்படும் இவ்வாறான சமூக சீர்கேட்டு சக்திகளுக்கு சாதகமாகத் தென்படுகின்ற புறச்சூழலையும் மாற்றி அமைக்க வேண்டியது அவசியமாகின்றது. அதாவது அந்த சம்பவத்திற்கு ஏதுவான காரணியாக அமைந்திருந்தது கைவிடப்பட்ட காணி அதில் வளர்ந்திருந்த காடுகள்.

இவ்வாறு தமிழர் பிரதேசங்களில் பல கைவிடப்பட்ட காணிகள் தென்படுகினறன. அவற்றில் பலவற்றின் உரிமையாளர்கள் நாட்டைவிட்டு வெளியேறியுள்ளனர். சிலர் உள்ளூரில் வாழ்கின்றபோதும் காணிகளை பராமரிப்பதில்லை. இதனால் வித்தியாவின் கொலை மட்டுமல்ல அதுபோன்று மேலும் பல சம்பவங்கள் ஏற்படுவதற்கும்வாய்ப்புக்கள்உள்ளன. இவ்வாறான நிலபுலன்களின் உரிமையாளர்கள் வெளிநாடுகளில் வாழ்கின்றபோதும் இங்குள்ள சொத்துக்களை பயன்படுத்துவதற்கு இங்குள்ளவர்களை அனுமதிப்பதில்லை.இதனால் இந்த மண்ணில் பற்றுக்கொண்டு அல்லது வேறு இடங்களுக்கு போவதற்கான வசதியின்றி சொந்தமண்ணிலேயே வாழ்பவர்களுக்கு இவை இடையூறாக அமைகின்றன. எனவே அவற்றை சீர்படுத்துவதற்கு உரியவர்கள் பொறுப்பெடுக்க வேண்டும்.

அரசியல்பிரதிநிதிகள்,சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் சமூக அக்கறை கொண்டவர்கள், மதகுருக்கள் என அனைவரும் எமது சமூகத்தை சீர்படுத்துகின்ற முக்கியபொறுப்பை ஏற்கவேண்டும்.

ஏனெனில் எமது பிரதேசங்களில் காணப்படுகின்ற சமூக சீர்கேட்டுச் சம்பவங்களுக்கு ஏதுவான காரணிகளை இனம் கண்டு அதற்கு சரியான தீர்வை காண்பதற்கு சட்டத்தினால் எந்த நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடியாது. ஏனெனில் பராமரிக்கப்படாது தரிசாக கிடக்கின்ற காணிகளில் பெரும்பாலானவை உறுதிக்காணிகளாக காணப்படுகின்றன.

எனவே அவற்றை சுவீகரிக்க முடியாது. இதேவேளை எத்தனையோ கிராமங்களில் பொதுக்காணிகள் இன்றி கிராமங்களின் பொதுத்தேவைகள் முடங்கிக் கிடக்கின்றன எனவே இவ்வாறு பயன்பாடற்று கிடக்கும் நிலங்களை பொதுத்தேவைக்கு பயன்படுத்துவதற்கு அதன் உரிமையாளர்கள் மனமுவர்ந்து வழங்கினால் கிராமங்களும் மேம்படும் சமூகப்பிரச்சினைகளுக்கும் தீர்வும் கிட்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.(2)

# வயல் நிலங்களுக்கு பயன்படுகின்ற நீர் வீதியை ஊடறுத்து வீண்விரயமாகின்றது



(கிளிநொச்சி)

கிளிநொச்சி, அக்கராயன் குளத்தின் நீர் சிறுபோக செய்கையின் தேவைக்காக தற்போது திறந்துவிடப்பட்டுள்ள நிலையில் இடதுகரை வாய்க்கால் ஊடாக வயல் நிலங்களுக்குச் செல்லும் நீர் அக்கராயன் அணைக்கட்டு வீதியில் ஓரிடத்தில் வீதியை குறுக்கறுத்துப் பாய்வதன் காரணமாக குளத்தின் நீர் அக்கராயன் ஆற்றினைச் சென்றடைந்து வீண்விரயமாகிக் கொண்டிருக்கின்றது.

அக்கராயன்குளத்தின் கீழ் இவ்வாண்டு 2500 ஏக்கரில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டது. குளத்தின் நீர் நெற்பயிர்களுக்கு நீர்ப்பாசனம் செய்யப்படுகின்றது.

அக்கராயன் அணைக்கட்டு வீதியில் அந்தோனியார் ஆலயத்துக்கு முன்பாக வீதியின் குறுக்கறுத்து வாய்க்காலில் செல்லும் நீர் வீணாகப் பாய்வதன் காரணமாக நீர் விரயமாகின்றது.

இப்பகுதியிலுள்ள கமக்காரர் அமைப்புகள் இது தொடர்பாக கவனம் செலுத்தாமை நீர் விரயத்துக்கான முக்கிய காரணமாகவுள்ளது.

சிறுபோக நெற்செய்கை கூட்டத்தில் குளத்தின் நீரை சிக்கனமாக பயன்படுத்த வேண்டுமென்பது கிளிநொச்சி நீர்ப்பாசனத் திணைக்களத்தின் முக்கிய வேண்டுகோளாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. (2)




# முதியோர் பேரவையின் புதிய நிர்வாகிகள் தெரிவு

கிளிநொச்சி மாவட்ட முதியோர் பேரவையின் புதிய நிர்வாகிகள் தெரிவு நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெறவுள்ளது.

சமூக சேவைகள் அமைச்சின் முதியோர்களுக்கான தேசிய செயலகப் பணியகத்தின் உயர் அதிகாரிகளினதும், மாவட்ட செயலக உயர் அதிகாரிகளினதும் பங்களிப்புடன் இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது.

மாவட்ட முதியோர் பேரவையின் புதிய நிர்வாகக் குழுவினரைத் தெரியும் நிகழ்வில் பிரதேச மட்ட முதியோர் சங்கங்களின் தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோரை கலந்து கொள்ளுமாறு பிரதேச செயலர்கள் கேட்டுக் கொள்கின்றனர்.

அந்த வகையில் 4 பிரதேச செயலகப் பிரிவுகளிலிருந்தும் பிரதிநிதிகள் கலந்து கொள்ளவுள்ளனர். (2-254)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

1157



## ஆலைத் தொழிலாளியும் பூனை உலகமும்

...இப்போது குதிரைகளைப் பார்க்கலாம் எனக்கூறி அழைத்துச் சென்றது பூனை.

அங்கே 12 அற்புதமான குதிரைகள் இருந்தன. அவற்றின் மீதிருந்த துணிகள் தகதகவென மின்னின.

ஹன்ஸின் உள்ளம் மகிழ்ச்சியில் துள்ளியது. நீ வீடு திரும்பும் நேரம் வந்துவிட்டது.

ஆனால் இப் போது குதிரையைக் கொடுக்க மாட்டேன். மூன்று நாட்களில் நானே உன்னைத்தேடி வருகிறேன் என்றது பூனை.

பிறகு, வெளியில் வந்து ஆலைக்கு வழிகாட்டியது. ஹன்ஸ் ஆலைக்குச் சென்றான். பூனை அவனுக்கு புதிய உடைகள் ஏதும் கொடுக்கவில்லை என்பதால் பல ஆண்டுகளாக அவன் ஒரே ஆடையைத் தான் அணிந்திருந்தான்.

அவை கிழிந்திருந்தன. அவன் வீட்டை அடைந்தபோது அவனது சகாக்கள் இருந்தனர். அவர்கள் ஒவ்வொருவரும் தங்களுடன் ஒரு குதிரையைக்கொண்டு வந்திருந்தனர். ஆனால், ஒரு குதிரைக்குக் கண் தெரியாது. மற்றொருவனுடையது முடமான குதிரை.

வந்து விட்டாயா? எங்கே உன்னுடைய குதிரை? என்று கேட்டனர்.

மூன்று நாட்களில் வரும் என்றான் ஹன்ஸ்.

இருவரும் சிரித்தார்கள். உனக்கெல்லாம் எங்கே குதிரை கிடைக்கப் போகிறது? எங்களுக்குக் கிடைத்ததே இந்த லட்சணத்தில் இருக்கு என்றனர்.

மூன்று பேரும் முதலாளியின் வீட்டுக்குப் போனார்கள். எழுந்து உட்காருமளவுக்கு உடம்பில் பலம் இல்லாமல், மோசமான நிலையில் இருந்தார் முதலாளி.

யாரைப் பார்த்தாலும் எரிந்து விழுந்தார். அதனால் அவர்கள் வெளியே வந்துவிட்டார்கள். ஹன்ஸுக்குச் சாப்பாடு கொடுத்தாலும் இரவில் படுப்பதற்குப் படுக்கை கொடுக்க இரண்டு பேரும் மறுத்து விட்டனர்.

அதனால் ஹன்ஸ் வாத்துகளை அடைக்கும்கொட்டகையில்படுத்தான்.

பூனையிடம் கடுமையாக வேலை செய்த அசதியில் அவன் தூங்கி எழுந்த போது மூன்று நாட்கள் முடிந்திருந்தன.

பதறி எழுந்த ஹன்ஸ், ஆலையை நோக்கி ஓடிவந்தான். அப்போது ஆறு குதிரைகள் பூட்டப்பட்ட ஒரு கோச் வண்டி ஆலைக்கு அருகில் வந்து நின்றது.

அந்தக் குதிரைகள் சூரிய ஒளியில் தகதகத்தன. பிறகு ஏழாவதாக ஒரு குதிரையை ஒரு பணியாளன் ஓட்டி வந்தான். கோச் வண்டியிலிருந்து இளவரசியைப் போல் தோற்றமுடைய அழகான பெண் இறங்கி, ஆலைக்குள் சென்றாள்.

அந்த இளவரசி வேறு யாருமல்ல. எந்தப் பூனையிடம் ஏழு ஆண்டுகள் ஹன்ஸ் வேலை பார்த்தானோ, அந்தப் பூனைதான் இளவரசியாக மாறியிருந்தாள்.

ஹன்ஸ் எங்கே என முதலாளியிடம் கேட்டாள். அவன் ரொம்பவும் அழுக்காக இருந்ததால், ஆலைக்குள் தூங்க விடவில்லை. அந்த வாத்துக் கொட்டகையில் இருக்கிறான் என்றார் முதலாளி.

உடனடியாக ஹன்ஸ் தூக்கி வரப்பட்டான். அலங்கோலமான ஆடைகளுடன் இளவரசியின் முன்பு நிற்பதற்கு அவனுக்கு வெட்கமாக இருந்தது.

உடனடியாக அவனுக்கு அற்புதமான ஆடைகள் கொண்டு வந்து கொடுக்கப்பட்டன. அவனைக் குளிப்பாட்டி, நல்ல ஆடைகளை அணிவித்தார்கள். ஹன்ஸ் ஒரு இளவரசனைப் போல் அழகாக மிளிர்ந்தான்.

பிறகு பணியாளனை அனுப்பி ஏழாவது குதிரையைக் கொண்டு வரச் சொன்னாள்.

இந்தக் குதிரை ஹன்ஸுக்கு என்றாள்.

முதலாளி, அதற்கு முன்பு அவ்வளவு அற்புதமான குதிரையைப் பார்த்ததே இல்லை. இந்த ஆலையை அவனுக்குக் கொடுத்து விடுகிறேன் என்றார்.

ஆனால் வேண்டாம் ஆலையையும் குதிரையையும் நீங்களே வைத்துக் கொள்ளலாம். உங்கள் உடல் நிலையும் முழுமையாகக் குணமடையும் என்றாள் இளவரசி.

அடுத்த நொடியே, முதலாளி நோய் நீங்கி எழுந்தார். இளவரசிக்கும் ஹன்ஸுக்கும் நன்றி சொன்னார்.

பிறகு தனக்கு இத்தனை ஆண்டு காலமாக விசுவாசமாக இருந்த ஹன்ஸின் கையைப்பிடித்து அழைத்துச்சென்று கோச் வண்டியில் ஏற்றினாள் இளவரசி. வண்டி கிளம்பியது.

ஹன்ஸ், பூனைக்காக வெள்ளித் தளவாடங்களால் கட்டிய மாளிகைக்குச் சென்றது கோச். அதற்குப்



பிறகு ஹன்ஸை அந்த இளவரசி திருமணம் செய்து கொண்டாள். இருவரும் பல ஆண்டுகள் மகிழ்ச்சியாக வாழ்ந்தார்கள்.

முற்றும்.

## 04 06.2015 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- கி.மு 780 - முதலாவது சூரிய கிரகணம் சீனாவில் பதியப்பட்டது.
- 1039 - மூன்றாம் ஹென்றி புனித உரோமப் பேரரசன் ஆனான்.
- 1584 - சேர் வால்ட்டர் ரேலி முதலாவது ஆங்கிலக் குடியேற்றத்தை வட கரோலினாவின் ரோனோக் தீவில் அமைத்தார்.
- 1707 - யாழ்ப்பாணத்தில் தேசவழமைச் சட்டம் ஒல்லாந்தரினால் அமுல்படுத்தப்பட்டது.
- 1878 - ஓட்டோமான் பேரரசு சைப்பிரசை ஐக்கிய இராச்சியத்துக்கு கொடுத்தது.
- 1917 - முதலாவது புலிட்சர் பரிசுகள் வழங்கப்பட்டன.
- 1928 - சீனக் குடியரசின் அரசுத் தலைவர் சாங் சுவோலின் ஜப்பானியக் கையாள் ஒருவனால் படுகொலை செய்யப்பட்டார்.
- 1939 - 963 யூத அகதிகளை ஏற்றிச் சென்ற கப்பல் ஐக்கிய அமெரிக்காவினால் திருப்பி அனுப்பப்பட்டது. இந்த அகதிகளில் பெரும்பாலானோர் பின்னர் ஜேர்மனியின் நாசி வதைமுகாமில் சிறைவைக்கப்பட்டுக் கொல்லப்பட்டனர்.
- 1940 - இரண்டாம் உலகப் போர்: பிரான்சின் டன்கேர்க் என்ற இடத்திலிருந்த 300,000 பிரித்தானியப் படைகள் முற்றாக விலக்கிக் கொள்ளப்பட்டனர்.
- 1943 - ஆர்ஜெண்டீனாவில் நிகழ்ந்த இராணுவப் புரட்சியில் ரமோன் கஸ்டீல்லோ பதவியிழந்தார்.
- 1970 - தொங்கா ஐக்கிய இராச்சியத்திடமிருந்து விடுதலை அடைந்தது.
- 1973 - ஏடி.எம் இயந்திரத்துக்கான காப்புரிமத்தை டொன் வெட்சல், டொம் பார்ன்ஸ், ஜோர்ஜ் சாஸ்டெயின் ஆகியோர் பெற்றனர்.
- 1987 - பூமாலை நடவடிக்கை: இலங்கையின் ஆளுகைக்குட்பட்ட வான்பரப்பில் அத்து மீறி உள்நுழைந்த இந்திய வான்படை விமானங்கள் யாழ் குடாநாட்டின் மீது உணவுப் பொதிகளை வீசியது.
- 1989 - சீனாவில் தியனன்மென் சதுக்கத்தில் இடம்பெற்ற மாணவர் போராட்டம் இராணுவத்தினரால் நசுக்கப்பட்டது. பல மாணவர்கள், பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.
- 1989 - போலந்தில் இடம்பெற்ற பொதுத்தேர்தலில் சொலிடாரிட்டி இயக்கத்தின் வெற்றி கிழக்கு ஐரோப்பாவில் கம்யூனிசத்துக்கு எதிரான புரட்சியைக் கிளறியது.
- 2001 - அரச மாளிகையில் ஜூன் 1 இல் இடம்பெற்ற படுகொலைகளை அடுத்து கயானேந்திரா நேபாளத்தின் மன்னராக முடி சூடினார்.


### பிறப்புகள்

- 1910 - கிறிஸ்தோபர் கொக்கரல், ஆங்கிலேயக் கண்டுபிடிப்பாளர் (இ. 1999)
- 1946 - எஸ். பி. பாலசுப்ரமணியம், இந்தியத் திரைப்பட இசைப் பாடகர்
- 1959 - அனில் அம்பானி, இந்தியத் தொழில் அதிபர்

### இறப்புகள்

- 1925 - வ. வே. சு. ஐயர், இந்திய விடுதலைப் போராளி (பி. 1881)
- 2001 - தீபேந்திரா, நேபாள மன்னர் (பி. 1971)

### எஸ். பி. பாலசுப்ரமணியம்



ஸ்ரீபதி பண்டிதாரத்யுல பாலசுப்ரமணியம் 1946 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 4 ஆம் திகதி பிறந்தார். இவர் ஒரு புகழ்பெற்ற இந்தியத் திரைப்பட இசைப் பாடகர் ஆவார். இவர் 1966 இல் ஒரு தெலுங்குத் திரைப்படத்தில் பாடி திரைப்படங்களில் பாடத் தொடங்கினார். 1966 முதல் பல்லாயிரக்கணக்கான பாடல்களைப் பாடியுள்ளார்.

பாடகர் மட்டுமல்லாது இவர் திரைப்பட இசை அமைப்பாளர், திரைப்படத் தயாரிப்பாளர், திரைப்பட நடிகர், திரைப்பட பின்னணிக் குரல் தருபவர் எனப் பன்முக அடையாளம் கொண்டவர். இந்திய அரசால் இவருக்கு 2001 ஆம் ஆண்டில் பத்மஸ்ரீ விருதும் 2011 ஆம் ஆண்டில் பத்மபூஷன் விருதும் அளிக்கப்பட்டது.

எம்.ஜி.ஆர்ருக்காக அடிமைப் பெண் திரைப்படத்தில் எஸ்.பி.பி. பாடிய **ஆயிரம் நிலவே வா** வெளி வந்தது. இப்பாடல் பட்டிதொட்டிகளிலெல்லாம் புகழ் பெற்று ஒலித்தது. நாற்பதாயிரம் பாடல்களைப் பாடி கின்னஸ் உலக சாதனை புத்தகத்தில் இடம் பிடித்திருப்பவர் எஸ்.பி.பி.

இவர் முறையாக கர்நாடக இசையைப் பயின்றது இல்லை என்றாலும் சங்கராபரணம் என்ற படத்தில் கர்நாடக இசையில் அமைந்த பாடலுக்காக தேசிய விருது பெற்றார். குரலில் உற்சாகம், உணர்ச்சி, பாவம் குன்றாமல் எஸ்.பி.பி. பாடிவருகிறார். எஸ்.பி.பி பாடிய பாடல்களில் இசையமைப்பாளரின் கற்பனையையும் கடந்து அற்புதமாக வெளிப்படும். மெல்லிசைக்கான அத்தனை லாவகங்களையும் குரலில் வெளிப்படுத்தக்கூடியவர் அவர். யாட்லிங் செய்வது, குரலை மென்மையாகவும் அழுத்தமாகவும் வேண்டியது போல மாற்றிப் பாடுவது, பாடும போதே சிரிப்பது, கிண்டல் தொனிக்கப்பாடுவது என்று வர்ண ஜாலங்களையும் பாட்டில் வெளிப்படுத்தக் கூடியவர் எஸ்.பி.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த்

## வாழ்க்கை வரலாறு

...என்றாலும் சென்னையில் படம் நூறு நாட்கள் ஓடியது.

**திருப்பிக் கொடுத்தார்**

தன் படத்தை வாங்கிய எவரும் நஷ்டம் அடையக்கூடாது என்று ரஜினி நினைத்தார்.

அதன்படி, 'பாபா' படம் வாங்கி நஷ்டம் அடைந்த விநியோகஸ்தர்கள், தியேட்டர் அதிபர்கள் அனைவருக்கும் கோடிக்கணக்கான பணம் திருப்பி கொடுக்கப்பட்டுவிட்டது.

இந்த தகவலை 'பாபா" படத்தின் விநியோகஸ்தர்களான ஆனந்தா பிக்சர்ஸ் எல்.சுரேஷ், திருப்பூர் சுப்பிரமணியம், நாகராஜராஜா ஆகியோர் 27-09-2002 அன்று நிருபர்களிடம் தெரிவித்தனர்.


இதுபற்றி திருப்பூர் சுப்பிரமணியம் கூறியதாவது:- 'உலக சினிமா வரலாற்றில் எந்த ஒரு நடிகரும், தயாரிப்பாளரும் செய்திராத அளவுக்கு ரஜினிகாந்த் மிகவும் தாராள மனதுடன் நடந்து கொண்டு, நல்ல பெயரை சம்பாதித்து இருக்கிறார்.

திரை உலகில் உள்ள அனைவருக்கும் முன்னோடியாக அவர் நடந்து கொண்டார்.

ரஜினிகாந்த் அமெரிக்காவிலிருந்து திரும்பியதும், எங்களை அழைத்து, 'பாபா' படம் வாங்கியவர்கள் ஒரு பைசாகூட நஷ்டம் அடையக்கூடாது.

யார் - யாருக்கு எவ்வளவு நஷ்டம் ஏற்பட்டதோ அதன்படி எல்லா பணத்தையும் திருப்பிக் கொடுத்து விடுங்கள். 'பாபா' படத்தை விற்ற பணம் அப்படியே இருக்கிறது. அதிலிருந்து நான் ஒரு பைசாகூட தொடவில்லை' என்றார்.

'முழு பணமும் திருப்பிக் கொடுக்கப் பட்



டால்தான் எனக்கு தூக்கம் வரும். கொடுக்கா விட்டால் தூக்கம்வராது' என்று கூறினார்.

**110 தியேட்டர்கள்**

அவர் சொன்னபடி 110 தியேட்டர் அதிபர்களுக்கும், 10 விநியோகஸ்தர்களுக்கும் கோடிக்கணக்கில் பணம் திருப்பி தரப்பட்டு விட்டது.' இவ்வாறு திருப்பூர் சுப்பிரமணியம் கூறினார்.

ஆனந்தா பிக்சர்ஸ் எல்.சுரேஷ், பட அதிபர் ஜீ.வி., நாகராஜ் ராஜா, ஆல்பர்ட் தியேட்டர் மாரியப்பன், முன்னாள் 'எம்.பி' அடைக்கலராஜின் மகனும், விநியோகஸ்தருமான பிரான்சிஸ், தியேட்டர் அதிபர்கள் ஜெயகுமார், கண்ணப்பன், ராஜாராம், பங்களா சீனு ஆகியோரும் பேசினார்கள்.

நாகராஜராஜா பேசும்போது, 'உப்பிட்ட தமிழ் மண்ணை ஒருபோதும் ரஜினி மறக்கமாட்டார்' என்றார்.

**இலாப - நஷ்டம்**

ஒரு விநியோகஸ்தர் குறிப்பிடுகையில், 'பாபா படத்துக்கு ரூ.20 கோடி வசூலாகியது. ரஜினிக்கு இது தோல்வி என்று கருதப்படுகிறது. ஆனால், விஜய் போன்ற இளம் நடிகர்கள் நடிக்கும் படங்கள் ரூ.20 கோடி வசூலித்தால், அது மகத்தான வெற்றிப்படமாக கருதப்படுகிறது' என்று கூறினார்.

**ரஜினி சுயதரிசனம்**

உலகத்தில் எப்போதும் சந்தோஷமா இருக்கிறவங்க மூணு பேர். ஞானி, குழந்தை, பைத்தியக்காரன்.

ஞானி - எல்லாவற்றையும் அறிந்தவர்.

'குழந்தை-எதையும் அறியாதது.

பைத்தியக் காரன் - எதுவும் தெரியாது. எதுவும் புரியாது. *(தொடரும்)*



# கருவாச்சி காவியம்

**வைரமுத்து - 155**

...பயமாத்தான் படிச்ச புத்தி வேல செய்யுமா இல்லையா? செஞ்சிருச்சு.

அம்மணிகளா ஒங்களுக்கும் வேணாம்; எங்களுக்கும் வேணாம். ஆண்டவனக் கல்யாணம் பண்ணிக்குங்க நீங்க; ஆண்டு அனுபவிச்சுக்கிர்றோம் நாங்கன்னு கடவுளுக்கு அவகளக் கல்யாணம் பண்ணி வச்சுப் பொட்டிக் கட்டி விட்டுட்டாக.

இதுதான் பாவம் எளிய பொம்பளைகள வலிய சாதி ஆளுக ஏச்சு எச்சி எல ஆக்குன கதை.

காலம்மாறி, கருத்துமாறி, ஆட்சிமாறி, அரசாங்கம் மாறி, கோயிலும் வருமானமும் கொலஞ்சு போகவும் அந்தப் பொம்பளைக தலை மொறை பொழப்பத்துப் போச்சு.

வக்கத்த பயலுகளுக்கெல்லாம் வடிகாலாகிப் போச்சு. பத்துப் பதினஞ்சு தலமொறையாப் பலிகடாவாகிப் போனாக அந்தப் பாவி மக்க. அதுல எச்சமும் சொச்ச மும்தான் அன்னைக்கிருந்தது அம்புலிப்புத்தூர்ல.

பொழுது மேற்க சாய அம்புலிப்புத்தூர்ல நொழஞ் சிட்டா கருவாச்சி. அந்த ஊர் இருக்கிதே ஏழெட்டுத் தெருவு தான். அதுல மூணு தெருவுதான் அந்தத் தெருங்கிறாக. இதுல எந்தத் தெரு அந்தத் தெருன்னு பாப்பேன்? எந்த வீட்ல எம் மகன்னு கேப்பேன்?

அரச மரத்துப்பிள்ளையார் கோயில்ல முந்தானைய ஒதறி விரிச்சுக் கல்திட்டுல உக்காந்துட்டா.

வாடிவாசல் வழியாத்தனா காள வரணும். எங்கிட்டிருந்தாலும் எம்பிள்ள இங்கிட்டுத்தான வந்தாகணும்.

கண்ண முழிச்சு முழிச்சுப் பாத்து ஒக்காந்திருக்கா. புத்



துப் பாம்பு மாதிரி அவ அங்கிட்டும் இங்கிட்டும் தலையத் தூக்கிப் பாத்ததுல மூணாம் தெரு மொனையில காட்டாமணக்கு வேலியில காயுது- மகனுக்கு அவ வாங்கிக் குடுத்த சட்டம் போட்ட சட்ட-

அவன் சுத்தியும் முத்தியும் பாத்துட்டு ஒரே தவ்வாத் தவ்வி தும்பு திரிச்ச கன்னுக்குட்டி மாதிரி மடார்ன்னு கதவத் தெறந்து சடார்ன்னு தெருவுக்கு வந்துட்டான்.

வெளிய வந்து பாத்தா-

முக்காட்டுக்குள்ள மூஞ்சி பொத்தி, தெருத்திண்ணையில குத்த வச்சு, காவக்காக்கிறவ மாதிரி உக்காந்திருக்காய்யா கருவாச்சி.

பேயடிச்சவன் மாதிரி பேச்சு மூச்சில்லாமப் போச்சு பயலுக்கு.

பிள்ளையப் பாத்ததும் அழுகையா ஊத்துது அவளுக்கு.

அவன் அழுகல. அழுகை வார வழியப் பாறாங்கல்லு வச்சு அடைச்சுப்புடுச்சு வெக்கம்.

முன்ன அவ நடக்க-
பின்ன அவன் நடக்க-
ஒரு வார்த்தையும் பேசிக்கிரல தாயும் மகனும்.

மாப்பள வீடு பாக்க ஆளுகள வரச்சொல்லிப் பொம்பளவீடு தேடிப் போயிட்டானே புத்தி கெட்ட பய.

அம்புலிப் புத்தூர் ஓடை தாண்டி ஆலமரம் கடக்க ஆத்தா அழுதுக்கிட்டே கேட்டா:

ஏண்டா தங்கம்! ஏதுடா ஒனக்கு இம்புட்டுத் துட்டு.

அங்கிட்டுப் பாத்துக்கிட்டே சொன்னான் அழகுசிங்கம்-

நல்லத்தா குடுத்துச்சு.

நல்லத்தான்னா?

அதான்... திம்சு.

புழுதியில கெடந்த ஒரு முள்ளு சுருக்குன்னு கால்ல குத்த, அவன் சொன்ன சொல்லு நறுக்குன்னு நெஞ்சுல குத்த, ரெண்டு வலியில எந்த வலி பெருங்கொண்ட வலின்னு தெரியாம நின்ட எடத்துல நின்டுபோனா கருவாச்சி ஒத்தக்கால மட்டும் ஒசக்கத் தூக்கி. *(தொடரும்)*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவினது ஒத்துழைப்பின்றி யுத்தத்தை வென்றிருக்க முடியாது

## பசில் ராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு)

**இந்தியாவின் ஒத்துழைப்பின்றி யுத்தத்தை வென்றிருக்க முடியாது என முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**



இந்தியா எமக்கு வழங்கிய சில உதவிகளை அவர்களினால் பகிரங்கமாக வெளியிட முடியாது எனவும் அவ்வாறான உதவிகள் காரணமாகவே யுத்தம் வெற்றிகொள்ளப்பட்டது எனவும் பசில் ராஜபக்ஷ, முன்னாள் சிரேஷ்ட அமைச்சரிடம் கூறியுள்ளார்.

அந்த உதவிகளை மறந்து விட்டு செயற்பட்டதுதான் நாம் செய்த பெரிய பிழை என அவர் தெரிவித்துள்ளார். தேர்தல் தோல்விக்கு தம்மையே பலர் குற்றம் சுமத்திய போதிலும், இந்தியாவை பகைத்துக் கொண்டமை முக்கிய ஏதுவாக அமைந்தது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இலவச அடிப்படையில் இந்தியா உதவிகளை வழங்கியதாகவும், சீனா பணத்தைப் பெற்றுக் கொண்டே உதவிகளை வழங்கியதாகவும் அவர் தெரிவித்துள்ளார். தோல்விக்கான குற்றச்சாட்டை தாம் ஏற்றுக் கொள்வதாகத் தெரிவித்துள்ளார்.

எனினும், உண்மை அதுவன்று எனவும், இன்று மகிந்த வேண்டும் வேண்டும் என குரல் கொடுத்து வருவோரே தேர்தல் தோல்விக்கு பொறுப்பு சொல்ல வேண்டுமென அவர் தெரிவித்தார். எவ்வாறெனினும் ஐக்கிய தேசியக் கட்சி தேர்தலில் வெற்றியீட்டினால் இவர்களின் அனைத்து விளையாட்டுக்களும் நின்று விடும் என்பதனை நினைவில் நிறுத்திக் கொள்ள வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

மைத்திரியுடன் போடும் விளையாட் டுக்களை ஐக்கிய தேசியக் கட்சியுடன் போட முடியாது என அவர் தெரிவித்தார்.

நாட்டில் தற்போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன என்பது எம்மில் சிலருக்கு புரியவில்லை எனவும், மைத்திரி சுதந்திரக் கட்சியின் தலைவர் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இந்த விடயங்களை மறந்து விட்டு செயற்படுவது முட்டாள் தனமானது .

மைத்திரிபால சிறிசேன எதிர்வரும் ஐந்து ஆண்டுகளுக்கு நாட்டின் ஜனாதிபதி எனவும், மகிந்தவை மீளக் கொண்டுவருவதாக தெரிவிக்கும் சிலர் அவருக்கு பாதகத்தன்மைகளை ஏற்படுத்தி வரு வதாகவும் தெரிவித்துள்ளார். (இ-5)

## ஓய்வுபெற வேண்டிய மகிந்த அரசியலில் ஈடுபட முயற்சி

### ரஞ்சித் மத்தும பண்டார

ஓய்வு பெற்றுக்கொள்ள வேண்டிய முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மீண்டும் அரசியலில் ஈடுபட முயற்சித்து வருவதாக அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

மொனராகல பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டமொன்றில் ரஞ்சித் மத்தும பண்டார இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஓய்வு பெற்றுக்கொண்டு வீட்டில் இருக்க வேண்டிய முன்னாள் ஜனாதிபதி மீளவும் அரசியலில் ஈடுபட முயற்சிக்கின்றார்.

தற்போது விஹாரைகள் தோறும் சென்று அரசியல் செய்கின் றார்.

20ஆம் திருத்தச் சட்டம் அமுல்படுத்தப்படுவதனையும் அவர் சீர்குலைக்க முயற்சிக்கின்றார்.

புதிய முறையிலோ அல்லது பழைய முறையிலோ தேர்தல் நடத்தினால் ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான அரசாங்கம் ஆட்சியமைக்கும்.

20ஆம் திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தும் திட்டத்தை ஐக்கிய தேசிய கட்சி 13 ஆண்டுகளுக்கு முன்னதாகவே முன்வைத்திருந்தது.

பத்து ஆண்டுகள் ஆட்சியிலிருந்த ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்துடன் இருந்த போது ஏன் தேர்தல் முறைமையில் மாற்றம் கொண்டு வரவில்லை என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

அத்துடன் 20ஆம் திருத்தச் சட்டம் அமுல்படுத்தப்படுவதனை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு தடுத்து வருவதாகவும் அவர் தெரிவித்தார். (இ-5)

# தென்னிந்தியாவில் தோன்றிய நுண்கலை ஈழத்தில் நன்கு வேரூன்றியுள்ளது

அண்மைக்காலமாக பல்வேறு இந்திய இசை நடனக் கலைஞர்களின் யாழ் மண்ணிற்கான வருகை எமக்குப் பெரும் வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. தொலைக்காட்சியிலோ இணையத்திலோ பார்த்தும் கேட்டும் இரசித்துக் கொண்டிருக்கும் கலைகளை, கலைஞர்களை நேரடியாகக் காணும் வாய்ப்பு எம்மவர்களுக்கு கலையார்வத்தை மேலும் வலுப்படுத்தும் என்றால் மிகையாகாது.

அந்தவகையில், இந்தியப் பரதநாட்டிய கலைஞர் பேராசிரியர் சி.வி. சந்திரசேகர் வட இலங்கை சங்கீத சபை அரங்கில் எமது நாட்டிய கலைஞர்கள், நடன ஆசிரியர்கள் மற்றும் நடனம் கற்கும் மாணவர்களுக்கென சிறந்ததோர் செயலமர்வினை நடத்தியுள்ளார்.

கொழும்பு அபிநயஷேத்ரா நடனப்பள்ளியில் தனது பாரியாருடன் 80ஆவது பிறந்தநாளைக் கொண்டாடியதோடு மிகச்சிறந்ததோர் நடன அளிக்கையினையும் புரிந்துள்ளார்.

பரதநாட்டியம் ஓர் ஆற்றுகைக் கலை. அதிலும் நுண்கலை. தென்னிந்தியாவிலே தோன்றி உலகம்முழுதும் பரந்து வியாபித்திருக்கும் இக்கலையானது ஈழத்திலும் நன்கு வேரூன்றியுள்ளது. கலைச்செல்வன் ஏரம்பு சுப்பையா இதற்கான அடிநாதமாக விளங்கியுள்ளார். அமரர் பத்மஸ்ரீ அடையார் மு.லக்ஸ்மணனின் வழிநடத்தலில் மிளிரும் கலைஞர்களால் யாழ் மண்ணில் பரதக்கலை வளர்ச்சிகண்டு வருகிறது. இவர்களுள் அமரர் மகா வித்துவான் பிரம்மஸ்ரீ வீரமணி ஐயா போன்றோரும் அடங்குவர்.

பரதநாட்டியக் கலையானது பக்திபூர்வமான அபிநய வெளிப்பாடுகளை தன்னகத்தே கொண்டு ஜீவாத்மாவிற்கும் பரமாத்மாவிற்குமான தொடர்பை ஆத்மீக தத்துவத்தை நாயக நாயகி பாவ வெளிப்பாடுகள் ஊடாக வெளிப்படுத்துகின்ற ஓர் உன்னத கலையாகும்.

தற்காலத்தில் அநேகர் இத்தத்துவத்தினை விளங்கியும் விளங்காதது போன்றோ அல்லது விளங்காமலோ, வெறுமனே களியாட்டமாகவோ கடமைக்காகச் செய்வதாகவோ அளிக்கை செய்வது துரதிர்ஷ்டவசமானதே.

அதுமட்டுமல்லாது, எமது கலைஞர்கள் மத்தியில் போட்டி பொறாமைகள் அதிகரித்துக் காணப்படுகின்றமையும், ஒருவரைப்பற்றி ஒருவர் குறைகூறித்திரிவதும் எந்த விதத்திலும் ஆரோக்கியமானதல்ல.

இந்த சந்தர்ப்பத்தில் "பரதநாட்டியத்திற்குரிய உள்ளார்ந்த தத்துவத்திற்கான தன்மையை உணர்ந்து ஒரு ஆக்கத்தையோ அல்லது ஆற்றுகையையோ செய்வதற்குத் தற்கால கலைஞர்கள் சிந்திக்க முன்வரவேண்டும்" என்பதே பேராசிரியர் சி.வி.சந்திரசேகரது செயலமர்வின் தொனிப்பொருளாக அமைந்தது.

பேராசிரியர் சி.வி. சந்திரசேகர் சிறுவயது முதலே இசை மற்றும் நடனத்தில் மிகுந்த ஆர்வம்கொண்டவராகத் திகழ்ந்திருக்கிறார். பத்மஸ்ரீ ருக்மணி அருண்டேலிடம் பரதத்தை முறையாகப் பயின்று, பரதநாட்டிய அரங்கேற்றம் செய்து, கலாஷேத்ராவில் பேராசிரியராகவும் ஆற்றுகைக் கலைஞராகவும் விளங்கியுள்ளார். சுமார் 65 ஆண்டுகளாகப் பரதநாட்டிய ஆற்றுகைகள் செய்வதில் தன்னை அர்ப்பணித்துள்ளார்.

பரதநாட்டியம், கர்நாடக சங்கீதம் மற்றும் ஹிந்துஸ்தான் சங்கீதம் போன்றவற்றில் சிறப்புத்தேர்ச்சி பெற்ற இவர் ஒரு விஞ்ஞானத்துறை சார்ந்த கலாநிதி என்பது குறிப்பிடத்தக்கது. அதுமட்டுமல்லாது மிகுந்த மனித நேயமும் அன்பும் பண்பும் நேர் மனப்பாங்கும் அவரில் அபரிமிதமாகக் காணப்பட்டமை அவதானிக்கக் கூடியதாகவிருந்தது.

"எந்த ஒரு ஆற்றுகையோ நாட்டியச் செயற்பாடோ (அடவுகள் மற்றும் அபிநயங்கள்) பிழையானது என்று சொல்வதிற்கில்லை. ஆனால், அவை அழகுபடுத்தப்பட்டாலே மேன்மையடையும். இயலுமான வரை அடிப்படையில் மாற்றத்தை ஏற்படுத்தாது தங்கள் தங்கள் தேவைக்கும் வசதிக்கும் ஏற்ப அழகுபடுத்திக் கொள்ளலாம்" என்பதே அவரது ஆணித்தரமான கருத்து. நாம் அனைவரும் கவனத்திற்கொள்ள வேண்டிய ஒரு முக்கிய விடயமாகும்.

பரதநாட்டியம் கற்றல் கற்பித்தலில், ஆற்றுகை செய்வதில் பல்வேறு நுட்பங்களை செயன் முறையூடாக செய்துகாட்டி விளங்கவைத்தமை மனதில் மிகவும் ஆழமாகப்பதிந்ததோடு ஆர்வத்தினையும் தூண்டுவதாக அமைந்துள்ளது.

கண்ணினை மட்டுமே பயன்படுத்தி பாவத்தினை வெளிப்படுத்திக் காட்டியமையும், திஸ்ர அலாரிப்பிற்கு கண்ணை மட்டும் பயிற்சி செய்வது எப்படி என்று செயன்முறை மூலம் விளக்கியமை முத்தாய்ப்பாய் அமைந்தன.

பரதநாட்டியத்திலுள்ள பல்வேறு பாணிகள் பற்றி விளக்கமளித்த அவர், எப்பாணியினை யார் செய்யினும் அடிப்படை மாறாது பார்த்துக்கொள்ள வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

மேலும், பரதநாட்டியத்தின் ஆற்றுகையில் உடல்மொழியின் (body language) பங்கு பற்றி நன்கு விளக்கினார்.

அதுமட்டுமல்லாது, தகுந்த ஒரு குருவிடமே இக்கலையைக் கற்கவேண்டும் என்றும் ஒளிப்படங்களைப் (video) பார்த்துக் கற்பது பிரதிபண்ணுவதாக மட்டுமே அமையுமன்றி கற்பனா சக்தி புத்தாக்கம் என்பவற்றை மழுங்கடிக்கும் என மாணவர்களுக்கு வலியுறுத்திக் கூறினார்.

அத்துடன், ஆசிரியர்கள் கட்டாயமாக ஆடிக்காட்டியே கற்பிக்க வேண்டும் என்பதனையும், வயது வேறுபாடு பாராது ஆற்றுகை செய்யவேண்டும் என்பதனையும் மிகவும் வலியுறுத்திக் கூறினார்.

மேலும், முழு அரங்கத்தினையுமே சிறப்பாகப் பயன்படுத்துவதனை ஆடிக்காட்டி விளக்கினார்.

நிறைவாக, வடஇலங்கை சங்கீத சபையால் ஏற்பாடு செய்யப்பட்ட இக்கருத்தரங்கானது கலைஞர்களாகிய எம்மை இன்னொரு தளத்திலே சிந்திக்கத் தூண்டியுள்ளது.

**திருமதி ஸ்ரீதேவி கண்ணதாசன்**
நடன ஆசிரியை, யா/ பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதிக்கு எதிராக எடுக்கப்பட்ட தீர்மானம் பற்றி எனக்குத்தெரியாது

## அனுர யாப்பா கூறுகிறார்

**கம்பஹாவில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு எதிராக எடுக்கப்பட்ட தீர்மானம் பற்றி தமக்கு எதுவும் தெரியாது என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் அனுர பிரியதர்சன யாப்பா தெரிவித்துள்ளார்.**

மைத்திரிபால சிறிசேன ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் பதவியிலிருந்து உடனடியாக விலக வேண்டுமென கம்பஹா மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மக்கள் பிரதிநிதிகள் ஏகமனதாக தீர்மானித்தமை குறித்து எனக்கு எதுவும் தெரியாது.

இவ்வாறு ஓர் தீர்மானம் எடுக்கப்பட்டதாக தமக்கு இதுவரையில் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை என சிங்கள ஊடகமொன்று தொலைபேசி ஊடாக அனுர பிரியதர்சன யாப்பாவிடம் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போது தெரிவித்துள்ளார்.

மேல் மாகாண முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்க தலைமையில் அவரது கம்பஹா இல்லத்தில் நடைபெற்ற கூட்டத்தில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை கட்சித் தலைவர் பதவியிலிருந்து விலகிக் கொள்ளுமாறு கோரி தீர் மானம் நிறைவேற்றப்பட்டது.

இது தொடர்பிலான செய்திகள் தகவல்கள் இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களில் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. எனினும், இவ்வாறான ஓர் தீர்மானம் பற்றி தமக்கு எதுவும் தெரியாது என அனுர பிரியதர்சன யாப்பா தெரிவித்துள்ளார். (இ-5)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி | சுன்னாகம் | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 150 | 100 | 120 | 160-200 | 160 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 100 | 120 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 80 | 60 | 50 | 100 | 60 | 60 |
| தக்காளி | 80 | 60 | 90 | 120 | 80 | 70 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 40 | 60 | 50 | 50 |
| கோவா | 150 | 100 | 100 | 120 | 100 | 140 |
| கரட் | 220 | 200 | 150 | 280 | 200 | 200 |
| பூசணி | 30 | 40 | 30 | 40 | 40 | 40 |
| புடோல் | 120 | 120 | 70 | 80 | 100 | 100 |
| வாழைக்காய் | 40 | 60 | 80 | 40 | 60 | 40 |
| சின்ன வெங்காயம் | 140-170 | 150 | 160 | 160 | 130 | 100 |
| பெரிய வெங்காயம் | 110 | 120 | 100 | 120 | 120 | 120 |
| பாகற்காய் | 160 | 140 | 130 | 120 | 200 | 180 |
| வெண்டிக்காய் | 140 | 150 | 80 | 120 | 160 | 140 |
| கருணைக் கிழங்கு | 120 | 80 | 100 | 140 | 140 | 100 |
| பயற்றங்காய் | 120 | 140 | 120 | 80 | 200 | 180 |
| லீக்ஸ் | 260-280 | 240 | 150 | 280 | 200 | 180 |
| பீற்றூட் | 120 | 120 | 100 | 160 | 100 | 50 |
| கறிமிளகாய் | 220 | 150 | 120 | 160 | 80 | 80 |
| முருங்கைக்காய் | 250-350 | 500 | 300 | 400 | 400 | 400 |
| போஞ்சி | — | 200 | 200 | 240 | 160 | 160 |
| கத்தரிதம்புள்ள | — | 120 | 80 | — | — | 140 |
| கீரை - 1 பிடி | 30 | 40 | 30 | 50 | 50 | 40 |
| தேசிக்காய் | 120-160 | 160 | 120 | 120 | 200 | 180 |
| தேங்காய் (ஒன்று) | 25-60 | 50 | 40 | 40-50 | 60 | 50 |
| இராசவள்ளி | 200 | 120 | 140 | 140 | 140 | 120 |
| வெங்காயப்பூ | — | — | — | — | 200 | — |
| முள்ளங்கி | — | 70 | 50 | 120 | 50 | 50 |
| பொன்னாங்காணி | 40 | 20 | 40 | 40 | 30 | 30 |
| வல்லாரை | 10 | 10 | 20 | 20 | 10 | 20 |

## அமைச்சர் உபுலிடம் விசாரணை

மகிந்த ராஜபக்ஷ பிரதமராகுமிடத்து இலஞ்ச ஊழல் விசாரணை பொலிஸ் பிரிவில் இருக்கும் கான்ஸ்டபிள் முதல் அனைவரையும் தூக்கு மேடையில் ஏற்றி கொல்லுவார் என தென் மாகாண அமைச்சர் டீ.வி உபுல், தெரிவித்திருந்த கருத்து தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். திஸ்ஸமாராகமையில் அண்மையில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இந்த கருத்து தொடர்பில் பொலிஸ்மா அதிபரின் ஆலோசனைக்கு அமைவாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் உதவி பொலிஸ்அதிகாரி ருவன் குணசேகர தெரிவித்தார். "இலஞ்ச ஊழல் பிரிவில் கடைநிலை அதிகாரியில் இருந்து மேலதிகாரிகள் வரை பட்டியல் இட்டு கல் எறிந்து கொல்லு வார். விசப்பாம்பு எந்த நேரமும் பழிவாங்க துடிக்கும்" என்றும் பிரதியமைச்சர் தெரிவித்திருந்தார்.

"1989 களில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆட்சிக் காலத்தில் சபுகஸ்கந்த பட்டலந்தவில் 60 ஆயிரம் பேர்வரை கொன்ற கொலைகாரருக்கு தண்டனை பெற்றுக் கொடுக்க அப்பொழுது இருந்த அரசு முன்வரவில்லை". "அவர்கள் தங்களுடைய அதிகார பலத்தை பயன்படுத்தி எங்களின் சிறுசிறு தவறுகளுக்கும் எங்களை துரத்தி துரத்தி தண்டிப்பதற்கு முனைந்தனர். மீண்டும் பிரதமராக மகிந்த வந்து அவர்களை தண்டிப்பதற்கு முனைகின்றார்." "எங்களுடையவர்களை கூடுகளுக்கு போடும் இலஞ்ச ஊழல் பிரிவில் உள்ள பொலிஸ் உத்தியோகஸ்தர்களை கல்லெறிந்து கொல்வதை நாங்கள் பார்த்துக் கொண்டு இருப்போம் என அமைச்சர் உபுல் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 391

Search for people, places and things  Nagendram  Home

தர்மி தர்மினி

உங்கள் புன்னகையில்
உள்ள சோகத்தையும்
கோபத்தில் உள்ள காதலையும்
மௌனத்தில் உள்ள காரணத்தையும்
யார் புரிந்து கொள்கிறார்களோ
அவர்கள் உங்கள் அன்புக்கு
உரிமை உடையவர்...!

பாலமுருகன் ராஜி




துஸ்யந்தி தவராசா




பவி பவிதா




சங்கர் குமரன்



சுரேஸ் சுரேஸ்குமார்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டம் மீதான நம்பிக்கை இழக்கும் காரணங்கள் என்ன?



இந்த நாட்டில் ஒருகால கட்டத்தில் இரு முக்கிய சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. முதலாவது தமிழ்த் தேசிய கீதம் இசைத்தமைக்காக கிழக்குப் பல்கலைக்கழக சிங்கள மாணவர்கள் ஒரு உத்தியோகத்தரைத் தாக்கியுள்ளனர். இவர்கள் அனைவரும் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

தமிழ் சட்டத்தரணிகள் இவர்களை விடுவிக்க அரும்பாடுபட்டுள்ளனர். புங்குடுதீவு மகா வித்தியாலய மாணவி வித்தியா சிவலோகநாதன் கூட்டுபாலியல் வன்முறைக்குப் பின் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இவரது விடயத்தில் பொலிஸாரும் சட்டத்துறையினரும் நடந்து கொண்ட விதத்தை ஆட்சேபித்து யாழ். நீதிமன்றக் கட்டடத் தொகுதி மீது வன்முறைத் தாக்குதல் நடைபெற்றுள்ளது.

இதில் சம்பந்தப்பட்டதாகக் கருதப்படும் 130 பேர் அனுராதபுரச் சிறையில் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரையும் விடுவிக்க தாம் முயற்சிக்கப் போவதில்லை என யாழ். சட்டத்தரணிகள் தீர்மானித்துள்ளதாக செய்திகள் வெளி வருகின்றன.

நெடுந்தீவில் 2012 ஆம் ஆண்டு மீன் வாங்கச் சென்ற 13 வயதுச் சிறுமி யேசுதாசன் லக்சினி பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்ட வழக்கு, மண்டைதீவில் 4 வயதுச் சிறுமி பாலியல் வன்முறைக்குப் பின் படுகொலை செய்யப்பட்டமை, உரும்பிராயில் சிறுவர் காப்பகத்திலிருந்த சிறுமி பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டமை போன்ற வழக்குகளில் சந்தேக நபர்கள் சார்பில் வாதாடி அவர்களை விடுதலை செய்யத் துடிக்கும் யாழ். சட்டத்தரணிகள்,

ஆவா குழு போன்ற காடையர்களை விடுவிக்க இரவிரவாக சட்டப் புத்தகத்தினுள் தலையை ஓட்டி வழி கண்டுபிடிக்கும் வழக்கறிஞர்கள், உணர்ச்சிவசப்பட்ட நிலையில் போராட்டத்தை திசை திருப்ப முயற்சித்த சக்திகளின் வழிகாட்டலில் புரிந்த தவறுகளை மன்னிக்கத் தயாராக இல்லை.

பளபளக்கும் மொட்டைக்கு ஆசைப்பட்டால் அலங்காரக் குடுமி பற்றிய ஆசையைத் துறக்க வேண்டும். காடைத்தனங்களுக்கு எதிராக தொலைக்காட்சியில் றெமிடியஸ் பொங்கியெழும்போது அதைக் கேட்போருக்கு மயிர்க்கூச்செறியும்.

இனத்தின் பண்பாடு நாகரிகம் பற்றி மேடையில் சிறீகாந்தா பேசும் போது அவரது இலக்கத்தைத் தெரிந்து அவருக்கு ஒரு விருப்பு வாக்குத்தானும் அளிக்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றும்.

ஒருபக்கத்தில் எமது மக்களின் மீட்பர்களாகக் காட்சியளிக்கும் இந்த இருவரும் மறுபுறத்தில் காடையர்களையும் காமுகர்களையும் காப்பாற்றத் தமது சட்ட அறிவைப் பயன்படுத்துகின்றனர்.

இவர்கள் முதலில் முடிவெடுக்க வேண்டிய விடயம் எமது தலைவர்கள் என்ற முகமூடியைப் போடப் போகின்றார்களா அல்லது காடையர்கள் காமுகர்கள் பக்கம் நிற்கப் போகின்றார்களா என்று.

மக்களின் ஆத்திரத்துக்குக் காரணம் மிகுந்த போராட்டத்துக்குப் பின்னர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட சுவிஸ் குமார் எப்படி கொழும்புக்குத் தப்ப முடிந்தது என்பதுதான்.

இவரைத் தப்பிக்க வைத்ததில் கொழும்பு பல்கலைக்கழக சட்ட விரிவுரையாளர் வி.ரி.தமிழ்மாறனின் பங்கு குறித்து மக்கள் சீற்றமடைந்துள்ளனர்.

இந் நிலையில் சட்ட விரிவுரையாளர் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட மாட்டார் என வடமாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் லலித் ஜெயசிங்க தெரிவித்துள்ளார்.

அப்படியானால் சட்ட விரிவுரையாளரையும் கைது செய்வதாக எழுத்துமூலம் பொலிஸார் வாக்குறுதி கொடுத்தது ஏன்? யாழ். வைத்தியசாலையிலிருந்து குமார் கொழும்புக்கு கொண்டு செல்ல சட்டத்தின் ஓட்டையா. பொலிஸாரின் சட்ட ஓட்டையா காரணம் என எவரும் சிந்திக்கக் கூடாது. அப்படிச் சிந்தித்தால் மகிந்த, விமல் வீரவன்ச ஜாதிக ஹெல உறுமயவின் கோபத்துக்கு ஆளாக வேண்டும்.

பல காரணங்களின் நிமித்தம் அன்றும் இன்றும் பொலிஸாருடன் ஒத்துழைப்பது எமது மக்களுக்குச் சற்றுச் சிரமமாகவே இருக்கிறது என வடக்கு முதல்வர் கூறுவது இவ்வாறான காரணங்களால் தான். இதே நீதிமன்ற வளாகத்தில் சுற்றுச் சூழலில் நிகழ்ந்த ஒரு சம்பவத்தைச் சுட்டிக்காட்டியே ஆகவேண்டும்.

நாவற்குழியைச் சேர்ந்த பராசா என்னும் இளைஞன் 76-77 ஆம் ஆண்டுகாலப் பகுதியில் செம்மணியில் பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

வேலைக்குச் சென்று திரும்பும் வழியிலேயே இந்த இளைஞன் பொலிஸாரின் துப்பாக்கிக்கு இரையானான். இவரது மரணம் தொடர்பான வழக்கு நடைபெற்றுக் கொண்டிருந்தது.

அச்சமயம் கொழும்பிலிருந்து பலாலிக்கு விமானம் மூலம் வந்த விசேட அதிகாரி ஒருவர் சட்டமா அதிபர் திணைக்களத்தின் உத்தரவொன்றை நீதிபதியிடம் கையளித்தார்.

இவ்வழக்கை கைவிடுமாறு அந்த உத்தரவில் குறிப்பிடப்பட்டிருந்தது. எனவே சட்டமா அதிபரின் வழிகாட்டுதலின்படி இந்த வழக்கைக் கைவிடுகின்றேன் என்று அர்த்தப்படக் கூறிய நீதிபதி அந்தக் கொலைகார பொலிஸாரை விடுவித்தார்.

விடுவிக்கப்பட்ட அந்தக் கொலைகாரனை இதே நீதிமன்ற வளாகத்தில் தமது தோளில் சுமந்து கொண்டு வெற்றி முழக்கமிட்டவாறு ஊர்வலம் சென்றனர் சக பொலிஸார்.

உங்களது நீதிமன்றம் எங்களுக்கு ஒருபொருட்டல்ல எமக்கு விடுதலை கொழும்பில் இருந்தே கிடைக்கும் என்பதுதான் அந்த ஊர்வலமும் கோசமும் சொன்ன செய்தி.

அந்தச் சம்பவம்தான் சிறீலங்கா நீதிமன்றில் தமிழருக்கு நீதி கிடைக்காது என்ற அழுத்தமான செய்தியை அன்றைய தமிழ் இளைஞர்களுக்குப் புலப்படுத்தி அவர்களை மாற்று வழியை நாடச் சொன்னது.

சமூக நலன்சார் விடயங்களை யாரும் எங்களுக்குச் சொல்லித்தர வேண்டியதில்லை. எமது சமூகப் பொறுப்பை நாங்கள் அறிவோம் என்று கடந்த 20 ஆம் திகதி யாழ். நீதிமன்ற வளாகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் சீறியெழுந்த சட்டத்தரணி சிறீகாந்தாவால் அன்று கொதித்தெழ முடியவில்லை.

இதே நீதிமன்றில்தான் அவர் வழக்குகளுக்காக ஆஜராகி வந்தார். இதே நீதிமன்றில் சாவகச்சேரியில் துப்பாக்கி மூலம் வன்முறை புரிந்ததாக குற்றஞ்சாட்டப்பட்ட இராமநாதன் விளக்கமறியலில் வைக்கப்பட வேண்டும் என நீதவான் உத்தரவிட்டார்.

ஆனால் அவர் சிறைச்சாலைக்குக் கொண்டு செல்லப்படாமலேயே நீதிமன்ற வாசலிலிருந்து வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். அங்கிருந்து தனியார் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

இவையெல்லாம் காணும்போது சட்ட ஒழுங்கு பற்றி மக்களுக்கு எப்படி நம்பிக்கை பிறக்கும். நீதிமன்றத்தில் நிகழ்ந்த வன்முறையை எவரும் ஆதரிக்கவில்லை.

இச் சம்பவம் தொடர்பாக எமது சமூகம் விசனம் தெரிவிக்கிறது. அதில் எவருக்கும் மாறுபாடான கருத்து இருக்க முடியாது. ஆனால் மக்கள் போராட்டங்கள் எவ்வாறு திசைதிருப்பப்படுகின்றன என்பதை இச் சட்ட மேதைகள் ஆராய்ந்தறியவில்லை.

நெல்லியடியில் நடைபெற்ற மக்கள் போராட்டம் ஒன்றின் போது புலிக்கொடியைத் தாங்கியவாறு இருவர் போனார்களே அவர்கள் யார்? அவர்களது பின்னணி என்ன அவர்கள் ஏன் கைது செய்யப்படவில்லை என்று இந்த சட்டமேதைகள் சிந்தித்திருந்தால் உணர்ச்சிவசப்பட்ட நிலையிலிருந்த இளைஞர்களுக்கு முன்னால் இந்த வன்முறையை ஆரம்பித்து தூண்டிவிட்டவர்கள் யார் அவர்களது நோக்கம் என்ன என்று புரிந்திருக்கும்.

பிந்துநுவெவ- மைலந்தனை முதலான படுகொலைகளைப் புரிந்த குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்க இந்த நீதிமன்றங்களால் முடியாது என்ற கசப்பான உண்மைதான் பவித்திராவின் வழக்கிலும் நீதி கிடைக்காது என்ற ஒரு தவறான முடிவுக்கு இளைஞர்களைச் செல்ல வைத்துள்ளது.

அதற்கு ஏற்றாற் போல ஒரு பல்கலைக்கழக சட்ட விரிவுரையாளரே குற்றம்சாட்டப்பட்டவருக்கு ஆதரவாக இருந்தமை சட்டத்தின் மீதான நம்பிக்கையை இழக்க காரணமானது என்பதுதான் உண்மை.

மக்கள் சட்டத்தைக் கையில் எடுப்பது நிலைமைகளை மேலும் மோசமாக்கும் எனப் பிரதமர் ரணில் கூறுகிறார். இதேவேளை பிரதமர் இன்று நீதித்துறையை விமர்சித்து வாய்மூலம் கற்களை வீசிக் கொண்டிருக்கையில் வடக்கில் உண்மையாக மக்கள் நீதிமன்றம் மீது கற்களை வீசிக்கொண்டிருக்கிறார்கள் என்று சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் பேச்சாளர் டிலான் பெரேரா கூறுகிறார்.

கோத்தபாயவின் விடயத்தில் ரணில் நடந்துகொண்ட முறையையே அவர் இவ்வாறு குறிப்பிடுகிறார். எனவே பிரதமரும் சரி யாழ்ப்பாணத்தில் வன்முறையில் ஈடுபட்டவர்களும் சரி நீதித்துறையை மதிக்கவில்லை.

இதில் ஒரு தரப்பினரை மட்டும் தண்டிக்க நினைப்பது ஏன்? ஏற்கனவே உயர்நீதிமன்றை அவமதித்ததாக எஸ்.பி.திஸநாயக்க தண்டிக்கப்பட்டிருக்கிறார்.

வன்முறையைத் தூண்டிவிட்டோருக்கு வடக்கு முதல்வர் கடும் எச்சரிக்கையை விடுத்துள்ளார். மனவருத்தத்தால் வாடும் மக்களின் முதுகில் ஏறிச் சவாரி செய்வதற்கு எத்தனிக்காதீர்கள். அவ்வாறு நீங்கள் செய்வது கண்டு அறியப்பட்டால் பாரதூரமான விளைவுகளை எதிர்நோக்க நேரிடும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

உயர்நீதிமன்ற நீதியரசராக இருந்த அவரது கருத்துக்களுக்கு அனைவரும் மதிப்பளிக்க வேண்டும். எமது கவலை என்னவெனில் கொழும்பை வதிவிடமாகக்கொண்டு வாழ்ந்த எமது முதல்வர் யாழ். மக்களை புரிந்து கொண்டளவுக்கு யாழ்ப்பாணத்தில் பிறந்த எமது சட்டத்தரணிகள் புரியவில்லையே என்பதுதான்.

அதனால்தானோ என்னவோ எமது முதல்வருக்கு லட்சக் கணக்கில் வாக்களித்த மக்கள் சில போராளிகளையும் விடுவித்த வரலாற்றைக் கொண்ட றெமிடியஸ்சை கடந்த தேர்தலில் பரிதாபமாகத் தோற்க வைத்துள்ளனர்.

எது எவ்வாறெனினும் சிங்களத்தில் தேசியகீதம் இசைக்காமைக்காக தமிழ் உத்தியோகத்தரைத் தாக்கிய சிங்கள மாணவர்கள் செய்த தவறு, நீதிமன்றத்தின் மீது தாக்குதல் நடத்திய இளைஞர்களின் தவறுக்கு எவ்விதத்திலும் குறைந்ததல்ல.

தவறான வழி நடத்தப்பட்ட எமது இளைஞர்களை விடுவிக்க காத்திரமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று நம்புவோமாக. நம்பி நம்பித்தானே பொன் சேகாவுக்கும் மைத்திரிக்கும் வாக்களித்தவர்கள் நாங்கள்.

-இணையம்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீள்குடியேற்றத்திற்காக 16கோடி ரூபா ஒதுக்கீடு

(கொழும்பு)

**வடக்கு, கிழக்கிலிருந்து இடம்பெயர்ந்த குடும்பங்கள் மீள்குடியேறுவதற்காக 16 கோடி ரூபாயை அரசாங்கம் ஒதுக்கியுள்ளதாக மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் தெரிவித்துள்ளார்.**



ஒரு குடும்பத்துக்கு 38 ஆயிரம் ரூபாய் வீதம் 2,175 குடும்பங்களுக்கு இந்த தொகையை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாக அமைச்சர் சுவாமிநாதன் தெரிவித்துள்ளார்.

இதில் ஒரு குடும்பத்தின் மீள்குடியேற்றத்துக்காக 25 ஆயிரம் ரூபாயும் தங்களது காணியை சுத்தப்படுத்தல் மற்றும் அதற்கான உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக 13 ஆயிரம் ரூபாயும் என மொத்தமாக 38 ஆயிரம் ரூபாய் வழங்கப்படவுள்ளது.

முதற்கட்டமாக, திருகோணமலை, சம்பூர் பிரதேசத்தில் மீள்குடியேறவுள்ள 204 குடும்பங்களும் வடக்கின் யாழ் மாவட்டத்தில் மீள்குடியேறவுள்ள ஆயிரத்து 971 குடும்பங்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார். (இ-5)

# விடுதலை செய்யப்படவுள்ள தமிழ்க் கைதிகள் பாரதூரமான குற்றச்செயல்களுடன் தொடர்பு

## சிங்கள ஊடகம் கூறுகிறது

விடுதலை செய்யப்பட உள்ள தமிழ் அரசியல் கைதிகளில் பலர் பாரதூரமான குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்கள் என சிங்கள ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் விடுவித்துக் கொள்ள முயற்சிக்கும் 278 தமிழ் அரசியல் கைதிகளில் பலர் பாரிய பயங்கரவாத குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்கள்.

விமானங்கள் மீது ஏவுகணைத் தாக்குதல் நடத்தியவர்கள், கண்ணிவெடி வைத்தமை, கடற்படை படகுகள் மீது தாக்குதல் நடத்தியமை, கிராம மக்களை படுகொலை செய்தமை, தற்கொலை குண்டுதாரிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கியமை, இராணுவ முகாம்கள் மீது தாக்குதல் நடத்தியமை, படையினரை கொலை செய்தமை, பஸ்கள் மீது தாக்குதல் நடத்தியமை மற்றும் சிவிலியன்களை படுகொலை செய்தல் உள்ளிட்ட குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் இந்தக் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் கைதிகள் முன்னாள் தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்கள் என்ற போதிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இவர்களை அரசியல் கைதிகள் அடையாளப் படுத்தியுள்ளதாக பாதுகாப்புத் தரப்பினர் தகவல் வெளியிட்டுள்ளதாக திவயின சிங்களப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படுவது ஆபத்தானது என்ற வகையில் சில சிங்கள ஊடகங்கள் தொடர்ச்சியாக செய்தி வெளியிட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, நீண்ட காலமாக எவ்வித குற்றச்சாட்டுக்களும் சுமத்தாது தமிழ் அரசியல் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக மனித உரிமை செயற்பாட்டாளர்களும், தமிழ் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட கட்சிகளும் குற்றம் சுமத்தி வருகின்றன.

இந்தக் கைதிகளை விடுதலை செய்வது குறித்து நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவிற்கும், நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனுக்கும் இடையில் விசேட சந்திப்பொன்று இன்று அல்லது நாளை நடைபெறும் என தெரிவிக்கப்படுகிறது. (இ-5)

# நாடாளுமன்றை கலைக்காவிடின் மகிந்த அணி வலுவடைந்துவிடும்

(கொழும்பு)

காலாவதியான நாடாளுமன்றத்தை கலைக்காமல் தொடர்ந்து நடத்தி சென்றால் மகிந்த அணி மேலும் வலுவடைந்து விடும் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

காலியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மகிந்த அணி நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பேய் ஆட்டம் ஆடிக் கொண்டு, ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியினை பிளவுபடுத்துவதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை மிரட்டுகின்றனர். மேலும் நாட்டினுள் பாரிய பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளதுடன், 70 ஆயிரம் தொழில்கள் இழக்கப்பட்டமைக்கு பிரதமர் ரணிலின் நடவடிக்கைகளே காரணம்.

எனவே விரைவில் நாடாளுமன்றம் கலைக்கப்பட வேண்டும் என அவர் தெரிவித்தார். (இ-5)

# ரணில் அரசியலிலிருந்து ஓய்வு பெறவேண்டும்

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் அரசியலிலிருந்து ஓய்வு பெற்றுக் கொள்ள வேண்டுமென பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ஒரு தடவை தோல்வியைத் தழுவியதனால், தேர்தலில் போட்டியிடத் தகுதியற்றவர் என ரணில் கூறுகின்றார்.

அவ்வாறெனின் 29 தடவைகள் தோல்வியடைந்த ரணில் விக்கிரமசிங்க பிரதேச சபைத் தேர்தலிலும் போட்டியிடத் தகுதியற்றவர்.

நாடாளுமன்றில் வாசுதேவ நாணயக்காரவிடம் ரணில் தன்றாக வாங்கிக் கட்டிக்கொண்டார். தற்போது மகிந்த தேர்தலில் போட்டியிடக் கூடாது என்கிறார். அவ்வாறு என்றால் ரணில் அரசியலிலிருந்தே ஓய்வு பெற்றுக் கொள்ள வேண்டுமென பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி சிங்கள ஊடகமொன்றுக்கு தெரிவித்துள்ளார். (இ-5)

# இன்று ஒரு தகவல்

## உயர்வும் தாழ்வும்

உடம்பும் உயிரும் சேரும்போது உருவாகும் உள்ளம்தான் இரண்டையும் ஆட்டிப்படைக்கிறது. வாழ்வின் வெற்றி தோல்விகளை முடிவு செய்கிறது. இந்த உள்ளம் எங்கிருக்கிறது என்று கேட்டால் விடை சொல்லமுடியாது. ஆனால் அது தான் வாழ்க்கையின் சூத்திரதாரி!

உடம்பில் மனதைச் செலுத்தி சதாகாலமும் அதிலேயே மூழ்கி விடுகிறவர்கள் சராசரி மனிதர்கள். உயிரில் மனதைப் பதித்து அதைப்பற்றிச் சிந்தித்து வாழ்வை உயர்த்திக்கொள்கிறவர்கள் ஞானிகள்.

உயர்வு, தாழ்வு, விருப்பு, வெறுப்பு இவையெல்லாம் உலகத்தில் தோன்றுவதற்குக் காரணம் மனம்தான். மனம் என்றால் இரண்டு பேர் மனதையும்தான் சொல்லுகிறேன். எடைபோடுகிறவன் மனம். நிறுக்கப்படுகிறவன் மனம். இரண்டும்தான் மனிதகுல உயர்வு தாழ்வுகளுக்குக் காரணம். மகாபாரதப் போர்க்களம்... கர்ணனின் தேர்ச்சக்கரம் சகதியில் சிக்கிக் கிடக்கிறது. சக்கரத்தை எடுக்கப் போராடுகிறான் கர்ணன். முடியவில்லை.

அம்புகளால் ஆன பின்னல் மின்னல்களை ஏவிக்கொண்டேயிருந்தான் அருச்சுனன். எதுவும் கர்ணனைக் காயப்படுத்தவில்லை. பார்த்தனுக்கு ஆச்சர்யம். கண்ணனோ சிரித்தபடி சொன்னான். போரை நிறுத்து அர்ஜுனா! உன் அம்பு வற்றினாலும் அவன் ஆயுள் வற்றாது.

இப்படிச்சொன்ன கண்ணபெருமானை அடுத்த விநாடி காணவில்லை. கர்ணன் முன்பாக அந்தண வடிவத்தில் நிற்கிறான் அவன். கர்ணன் முகத்தை உற்று நோக்கினான் கண்ணன். அதில்தான் எவ்வளவு சிவப்பு!

சூரியகுமாரன் என்பதால் விடியலின் இளஞ்சிவப்பு... வில்வித்தையும் பல் வித்தையும் கற்ற அறிவின் ஒளிச்சிவப்பு... எங்கு போனாலும் நீ யார் பிள்ளை? எனக் கேட்கப்பட்டு ஓ... தந்தை பெயர் தெரியாத பிள்ளையா என்ற அவமானச் சிவப்பு... வறுமையால் வாடி நிற்பவர், வருத்தமான முகங்களைப் பார்த்ததும் விளைந்த அதிர்ச்சியின் சிவப்பு... வாரிக்கொடுத்த கொடையைக் குறித்து வார்த்தை மலர்களை, வந்தவர்கள் வாரியிறைக்க புகழை மறுக்கும் நாணத்தின் மென்சிவப்பு... இத்தனை சிவப்பையும் வெல்லும் வகையில் இன்று அர்ஜுனன் எறிந்த கணைகளால் விளைந்த இரத்தச்சிவப்பு...

அந்தச் சிவப்பு முகத்தை ரசித்தபடி அந்தண வடிவில் வந்த கண்ணன் ஆரம்பித்தான். ஐயா... நீங்கள் இப்போது எது கேட்டாலும் தரும் வள்ளல் என்று அறிந்துதான் போர்க்களம் என்றும் பாராது கொடை கேட்க வந்தேன்... தருவீரா?

உள்ளும் புறமும் மூச்சுக்காற்று சடுகுடு ஆடும் இறுதி நேரத்திலும் அந்த வள்ளலின் வதனம் மலர்ந்தது. ஐயா இந்தப் பாவி அள்ளிக்கொடுத்த போதெல்லாம் வராது இப்போது வந்திருக்கிறீர்களே! ஒரே ஒரு விண்ணப்பம்... இருப்பதாக... என்னிடம் இருப்பதாகக் கேளுங்கள் தருகிறேன்.

எனக்குப் பொன்னோ மணியோ வேண்டாம். நீர் பலமுறை தானம் செய்து புண்ணியம் ஈட்டியவர். அந்தப் புண்ணியங்களை எல்லாம் எனக்குத் தந்து விடுங்கள் சர்வசாதாரணமாகக் கேட்டான் கண்ணபிரான். தானம் செய்வதே புண்ணியங்களைப் பெற வேண்டும் என்ற ஆசையால்தான். இது என்ன அநியாயம்? அதையே கொடுப்பது என்றால் பிறகு தானம் எதற்காக? எதைத் தான் கேட்பது என்ற வரையறையே இல்லையா?

வில்லிபுத்தூர் ஆழ்வார் பாடலில் அந்தணரே நீர் பிரம்மாவை விட உயர்ந்தவர் என்று தொடங்குகிறான் கர்ணன். பிரம்மாவை விடப்பெரியவர் என்றால் திருமால் என்பது பொருள். வந்திருப்பவன் கண்ணன் என்பதை கர்ணன் உணர்ந்து கொண்டான். முக்காலத்தையும் மனதில் வைத்துக்கொண்டு கர்ணன் நான் செய்த, செய்கிற, செய்யப்போகிற புண்ணியங்கள் உட்பட உமக்கே தந்தேன் என்றான். செய்யப் போகிற புண்ணியம் எது? அந்தணருக்குப் புண்ணியங்களைத் தருவதால் வரும் எதிர்காலப் புண்ணியம் கூட எல்லாம் தந்தேன் என்று தருகிறான்.

தன்னைப் பலவீனப்படுத்த; கொல்ல கண்ணன் யாசகம் கேட்கிறான் என்று வருத்தப்படவில்லை அவன் மனம். கடவுளே தன்னிடம் கையேந்துகிறார்! அவருக்குத்தானம் தருவது எத்தனை உயர்ந்த வாய்ப்பு என்று மகிழ்கிறது! இன்ப துன்பங்களுக்கு மனந்தானே காரணம். மனம் எப்படி அர்த்தம் செய்து கொள்கிறதோ அதுதான் வாழ்க்கைக்கு அர்த்தம்.

புண்ணியங்களைத் தாரைவார்த்துக்கொடுக்கத் தண்ணீர் வேண்டுமே! தானம் கொடுப்பதானால் மனைவி ஓர் உத்தரணி தண்ணீர் தெளிப்பது மரபல்லவா? ஒவ்வொரு மனிதனின் இடதுபாகம் மனைவிக்கு உரியது. எனவே இடது பகுதியில் இதயத்தில் பதிந்திருந்த அம்பை அசைத்தான் கர்ணன்... குருதி வழிந்தது... இரத்தத்தைக் கையில் வாங்கி கண்ணபெருமான் கைகளில் தாரை வார்த்தபடி புண்ணியங்களைத் தானம் கொடுத்தான்.

கடவுள் கை தாழ்ந்தது. மனிதன் கை உயர்ந்தது. மனசுதான் காரணம். கொடுக்கிற எண்ணம் உயர்ந்தது. வாங்குகிற எண்ணம் தாழ்ந்தது. சொட்டுச் சொட்டாகக் குருதி கண்ணபெருமான் கைகளில் பட்டதும் தாமரைக்கண்ணன் இதழ்களைப் போலவே இதயமும் சிவந்தது. குறுநகை தவழக் கேட்டான்.

கர்ணா உனக்கு வேண்டிய வரங்களைச் சொல்... என்ன என்ன வேண்டுமோ கேள் என்றான் உற்சாகமாக. வாங்க வந்தவன் கொடுப்பதாகச் சொல்வது விந்தை அல்லவா! கொடுத்துப் பழகிய கர்ணன் இரத்தம் கையில் பட்டதும் வாங்க வந்தவனுக்கும் கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் பிறந்தது. வலிமையான எண்ணங்கள் எதிரே இருப்பவர்களையும் ஊடுருவும். அவர்களையும் தூண்டும்.

கர்ணன் கேட்டான். இறைவா... இனிமேல் பிறவிவேண்டாம்... இன்னொரு பிறப்பு உண்டு என்பது விதி என்றால் அப்போதும் இல்லை என்று சொல்லாது கொடுக்கிற மனம் எனக்கு வேண்டும். கொடுப்பதற்குத் தேவையான பணம் கேட்கவில்லை. மனம்தான் கேட்டான்! மனசுதான் எல்லாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோடியின் ஓராண்டு சாதனைகளும் சவால்களும்

மிகுந்த எதிர்பார்ப்புகளுடன் அமைந்த பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான பாரதிய ஜனதா அரசு தன்னுடைய முதல் வருட பதவிக் காலத்தை நிறைவு செய்திருக்கிறது.

பிரதமராக பொறுப்பேற்றவுடன் நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற முதல் அமைச்சரவைக் கூட்டத்தில் **'கறுப்புப் பணத்தை'** வெளியில் கொண்டு வருவதற்கு உச்ச நீதிமன்றத்திலிருந்து ஓய்வு பெற்ற நீதிபதி எம்.பி. ஷா தலைமையில் **'சிறப்பு புலனாய்வுக் குழு'** அமைக்கப்பட்டது.

கறுப்புப் பணத்தை வெளிக் கொண்டுவர உச்சநீதிமன்றம், பிரதமராக இருந்த ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு ஆட்சியிலிருந்த போதே உத்தரவு பிறப்பித்தது.

ஆனால், அதுபற்றி நடவடிக்கை எதையும் அப்போது எடுக்கவில்லை. மோடியின் இந்த முதல் முடிவு இந்தியாவில் வெளிப்படையான நிர்வாகத்துக்கு மோடி முயற்சி செய்கிறார் என்ற செய்தியைப் பரப்பியது.

இதற்கு அடுத்ததுபோல் மத்திய அரசு நிர்வாகம் எதிர்பார்த்த வேகத்தில் செல்லவில்லை. ஏகப்பட்ட குழுக்கள் இருந்து கொண்டு அமைச்சர்களின் அதிகாரத்தை குறைக்கிறது. அல்லது அவர்களின் அதிகாரத்தில் குறுக்கீடு செய்கிறது என்ற குற்றச்சாட்டு இருந்தது.

அதை நீக்குவதற்காக ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசில் நியமிக்கப்பட்டிருந்த 21 'அமைச்சர்கள் குழுவை' கலைத்தார் மோடி.

அதுமட்டுமின்றி 9 **'அதிகார மளிக்கப்பட்ட அமைச்சரவைக் குழுக்களை'**யும் கலைத்தார். இது அந்த நேரத்தில் விமர்சனத்துக்குளாகியிருந்தாலும், அரசின் முடிவுகளை எடுப்பதில் மோடி அரசுக்கு இந்த நடவடிக்கை கைகொடுத்துள்ளது.

இந்த ஒரு வருடத்தில் சுமார் 141 அமைச்சரவை முடிவுகள் மோடி தலைமையிலான அமைச்சரவையால் எடுக்கப்பட்டிருக்கிறது.

அவற்றுள் ஒரு சில **'இரங்கல்'** தீர்மானம் என்றாலும், பெரும்பாலானவை நாட்டின் வளர்ச்சித் திட்டங்களுக்கான நடவடிக்கைகள் என்றே சொல்ல முடியும்.

உள்நாட்டில் இந்த இரு அதிரடி நடவடிக்கைகளும் அமைச்சரவையின் செயற்பாட்டில் வித்தியாசமான வேகத்தைக் கொடுத்தது மட்டுமின்றி, மத்தியில் ஒரு செயற்படும் அரசு வந்திருக்கிறது என்ற தோற்றத்தை உருவாக்கியது.

அதன் பின்னர், 65 வருடங்களுக்கும் மேலிருந்த திட்ட கமிஷனை கலைத்தார் மோடி. அதற்குப் பதில் **'இந்தியாவை மாற்றும் தேசிய நிறுவனம்'** என்ற அமைப்பை உருவாக்கினார்.

திட்டக்குழுவில் இருப்பதுபோல் மாநில முதல்வர்கள் இதிலும் இடம்பெறுவார்கள் என்ற நோக்கில் பார்த்தால், மோடி அரசின் **'கூட்டுறவு கூட்டாட்சி'** என்ற கொள்கைக் கோட்பாட்டின் வழி வந்தது.

இதற்கு பிரதமர்தான் தலைவராக இருப்பார் என்றும் நாட்டின் பொருளாதார வளர்ச்சித் திட்டங்களுக்கு உத்வேகம் கொடுப்பதற்கு இந்த அமைப்பு வழி வகுக்கும் என்றும் கொள்கை விளக்கம் கொடுக்கப்பட்டது.

**'மைனாரிட்டி மக்களின் உரிமைகள்'** பா.ஜ.க. அரசில் சவாலாக இருக்கும் என்ற பிரசாரம் மேற்கொள்ளப்பட்டது.

அந்த நோக்கில் சில இந்துத்துவா அமைப்புகள் பிரசாரத்தில் ஈடுபட்டாலும் அரசு ரீதியில் பிரதமர் நரேந்திரமோடி அப்படியொரு சூழ்நிலை ஏற்பட அனுமதிக்க விரும்பவில்லை என்றே தெரிகிறது.

குறிப்பாக இந்தியா வந்த அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவே, **'இந்திய அரசியல் சட்டத்திலுள்ள மத சுதந்திரம் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும்'** என்று கூறியதற்கு, பிரதமர் நரேந்திரமோடி அதி முக்கியத்துவம் கொடுக்கவே விரும்புகிறார். அதனால்தான் சிறுபான்மை அமைப்புகளின் நிர்வாகிகளை அடிக்கடி சந்தித்துப் பேசுகிறார்.

**'அனைத்து மக்களும் சமம்'** என்பதுதான் என் அரசின் இலக்கு என்பதை தெளிவுபடுத்துகிறார். எல்லாவற்றிற்கும் மேலாக சிறுபான்மையினரின் பொருளாதார மேம்பாட்டு நடவடிக்கைகளை அதிகரிக்க **'மைனாரிட்டி டெவலப்மென்ட் மற்றும் பைனான்ஸ் கார்ப்பரேஷனின்'** மூலதனத்தை ஆயிரத்தி ஐந்நூறு கோடியிலிருந்து நூறு சதவீதம் அதிகரித்து 3 ஆயிரம் கோடியாக உயர்த்தியிருக்கிறார்.

**'சிறுபான்மையினரின் நலனிலும் நான் அக்கறை கொண்டுள்ளேன்'** என்பதை இதை விட தெளிவாக பா.ஜ.க. தலைமையில் உள்ள ஓர் அரசால் தெளிவுபடுத்த முடியாது என்றே நடுநிலையாளர்கள் கருதுகிறார்கள்.

பிரதமர் மோடியின், **'மேக் இன் இந்தியா' 'டிஜிட்டல் இந்தியா' 'ஜன்தன் யோஜனா' 'ஸ்வச் பாரத்' 'ஸ்கில் டெவலப்மென்ட்' 'ஸ்மார்ட் சிட்டி'**- இப்படி மக்களைக் கவர்ந்துள்ள திட்டங்கள் ஏராளம்.

இவற்றில் குறிப்பாக **'மேக் இன் இந்தியா'** கொள்கையின் அடிப்படையில் இந்தியாவில் தங்கள் நிறுவனங்களை ஏற்படுத்த பன்னாட்டு நிறுவனங்கள் போட்டி போடுகின்றன என்ற நற்செய்தி மோடி ஆட்சியின் ஓராண்டு கால சாதனை.

இந்தியாவில் முதன் முதலாக பிரதமர் ஒருவரே **'தூய்மை திட்டத்தை'** தொடக்கி வைத்த தன் தாக்கத்தை நாடு முழுவதும் பார்க்க முடிகிறது. வட மாநிலங்கள் சிலவற்றில் மாப்பிள்ளையொருவர் **'எனக்கு வரதட்சனை வேண்டாம். பெண் வீட்டில் கழிப்பிட வசதிகள் செய்து வையுங்கள். அதுவே போதும்'** என்று கூறும் அளவிற்கு பிரதமர் மோடியின் 'ஸ்வச் பாரத்' திட்டம் படு பிரபல்யமாகியிருக்கிறது.

'ஜன்தான் யோஜனா' -அதாவது வங்கிக் கணக்குகள் ஓப்பன் பண்ணுவது என்ற இந்த திட்டத்தின் கீழ் செய்யப்பட்ட பிரதமரின் பிரச்சாரம் கைமேல் பலன் கொடுத்தது.

இந்தியாவிலுள்ள 14.99 கோடி பேர் வங்கிக் கணக்குகளை தொடக்கியிருக்கிறார்கள். அதுமட்டுமின்றி இந்த வங்கிக் கணக்குகள் மூலம் 15,800 கோடி ரூபாய் அளவுக்கு சேமிப்பு வந்திருக்கிறது.

அரசின் வங்கிக் கணக்கு ஓப்பன் பண்ணும் திட்டத்தின் கீழ் இப்படி கணக்குகள் தொடங்கப்பட்டு, சேமிப்பும் கிடைத்தது மோடி அரசின் ஓராண்டு கின்னஸ் சாதனையாக இருக்கிறது.

சென்ற ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசில் வெளிநாட்டு முதலீடுகளை அந்த அரசின் கடைசி கட்டத்தில் இரு விடயங்கள் பாதித்தன.

ஒன்று 2 ஜி மற்றும் நிலக்கரி பேர முறைகேட்டுப் புகார்கள். இந்திய கணக்காயம் கொடுத்த 'லட்சம் கோடி நஷ்டம்' என்ற புள்ளி விவரம் பா.ஜ.க. உள்ளிட்ட எதிர்கட்சிகளால் ஊழல் போலவே சித்தரிக்கப்பட்டது.

இதனால் இந்தியா மிகப் பெரிய ஊழல் நாடு போலிருக்கிறது என்ற சந்தேகத்தை உலக நாடுகள் குறிப்பாக இந்தியாவில் முதலீடு செய்ய விரும்பும் நாடுகள் மத்தியில் ஏற்படுத்தியது.

(தொடரும்)



எம்.காசிநாதன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்ம ஞானத்தைத் தேடி

ஆன்மீகம் 23

## பொறாமையிலிருந்து விடுதலை!


...அதனால் இதுபோன்ற விடயங்களைச் சொல்லாதீர்கள். அதற்குப் பதிலாக, நான் எப்பொழுதும் எல்லாரிடமும் பரிவுடன் இருக்கிறேன் என்று சொல்லிக்கொள்ளுங்கள். பொறாமை என்ற வார்த்தை யையே உபயோகப்படுத்தாதீர்கள்.

ஒரு உணர்ச்சியை மறுப்பதன் மூலம் நீங்கள் விரும்புவதைச் சாதிக்க முடியாது. அதே சூழ்நிலைக்கேற்றவாறு முழுவதும் நேர்மறையாக ஏதேனும் சொல்லுங்கள், அவ்வளவே.

மேலும் பொறாமையைத் தவிர்ப்பதற்கோ அல்லது அதிலிருந்து தப்பி ஓடுவதற்கோ பதிலாக அதை முழு விழிப்புணர்வுடன் கடந்து செல்லுங்கள்.

அதைத் தவிர்க்க முற்பட்டால் அது பிறிதொரு சமயத்தில் முன்னை விட அதிக தீவிரத்துடன் உங்களைத் தாக்கும்.

ஒரு விடயத்தை ஆழமான விழிப்புணர்வுடன் மனதில் வையுங்கள்.... பொறாமை உங்களுடைய உண்மையை இயல்பல்ல. பொறாமையை உங்களுக்குக் கற்றுக்கொடுத்தது சமூகமே.



பொறாமை நீங்களல்ல என்பதில் நம்பிக்கை வையுங்கள். அதுவே போதுமானது. பிறகு தானாகவே நீங்கள் அதில் சிக்கிக் கொள்ளாமல் அதைக் கண்டு நகைப்பீர்கள். அதைக் கண்டு நகைக்க முடியுமானால், அதில் பங்கெடுத்துக்கொள்வதற்குப் பதில், அதைச் சாட்சியாக இருந்து கவனிக்கத் தொடங்கியிருக்கிறீர்கள் என்று பொருள். உங்களால் சாட்சியாக இருக்க முடியுமானால், எதையும் கடந்து செல்ல சுலபமாகி விடும்.

மேலும் இந்தப் பிரபஞ்ச இருப்புத் தன்மை முழுவதுமே ஒரு தெய்வீக விளையாட்டைத் தவிர வேறல்ல என்பதைப் பார்த்தீர்களானால், பெயரளவிலான இந்தப் பொறாமையுணர்வும் ஒரு தெய்வீக விளையாட்டுத்தான், அதில் சிறிதளவும் உண்மையில்லை என்பதைப் பார்க்க முடியும்.

பொறாமையில் சிக்கிக்கொள்ளாமல் இதை வெறுமனே வெளியில் ஒரு பொருளாகப் பாருங்கள். பிறகு தானாகவே அது உங்களிடம் தன் சக்தியை இழந்துவிடும்.

நீங்கள் தனித்துவம் வாய்ந்தவர் என்பதையும் உங்களைப்போல் இவ்வுலகில் வேறு யாரும் இல்லை என்பதையும் நீங்கள் புரிந்துகொண்டீர்களானால் உங்களுடைய ஒப்பிடும் இயல்பு அர்த்தமற்றதாகி, நீங்கள் தானாகவே பொறாமைப்படுவதை நிறுத்துவிடுவீர்கள்.

பிரபஞ்ச இருப்புத் தன்மை ஒவ்வொருவரையும் ஒவ்வொன்றையும் சமமாகவே நேசிக்கிறது என்பதைப் புரிந்து கொள்ள முயற்சி செய்யுங்கள்.

ஸ்வாமிஜி... குருமார்கள் மீண்டும் மீண்டும் நம்மிடம் பொறாமையற்ற அன்பு, நன்றாகப் புரிந்துகொள்ளும் தன்மை, மற்றவர்களை எடைபோடாத மனப்பாங்கு போன்ற குணங்களை தூண்ட முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். ஆயினும் ஏன் இன்னும் நம்மிடம் புரிந்துகொள்ளுதல் நிகழவில்லை.

பாருங்கள், இதில் இரண்டு விடயங்கள் இருக்கின்றன. நாம் குருமார்களின் கொள்கைகளைப் பற்றிக்கொண்டு உருமாற்றமடைவதற்குச் சிரத்தையுடன் முயற்சி செய்வோமாயின் சரியான இழையைப் பிடித்து விட்டோம். (தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி



## இயற்கையான அழகு எது?

ஒரு காலத்தில் நரை முடியை மறைப்பதற்காகத் தான் தலைக்கு கலரிங் செய்தார்கள். ஆனால் இன்றைய இளம் பெண்கள் தங்களை அழகாக காண்பிப்பதற்காக சிவப்பு, பிறவுண், காப்பர், கேல்ட் என்று ஒருவிதமாக கலரிங் செய்து கொள்கிறார்கள்.

இந்த கலரிங்கில் இரண்டு வகை உண்டு. ஒன்று பேர்மனன்ட் என்கிற நிரந்தர கலரிங். மற்றொன்று செமிபேர்மனன்ட் என்கிற தற்காலிக வகை.

நிரந்தர முறைப்படி கலரிங் செய்தால் கூந்தலில் அப்படியே அந்த நிறம் இருக்கும். முடி வெட்டும் போதுதான் அவை மறையும். இரண்டாவது வகை கலரிங் தற்காலிக மானது. இது கூந்தலை நீரில் அலச அலச கலரிங் போய்விடும்.

உண்மையைச் சொல்ல வேண்டுமானால் இந்த இரண்டாவது முறை தான் ஆரோக்கியத்திற்கு அவ்வளவாக தீங்கு விளைவிக்காதது. முதல் வகையில் ஆபத்துக்கள் அதிகம். காரணம், அதில் செய்யப்படும் கலரிங் கிரீமில் அமோனியா அதிகம் சேர்க்கப்பட்டு இருக்கும். அதனால் தலைமுடிக்கு நிறைய பிரச்சினைகள் வரும். முடி உடைந்து போவதோடு கண்களுக்கும் பாதிப்பு ஏற்படும்.

சிலருக்கு அலர்ஜி ஏற்பட்டு, தோல் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் வரும் வாய்ப்புக்கள் அதிகம் உண்டு. அதனால் நிரந்தர கலரிங் செய்வது நல்லதல்ல. அப்படி என்றால் தற்காலிக கலரிங் தாராளமாக செய்யலாமா? என்றால் அதிலும் ஆபத்து இருக்கிறது. அதையும் அளவோடுதான் செய்ய வேண்டும். வருடத்துக்கு ஒரு முறையோ, இரண்டு முறையோ செய்தால் பரவாயில்லை. அத்தோடு இத்தகைய அழகுபடுத்தலில் கவனமாக செயற்படுவது மிகவும் அவசியம்.




## முருங்கைக் கீரை சூப்



தே.பொருட்கள்:

முருங்கைக் கீரை- 1/2 கப்
சின்ன வெங்காயம்-1/2 கப் (நறுக்கியது)
தக்காளி- 3 (நறுக்கியது)
பெருங்காயம்- சிறிது
உப்பு- தே.அளவு
வெண்ணெய்-1 டே.ஸ்பூன்
கார்ன்ஃப்ளவர்- 1 டே.ஸ்பூன், மிளகுத்தூள்- தே.அளவு

செய்முறை

பாத்திரத்தில் வெண்ணெயை உருக்கவும். அதில் வெங்காயம், சேர்த்து வதக்கவும். பிறகு தக்காளி, பெருங்காயம், உப்புச் சேர்த்து, தக்காளி நன்கு கரைகிற வரை வதக்கவும்.

முருங்கைக் கீரையை சேர்த்து, பச்சை வாடை போகும்வரை வதக்கவும். 3 கப் தண்ணீர் விட்டு கொதிக்க விடவும்.

கார்ன்ஃப்ளாரை சிறிது வெதுவெதுப்பான தண்ணீரில் கரைத்து கொதிக்கிற சூப்பில் கொட்டிக் கலக்கவும்.

சூப் கெட்டியானதும், மிளகு தூள் சேர்த்துக் கலந்து சூடாகப் பரிமாறவும்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சுதந்திரக் கட்சியுடன் இணைந்து நான் மீண்டும் ஆட்சியமைப்பேன்

## மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு)

**நான் பணத்தை எனது வீட்டுக்கு கொண்டு செல்லவில்லை. பாதைகளின் அபிவிருத்திக்கே செலவு செய்தேன். என்மீது பொய்யான குற்றச்சாட்டுக் களை சுமத்தி வருகின்றார்கள் என தெரி வித்துள்ள முன்னாள் ஜனாதிபதி மகி ந்த ராஜபக்ஷ மீண்டும் சுதந்திரக் கட்சி குழுவினருடன் இணைந்து ஆட்சியை அமைப்பேன் என தெரிவித்துள்ளார்.**



இரத்தினபுரி மாவட்டத்தின் கலவான கொஸ்வத்தை போதிராம விகாரையில் இடம்பெற்ற மத வழிபாட்டு நிகழ்வில் கலந்து கொண் டதன் பின்னர் உரை யாற்று கையி லேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரை யாற்றுகையில், நூறு நாள் ஆட்சி க்கு வந்த இந்த அரசாங்கம் நூறு பொய்களை கூறியுள்ளது. வீதிகளை அபிவிருத்தி செய்வதற்கு ஒதுக்க ப்பட்ட நிதிகளை நான் கொள்ளைய டித்துள்ளதாக குற்றம் சுமத்தி வருகி ன்றார்கள். அந்த பணத்தை நான் மெதமுலனவுக்கு கொண்டு செல்ல வில்லை. அப்பணத்தில்பாதியை தான் ரணிலின் ஐக்கிய தேசியக் கட்சி யின் தலைவர் பதவியை பாதுகா த்து கொடுப்பதற்காக ஸ்ரீகொத்த வுக்கு முன்பாகவுள்ள வீதிக்கு காப்பெற்செய்யப்பட்டுள்ளது. அதனை அவர்கள் மறந்துவிட்டார்கள். எதிர்வரும் காலத்தில் சு.க. குழுவி னர்களுடன் புதிய அரசாங்கத்தை அமைப்பேன்.

வேலை தெரியாத டாசன்கள் என்னை தேர்தலுக்கு முன்பு சிறை யில் அடைப்பதற்கு முயற்சி செய்கி ன்றார்கள். நான் இதற்கு முன்பு நடைபெற்ற தேர்தல்களில் மூன்று மாதம் சிறையில் இருந்தவன். பேய்களுக்கு பயந்தால் சுடுகாட்டில் வீடு கட்டமுடியாது. நான் இதற்கு பயந்தவன் அல்ல.

கடந்த காலத்தில் இருந்த எமது அரசாங்கம் நாட்டை அபிவிருத்தி செய்தது. அரச சேவையாளர்களு க்கு மோட்டார் வண்டி வழங்கியது. தற்போது அந்த வேலைத்திட்ட ங்கள் எங்கே? தேயிலை, இறப்பர் விலைகள் அதிகரிக்கப்படவுள்ள தாக கூறினார்கள். தற்போது அவற் றின் விலை உயர்த்தப்பட்டுள்ளதா?

தேயிலைக்கு 80 ரூபாவும் இறப்பர் 300 ரூபாவாகவும் உயர்த் தப்படவுள்ளதாக கூறினார்கள். தற்போது அவர்கள் கூறியது நிறை வேற்றப்பட்டுள்ளதா? மக்களுக்கு இந்த அரசாங்கம் என்ன செய்தது. இதை மக்கள் தற்போது புரிந்த வண்ணம் உள்ளார்கள்.

இன்று நடிகை ஒருவர் கூறுகி ன்றார் நாட்டில் பணம் இல்லை என்று. நாட்டின் அமைச்சர் ஒருவர் கூறுகின்றார் பணம் இருப்பதாக இது புதுமையான கதையாகவுள்ளது. திறைசேரியில் கோடிக்கணக்கான பணம் அச்சிடப்பட்டுள்ளது. இந்த நாட்டின் உரிமை இல்லாத ஒருவ ரால் கையொப்பம் இடப்பட்டுள்ளது.

எமது நாட்டின் மத்திய வங்கி தலைவராக நியமிக்கப்பட்டுள்ளவர் எமது நாட்டை சேர்ந்தவர் அல்ல. அவர் சிங்கப்பூரை சேர்ந்தவர். மத்திய வங்கி தலைவராக நியமிக் கப்படுபவர்எமது நாட்டின்உரிமையை பெற்றிருக்க வேண்டும். தற் போது நியமிக்கப்பட்டுள்ளவர் இலங்கை நாட்டின் உரிமை இல்லாத ஒருவர். எனவேதான் அவர் மத்திய வங்கி தலைவர் பதவியை ஏற்றதற்காக சத்தியப்பிரமாணம் செய்யவில்லை. இப்படிபட்ட ஒருவர் பணத்திற்கு கையொப்பமிடுவது பெரிய தவறாகும். இது குறித்து தற்போது பிரச்சி னை களும் எழுந் துள்ளது என்று முன் னாள் ஜனாதி பதி மகிந்த ராஜபக்ஷ மேலும் தெரிவித்தார். (இ)

# பண்டாரநாயக்கவைப் போன்று ஜனாதிபதியைக் கொல்ல முயற்சி

முன்னாள் பிரதமர் எஸ்.டபிள்யூ. ஆர்.டி பண்டாரநாயக்கவைப் போன்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசே னவை கொலை செய்வார்களோ என அஞ்சுவதாக அமைச்சர் விஜித் விஜய முனி டி சொய்ஸா தெரிவித் துள்ளார்.

நாட்டில் உழைக்கும் வர்க்கத் தில் தலைவர்கள் உருவாகவில்லை. தற்போதைக்கு அவ்வாறு உரு வான தலைவர்களில் ஒருவர் பிரே மதாசவேயாகும். அவரைக் கொலை செய்து விட்டார்கள்.

எமது கட்சியில் உருவான தலை வர்கள் செல்வந்தர்கள், பெரும் பணக்காரர்கள். எனினும் இன்று எமது கட்சியிலும் உழைக்கும் வர்க் கத்தைச் சேர்ந்த ஓர் தலைவர் உருவாகியுள்ளார்.

நான் கால்களை நேராக வைத் துக் கொண்டு மகிந்த, சந்திரிகா மற்றும் சிறிமாவோ ஆகியோருக்கு கடமைகளை செய்திருக்கின்றேன்.

தற்போது மைத்திரிபால சிறிசே னவுக்கும் கடமைகளை செய்வேன்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசே னவை பாதுகாக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் விஜய முனி டி சொய்ஸா, மொனராகலில் அண்மையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் தெரிவித்துள்ளார். (இ-5)

# கனடாவில் புகைபிடிப்பவர்களுக்கு 80ஆயிரம் கோடி ரூபாய் இழப்பீடு

## சிகரெட் நிறுவனங்களுக்கு உத்தரவு

கனடா நாட்டில் க்யுபெக் பகுதியில் வாழும் புகைபிடிப்பாளர்களுக்கு 12.4 பில்லியன் அமெரிக்க டொலர் களை (சுமார் 80ஆயிரம் கோடி ரூ.) அங்குள்ள சிகரெட் தயாரிப்பு நிறுவனங்கள் இழப்பீடாக வழங்க அந்நாட்டு நீதிமன்றம் உத்தர விட்டுள்ளது.

புகைபிடிப்பதால் ஏற்படும் பாதி ப்புக்களை நுகர்வோர்களுக்கு அந்த நிறுவனங்கள் முறையாகக் கூறாத குற்றத்துக்காக இந்த தண்டனை விதிக்கப்பட்டுள்ளது என்று தெரிவி க்கப்பட்டுள்ளது. இம்பீரியல் டொபே க்கோ, ரோத்மன்ஸ் பென்சன் அண்ட் ஹெட்ஜஸ் மற்றும் ஜேடிஐ மெக்டொனால்ட் ஆகிய சிகரெட் தயாரிப்பு நிறுவனங்கள் மீது இந்த தண்டனை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

1998ஆம் ஆண்டே இதுதொடர் பான வழக்கு பதிவு செய்யப்பட்டது. ஆனால் மிகச் சமீபத்தில்தான் அந்த வழக்கு நீதிமன்றத்தில் விசாரிக்கப்ப ட்டுள்ளது. கனடா நாட்டு வரலாற்றில் இந்த அளவுக்குப் பெரிய அபராதத் தொகை தண்டனையாக விதிக்கப்ப ட்டதில்லை என்று கூறப்படுகிறது.

புகைப்பதால் ஏற்படும் பாதிப்பு களை தங்கள் தயாரிப்புகள் மூலம் முறையாக நுகர்வோர்களுக்கு எச்சரிக்கை விடுக்கவில்லை என்று மேற்கண்ட நிறுவனங்கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இந்தத் தீர்ப்புக்கு எதிர்ப்பு தெரிவித்துள்ள நிறுவனங்கள், மேல் முறையீடு செய்யவுள்ளதாகக் கூறப்படுகிறது.

கனடாவில் சிகரெட் பக்கெட்டுகளில் புகைப்பதால் ஏற்படும் பாதிப்பு கள் குறி த்து கடந்த 40 ஆண்டுக ளாக எச்சரிக் கை செய்யப்பட்டு வருகிறது என்று ஜேடிஐ மெக்டொனால்ட் நிறுவனம் கூறியுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# உலக சுற்றாடல் தினநிகழ்வு நாளை காரைநகரில் நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.காரைநகர் கலாநிதி ஆ.தியா கராஜா மத்திய மகாவித்தியாலயத் தில் நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30மணிக்கு உலக சுற்றாடல் தின நிகழ்வு நடைபெறவுள்ளது. சுற்றாடல் முன்னோடிக் குழுத்தலைவர் அ.பிர ணவரூபன் தலைமையில் நடைபெ றும் இந்நிகழ்வில் கலை நிகழ்வு மற்றும் 'பசுமை' எனும் சஞ்சிகை வெளியீடும் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக வடமாகாண கல்வித்திணை க்கள சுற்றாடல் முன்னோடி ஒருங்கி ணை ப்பு உத்தியோகத்தர் எஸ்.சிவன ருள்ராஜா பிரதமவிருந்தினராகவும் யாழ். மாவட்ட சுற்றாடல் முன்னோடி ஆலோசகர் பொ.சண்முகதேவன் சிறப்பு விருந்தினராகவும் காரைநகர் கோட்டக்கல் விப் பணிப்பாளர் பு.விக்கினேஸ் வரன், ஓய்வு நிலை வைத்திய அதிகாரி க.நடராஜா, பிர தேச சுற்றாடல் உத்தியோகத்தர் திருமதி வி.கல்யாணி ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து கொள் ளவுள்ளனர். (இ-5)

# பிரிவுத்துயர் பகிர்வு



### திருமதி வேலுப்பிள்ளை பரமேஸ்வரி

குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் மதவடி ஒழுங்கை சுதுமலை வடக்கு மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை பரமேஸ்வரி கடந்த 1ஆம் திகதி திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று மு.ப. 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெ ற்று பின்னர் பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### திருமதி சிதம்பரப்பிள்ளை அற்புதம்

வட்டுக்கோட்டை கிழக்கைப் பிறப்பி டமாகவும் வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட சிதம் பரப்பிள்ளை அற்புதம் கடந்த 1ஆம் திகதி திங்கட் கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று காலை 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### திருமதி சிவானந்தன் சாந்தகுமாரி

நவிண்டிலைப் பிறப்பிடமாகவும் சுழிபுரம், லண்டன் Croydon ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட சிவானந்தன் சாந்தகுமாரி கடந்த 28ஆம் திகதி வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை8 மணி தொடக்கம் மு.ப10.30 மணிவரை Oshwal Hall, 1 Campbell Rd Croydon, Greater London CRO 2SQ United Kingdom என்னும் முகவரி யில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### கந்தசாமி கிருபாகரன்

கோப்பாய் வடக்கு பிராம்பற்றை யைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சி உருத்திரபுரத்தை வசிப்பிடமாகவும் ஜேர் மனியை தற்காலிக வசிப்பிட மாகவும் கொண்ட கந்தசாமி கிருபாகரன் கடந்த 28ஆம் திகதி வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று காலை 9.30 மணி தொடக்கம் பி.ப.1 மணிவரை Sozialer Bestattungsdienst GmbH, Weinsberger Strabe 47,74072 Heilbronn, Germany என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### ஆறுமுகம் மகாலிங்கம்

புங்குடுதீவு 9ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சி, டென்மார்க், லண்டன் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் மகாலிங்கம் கடந்த 1ஆம் திகதி திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப1.15 மணி தொடக்கம் பி.ப3.30 மணிவரை EKTA Centre,3664 Stag Lane, Kingsbury, London NW9 9AA UK என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாகிஸ்தான்-ஆப்கானிஸ்தானில்

# ஒரு இலட்சத்து 50 ஆயிரம் பேர் தீவிரவாதிகளின் மோதலில் பலி!

**(வோஷிங்டன்)**

**பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ் தானில் தீவிரவாதிகளின் சண்டையில் ஒன்றரை இலட்சம் பேர் பலியாகியுள்ள தாக புதிய ஆய்வு அறிக்கையில் அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது.**

ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தானில் தீவிரவாதம் குறித்தும், அதனால் நடைபெறும் சண்டையில் பலியானோர் குறித்தும் அமெரிக்காவின் பிரவுன் பல்கலைக்கழகத்தின் வாட்சன் சர்வதேச கல்வி நிறுவனம் ஆய்வு மேற்கொண்டது.

அமெரிக்காவில் அல்கொய்தா தீவிரவாதிகள் தாக்குதலுக்கு பிறகு கடந்த 2001ஆம் ஆண்டில் ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் ஆட்சி கவிழ்க்கப்பட்டது. தலிபான் தீவிரவாதிகளுடன் அமெரிக்கா தலைமையிலான நேட்டோ படைகள் சண்டையில் ஈடுபட்டன.

அதில் பலர் உயிரிழந்தனர்.



ஏராளமானவர்கள் காயம் அடைந்தனர். இந்த நிலையில் இந்த ஆண்டு இறுதிக்குள் படைகளை படிப்படியாக வாபஸ் பெறுவதாக அமெரிக்கா அறிவித்தது. இருந்தும் ஆப்கானிஸ்தானில் சண்டை இன்னும் முடியவில்லை. தொடர்கதையாகவேயுள்ளது.

பாகிஸ்தான் தீவிரவாதிகளுடன் புகலிடமாகவும், சொர்க்கமாகவும் திகழ்கிறது. வடமேற்கு பாகிஸ்தானில் தலிபான்கள், அல்கொய்தா உள்ளிட்ட தீவிரவாதகிளின் ஆதிக்கம் மேலோங்கியுள்ளது. வெடிகுண்டு தாக்குதல், இராணுவத்துடன் சண்டை என அங்கு வன்முறை தினமும் ஒரு வாடிக்கையாகிவிட்டது.


வன்முறை சம்பவங்களால் இராணுவ வீரர்கள், பத்திரிகையாளர்கள், பொதுமக்கள், உதவியாளர்கள் மற்றும் நேட்டோ படை வீரர்கள், வெளிநாட்டு உதவி குழுக்களை சேர்ந்தவர்கள் என பலர் உயிரிழந்துள்ளனர். ஏராள மானவர்கள் காயம் அடைந்துள்ளனர்.

பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தானில் தீவிரவாதிகளுடனான சண்டையில் கடந்த 2001ஆம் ஆண்டு முதல் இதுவரை 1 இலட்சத்து 50 ஆயிரம் பேர் பலியாகி யுள்ளனர். அவர்களில்பொது மக்களும் இரா ணுவ வீரர்களும் அடங்குவர். இவர்கள் தவிர ஒரு லட்சத்து 62 ஆயிரம் பேர் காயம் அடைந்துள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் உடல்உறுப்புகளை இழந்துள்ளனர் என மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (இ-5)

# தமிழக மீனவர்கள் விவகாரம்; மீண்டும் களத்தில் ஜெயலலிதா

## பிரதமருக்கு கடிதம் அனுப்பிவைப்பு

இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள 14 இந்திய மீனவர்களை மீட்கக்கோரி பிரதமர் மோடிக்கு, தமிழக முதல்வர் ஜெயலலிதா கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.



அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

45 நாட்கள் மீன்பிடி தடை காலம் முடிந்து மீன்பிடி காலம் தொடங்கிய ஜூன் முதலாம் திகதியன்று தமிழகத்தில் இருந்து 3 மீன்பிடி படகுகளில் மீன்பிடிக்கச் சென்ற மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்து காவலில் அடைத்திருப்பதை வேதனையுடன் கூறிக்கொள்கிறேன்.

முதலாம் திகதி 3 படகுகளில் இராமேஸ்வரம் மீன்பிடி தளத்தில் இருந்து கடலுக்குச் சென்ற 14 மீனவர்கள் கைது செய்யப்பட்டு இலங்கை சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இதுவரையுள்ள கணக்குப்படி, இலங்கை அரசின் பிடியில் எங்கள் மீனவர்களின் 18 படகுகள் வைக்கப்பட்டுள்ளன.

கடந்த ஜூன் 2004ஆம் ஆண்டில் இருந்து 80 படகுகள் பிடிக்கப்பட்டன. அவற்றில் 16 படகுகள் மொத்தமும் நாசமாகிவிட்டன. ஏழை மீன வர்களின் வாழ்வாதாரமே அந்தப் படகுகள்தான். கைதாகும் தமிழக மீனவர்களை விடுவிக்கும் இல ங்கை அரசு, அவர்களின் படகு களை மட்டும் வேண்டுமென்றே விடு விக்காமல் வைத்து விடுகின்றனர்.

இப்படி அவற்றை நீண்டகாலமாக உபயோகிக்காமல்விட்டுவிட்டால் அந்தப் படகுகள் நாசமடைவதோடு, ஏழை மீனவர்களுக்கு பெருத்த நட்டத்தை ஏற்படுத்தி விடுகிறது.

கச்சதீவு அருகே பாக்குநீரிணை பாரம்பரிய பகுதியில் மீன்பிடிக்கச் செல்லும் தமிழ்நாட்டு அப்பாவி மீனவர்களை ஆயுதமற்ற நிலையில் கைது செய்வது, அளவில்லா அதிர்ச்சியை தமிழக மீனவர்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது.

1974 மற்றும் 1976ஆம் ஆண்டுகளில் இந்தியா இலங்கையிடையே உருவாக்கப்பட்ட அரசியலமைப்பு சாராத ஒப்பந்தம் இரத்து செய்யப்பட்டு விடும் என்பதை எனது அரசு ஆணித்தரமாக நம்புகிறது.

கச்சதீவு ஒப்பந்தம் குறித்து உறுதியான ஆதாரங்களுடன் உயர் நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் இலங்கை, இந்தியா இடையே ஏற்பட்ட சர்வதேச கடல் எல்லை விவகாரத்தை, முடிந்து போன ஒன்றாக மத்திய அரசு கருதக்கூடாது.

கச்சதீவு தொடர்பாக நான் தனிப்பட்ட முறையில் உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கில் தமிழக அரசு இணைந்துள்ளது.

அரசியல் சாசனத்தில் போதிய திருத்தம் இல்லாத நிலையில், கச்சதீவுக்கான இலங்கை இந்திய ஒப்பந்தத்தையும் அதற்கான நிர்வாக ரீதியான ஆணையையும் இரத்து செய்ய வேண்டும் என்பதும், கச்சதீவை இந்தியாவுக்கு மீட்டுத் தர வேண்டும் என்பதே அந்த வழக்கின் கோரிக்கையாகும்.

புவியியல், கலாசாரம் மற்றும் வரலாற்று அடிப்படையில் இந்தியாவுக்கே கச்சதீவு சொந்தம் என்ப தும இலட்சக்கணக்கான தமிழக மீனவர்களின் நலனுக்காக அது மீட்கப்பட வேண்டும் என்பதும் தான் எ தும் எங்கள் நிலைப் பாடாக வுள்ளது.

மீனவர் நலனுக்காக எனது அரசு பல திட்டங்களை வகுத்தளித்துள்ளது. ஆழ்கடல் மீன்பிடிப்புக்கான மானியம் வழங்குதல், இராமநாதபுரம் மாவட்டம் மூக்கையூர், இராமேஸ்வரத்தில் உள்ள மீன்பிடி துறைமுக மேம்பாடு செய்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம்.

இது பாக்கு நீரிணைப் பகுதியில் மீன்பிடிப்பதில் உள்ள சிக்கலை குறைக்கும். இதற்காக 1,520 கோடி ரூ. கேட்டு உங்களிடம் நான் கடந்த 3.6.14 அன்று மனு கொடுத்திருக்கிறேன்.

கால்நடை, பால்வளம், மீன்வளம், வேளாண்மை துறைகள் குறித்த மீனாகுமாரியின் அறிக்கையை மத்திய அரசு செயற்படுத்தவில்லை என்பதை இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

மீன்பிடி விவகாரத்தில் ஒரு நிரந்தரத் தீர்வை ஏற்படுத்துவதற்காக இலங்கை இந்திய மீனவர்களுக்கிடையே பேச்சுவார்த்தையை நடத்தி வருகிறோம். இதில் தமிழகம் ஒரு சாதகமான நிலையை எடுத்துள்ளபோது, தமிழக மீனவர்கள் கைது செய்யப்படுவது இலங்கையால் தவிர்க்க முடியாததாக உள்ளது.


இதில் ஒரு உறுதியான முயற்சியை எடுத்து, மீன்பிடி பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வை ஏற்படுத்தும் முடிவை மத்திய அரசு கண்டுபிடிக்க வேண்டும்.

இலட்சக்கணக்கான தமிழக மீனவர்களின் வாழ்வாதாரம் காப்பாற்றப்படும் வகையில் காலக்கெடுவை நிர்ணயித்து தீர்வு காணப்படவேண்டும்.

இந்த பிரச்சினையில் நீங்கள் தனிப்பட்ட முறையில் தலையிட வேண்டும். இலங்கை அதிகாரிகளுடன் பேசி, 14 மீனவர்களையும் 18 படகுகளையும் மீட்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு வெளியுறவுத்துறை அமைச்சகத்துக்கு நீங்கள் உத்தரவிட வேண்டும். இவ்வாறு அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-5)

# பாக். வளர்ச்சியினை இந்தியா தடுக்கிறது

**பாகிஸ்தான் பிரதமர் குற்றச்சாட்டு**



பாகிஸ்தானின் வளர்ச்சியைத் தடுக்க சில எதிரிகள் முயற்சிப்பதாக, அந்நாட்டு பிரதமர் நவாஸ் ஷெரீப், இந்தியாவை மறைமுகமாக சாடியுள்ளார்.

குவெட்டா நகரில் பேசிய அவர், பாகிஸ்தானில் சீனா மேற்கொள்ளவுள்ள பொருளாதார வழித்தட திட்டத்தை இந்தியா எதிர்ப்பதையும் விமர்சித்தார்.

அண்மையில் சீனா சென்ற பிரதமர் மோடி, இத்திட்டத்தை கைவிடுமாறு கோரியதாகவும் ஆனால் அதனை சீனா நிராகரித்துவிட்டதாகவும் நவாஸ் ஷெரீப் குறிப்பிட்டார்.

இந்த விவகாரத்தில் விழிப்புடன் செயற்படுவது அவசியம் என கூறிய நவாஸ் ஷெரீப், சில எதிரிகள் பாகிஸ்தான் வளர்ச்சியைத் தடுக்க திட்டமிட்டிருப்பதாக இந்தியாவை மறைமுகமாக சாடியுள்ளார்.(இ-5)




# அமெரிக்கா செல்லும் இந்தியர்களின் எண்ணிக்கை 42 வீதம் அதிகரிக்கும்

அமெரிக்காவுக்கு சுற்றுலா வரும் இந்தியர்களின் எண்ணிக்கை நிகழாண்டில் 42 சதவீதம் அதிகரிக்கும் என்றும், கடந்த ஆண்டை விட 4 இலட்சத்துக்கும் அதிகமான இந்தியர்கள் இந்த ஆண்டில் அமெரிக்காவுக்கு வருவார்கள் என்றும் எதிர்பார்ப்பதாகவும் அமெரிக்க அரசின் வர்த்தகத்துறை தெரிவித்தது.

இதுகுறித்து அத்துறை கடந்த திங்கட்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நிகழாண்டில் சீனா, கொலம்பியா உட்பட பல்வேறு நாடுகளிலிருந்து சுற்றுலாப் பயணிகளாக அமெரிக்காவுக்கு வருகை புரிபவர்களின் எண்ணிக்கை சுமார் 7.7 கோடியைத் தொடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது கடந்த ஆண்டை விட 3.6 சதவீதம் அதிகமாகும் என்று அந்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து அந்நாட்டின் வர்த்தகத்துறை செயலர் பென்னி பிரித்ஸ்கெர் கூறியதாவது,

இந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஒரு கணக்கெடுப்பின் படி, உலகின் பல்வேறு நாடுகளிலிருந்து சுற்றுலாவுக்காக தேர்வு செய்யும் நாடுகளில் அமெரிக்கா முதன்மையாகத் திகழ்கிறது. இது தொடரும் பட்சத்தில் வரும் 2020 ஆம் ஆண்டில் அமெரிக்காவை பார்வையிடுபவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்.

அனைத்து நாட்டினரையும் அமெரிக்கா வரவேற்கிறது. அவர்களுக்கு சிறப்புச் சலுகைகளையும் வழங்குகிறோம். உலகின் பொருளாதாரம் மாறிவரும் வேளையில் வியாபாரத்திலும், பொருளாதாரத்திலும் வெற்றி பெற நாங்கள் சுற்றுலாத் துறையை ஊக்குவிக்கிறோம் என்று பென்னி பிரித்ஸ்கெர் தெரிவித்தார். (இ-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தற்கொலைப் படைத்தாக்குதலினால் நைஜீரியாவில் நேற்றும் 20 பேர் பலி

(மைடுகுரி)

**வடக்கு நைஜீரியாவின் மைடுகுரி நகரில் உள்ள மார்க்கெட் பகுதியில் நேற்று தற்கொலைப்படை தீவிரவாதி நடத்திய மனித குண்டுத்தாக்குதலில் அதிகமானவர்கள் பலியாகியுள்ளனர் எனத் தெரிய வருகிறது.**



நைஜீரியாவின் புதிய ஜனாதிபதியாக பொறுப்பேற்றுள்ள முஹம்மது புஹாரி, அந்நாட்டின் இராணுவ தலைமையகத்தை அபுஜாவில் இருந்து மைடுகுரி நகருக்கு மாறப்போவதாக கடந்த வெள்ளிக்கிழமை அறிவித்தார். மைடுகுரியில் போகோஹராம் மற்றும் இதர தீவிரவாத குழுக்கள் பெருமளவிலான தற்கொலைப்படை தாக்குதல்களை நடத்தி வருவதை தடுக்கவே இந்த முடிவு எடுக்கப்பட்டதாக கூறப்பட்டது.

இந்த முயற்சியை முறியடிக்கும் விதமாக மைடுகுரியில் தீவிரவாதிகள் தங்களது தாக்குதலை அதிகரித்துள்ளனர். நேற்று பிற்பகல் இங்குள்ள கால்நடை சந்தையில் தற்கொலைப்படை தீவிரவாதி நடத்திய மனித குண்டுத்தாக்குதலில் 20 இற்கும் அதிகமானோர் பலியாகியுள்ளதாக உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

நைஜீரியாவின் பெரிய நகரங்களின் ஒன்றான மைடுகுரி போகோஹராம் தீவிரவாதிகளின் பிறப்பிட நகரமாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)





## சர்வதேச காற்பந்து சம்மேளனத்தின் தலைவர் திடீரென பதவி விலகினார்

சர்வதேச காற்பந்து சம்மேளனத்தின் (FIFA) தலைவர் பதவியிலிருந்து விலகுவதாக செப் பிளட்டர் **(Sepp Blatter)** அறிவித்துள்ளார்.

ஜுரிச்சில் நேற்று அவசரமாகக் கூட்டப்பட்ட ஊடகவியலாளர்கள் சந்திப்பு ஒன்றிலேயே அவர் இதைத் தெரிவித்தார்.

அடுத்த தலைவரைத் தேர்ந்தெடுக்க ஒரு பொதுக்கூட்டம் இடம்பெற்று, அதில் முடிவெடுக்கப்படும் எனவும் அவர் அறிவித்தார்.

ஆறு நாட்களுக்கு முன்னர் அமெரிக்க புலனாய்வு அதிகாரிகள் ஜுரிக் ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்த பல சர்வதேச காற்பந்து சம்மேளன அதிகாரிகளை அதிரடியாக கைது செய்துள்ள நிலையிலும் செப் பிளட்டர் சர்வதேச காற்பந்து சம்மேளன அமைப்பின் தலைவராக ஐந்தாவது முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.



சர்வதேச காற்பந்து சம்மேளனத்தின் பல உயரதிகாரிகள் கையூட்டுப் பெற்றுக் கொண்டு வாக்குகளை அளித்தனர் என்பது உட்பட பல குற்றச்சாட்டுக்கள் அமெரிக்கப் புலனாய்வு அமைப்பால் சுமத்தப்பட்டு விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

ரஷ்யா மற்றும் கட்டாருக்கு உலகக் கிண்ண போட்டிகளை நடத்தும் வாய்ப்புகளை அளித்தது உட்பட பல சர்ச்சைகளில் சர்வதேச காற்பந்து சம்மேளனம் சிக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

## முஸ்லிம்களுக்கெதிரான போக்கை மியன்மார் அரசு கைவிடவேண்டும்

### அமெரிக்கா வலியுறுத்து

பல ஆண்டுகளாக இராணுவத்தின் பிடியிலிருந்து ஜனநாயக ஆட்சிக்கு முன்னேறிச் செல்லும் மியன்மார், சிறுபான்மையின ரோஹின்ஜா முஸ்லிம்களுக்கு எதிரான போக்கை மாற்றிக் கொள்ள வேண்டும் என்று அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா தெரிவித்துள்ளார்.

இராணுவ அடக்குமுறையால் பல ஆண்டுகளாக ஆட்சி செய்யப்பட்டு வந்த மியன்மாரில், 2011-ம் ஆண்டு நிகழ்ந்த மாற்றத்திலும் ஜனநாயக போக்குக்கும் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா ஆதரவு அளித்து வந்தார்.


இந்த நிலையில் தற்போது ஜனநாயகத்துக்கு எதிராக ரோஹின்ஜா முஸ்லிம் மக்களிடம் மியன்மார் அரசு காட்டும் போக்கை அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா கடுமையாக கண்டித்துள்ளார். தென்கிழக்கு ஆசிய நாடுகளின் தலைவர்கள் வோஷிங்டனில் ஒபாமாவை சந்தித்து இது குறித்து பேசினர்.

அப்போது இது குறித்து பேசிய ஒபாமா, " ஜனநாயக கொள்கையில் மியன்மார் வெற்றி பெற வேண்டுமானால், ரோஹின்ஜா மக்கள்மீது பாரபட்சம் காட்டும் போக்கை அவர்கள் மாற்றிக் கொள்ள வேண்டும்.

நான் ஒரு ரோஹின்ஜாஇனத்தவராக இருந்திருந்தால், நான் பிறந்த இடத்தில் வாழ்வதையே விரும்புவேன். ஆனால் எனது அரசு என்னை பாதுகாக்கவும் எனது மக்கள் என்னை சகோதரத்துவத்தோடு நடத்தவில்லை என்றால் அது எனது வாழ்வாதாரத்தை பாதிக்க செய்யும்.

ரோஹின்ஜா மக்களின் பிரச்சினையும் இதுதான்.

இது ஏன் முக்கியம் என்றால், ஜனநாயக பாதைக்கு திரும்புவத



ற்கு, ரோஹின்ஜா மக்கள் எப்படி நடத்தப்படுகிறார்கள் என்பது கவனத்தில் கொள்ளப்படவேண்டியது என்றார்.

மேற்கு மியன்மரில் சுமார் 13 இலட்சம் சிறுபான்மையின ரோஹின்ஜா மக்கள் வாழ்கின்றனர். இவர்களுக்கு அந்நாட்டில் பெரும்பாலும் குடியுரிமை மறுக்கப்படுகிறது. இவர்கள் தென்கிழக்கு ஆசிய நாடுகளிலிருந்து குடியேறியவர்கள் என்றும் வங்கதேசத்தவர்கள் என்றும் மியன்மார் தரப்பினர் குறிப்பிடுவதால் இவர்களுக்கு சிறுபான்மையின அந்தஸ்தை வழங்க அந்நாடு மறுக்கிறது. இதனால் அவர்களது வாழ்வாதாரத்துக்கு பிரச்சினை நிலவுகிறது.

தேசிய மக்கள் தொகை கணக்கீட்டிலும் இவர்கள் இணைக்கப்படாததால், போக்குவரத்து கட்டுப்பாடுகள், வேலை வாய்ப்பு என பிரச்சினைகளுக்கு ஆளாகி கடல் வழியாக பக்கத்து நாடுகளான மலேசியா, இந்தோனேசியா போன்ற நாடுகளுக்கு ஆபத்தான நிலையில் பயணித்து உயிரிழப்புக்கும் துன்புறுத்தலுக்கும் ஆளாகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## ஆப்கானில் பயங்கரவாதிகளால் 9வெளிநாட்டு தொண்டுநிறுவன ஊழியர்கள் சுட்டுப் படுகொலை

ஆப்கானிஸ்தானில் செக் குடியரசு நாட்டைச் சேர்ந்த 9 தொண்டு நிறுவன ஊழியர்களை பயங்கரவாதிகள் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை சுட்டுப்படுகொலை செய்துள்ளனர்.

அந்த நாட்டின் பால்க் மாகாணம், ஜாரி மாவட்டத்திலுள்ள தங்கும் விடுதியில், பயங்கரவாதிகள் நிகழ்த்திய தாக்குதலில் அவர்கள் உயிரிழந்தனர். இந்தத் தாக்குதலுக்கு இதுவரை எந்த அமைப்பும் பொறுப்பேற்கவில்லை.

எனினும், கடந்த சில மாதங்களாக தங்களது பயங்கரவாதச் செயல்களை தீவிரப்படுத்தியுள்ள தலிபான்கள்தான் இந்தத் தாக்குதலை நிகழ்த்தியிருக்கக்கூடும் என அதிகாரிகள் கூறினர்.

இதுகுறித்து பால்க் மாகாண பொலிஸ் துணைத் தலைவர் அப்துல் ரஸாக் காதரி கூறியதாவது:

ஜாரி மாவட்டத்திலுள்ள "பீப்பிள் இன் நீட்" என்ற செக் நாட்டு தன்னார்வத் தொண்டு அமைப்பின் தங்கும் விடுதியில் பயங்கரவாதிகள் தாக்குதல் நிகழ்த்தினர்.

இதில் அந்த நிறுவனத்தை சேர்ந்த 6 ஆண் ஊழியர்களும், 1 பெண் ஊழியரும், 2 பாதுகாவலர்களும் உயிரிழந்தனர். இந்தத் தாக்குதலுக்கு தலிபான் பயங்கரவாதிகளே காரணம் என்றார் அவர்.

"பீப்பிள் இன் நீட்" அமைப்பு, போரால் பாதிக்கப்பட்ட ஆப்கானிஸ்தானில் கடந்த 2001 ஆம் ஆண்டிலிருந்தே பொதுமக்களுக்குத் தேவையான மனிதாபிமானப் பணிகளை செய்து வருகிறது.

மக்களுக்குத் தொண்டு செய்யும் அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் மீது தாக்குதல் நிகழ்த்தக் கூடாது என்ற அதிகாரபூர்வக் கொள்கையை தலிபான் அமைப்பு கொண்டிருந்தாலும், அத்தகைய நிறுவன ஊழியர்கள் தொடர்ந்து பயங்கரவாதத் தாக்குதலுக்கு உள்ளாகி வருகின்றனர்.

கடந்த சில வாரங்களுக்கு முன்பு, தலைநகர் காபூலின் புறநகர்ப் பகுதியில், சர்வதேச தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் ஊழியர்கள் அதிக அளவில் தங்கியுள்ள பகுதியில் நிகழ்த்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலில் 14 பேர் உயிரிழந்தது நினைவுகூரத்தக்கது.

கொல்லப்பட்டவர்களில் பெரும்பாலானோர் வெளிநாட்டினர். கடந்த ஏப்ரல் மாதத்தில், பயங் கரவாதிகளால் கடத்தப்பட்ட 5 தொண்டு நிறுவன ஊழியர்களின் உடல்கள், குண்டுகள் துளைக்கப்பட்ட நிலையில் பின்னர் கண்டெடுக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## ஐ.நா.துணைப்பிரதிநிதியை வெளியேற்றிய தெற்கு சூடானுக்கு பான் கீ மூன் கண்டனம்

தெற்கு சூடானுக்கான ஐ.நா. அமைப்பின் துணைப் பிரதிநிதியை வெளியேற்ற அந்த நாட்டு அரசு முடிவு செய்துள்ளதற்கு ஐ.நா. பொதுச் செயலர் பான் கீ மூன் கண்டனம் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் கூறியதாவது,

ஐ.நா. துணைப் பிரதிநிதி டாபி லான்ஸரை நாட்டைவிட்டு வெளியேற்றும் முடிவை தெற்கு சூடான் அரசு உடனடியாகக் கைவிட வேண்டும்.

போரால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள தெற்கு சூடானில், மக்களுக்குத் தேவையான மனிதா



பிமானப் பணிகளை மேற்கொள்வதில் டாபி லான்ஸர் மிக முக்கிய பங்கு வகித்துள்ளார்.

அந்த மனிதாபிமானப் பணிகள் மக்களுக்கு தொடர்ந்து சென்றடைவதை உறுதி செய்யும் வகையில், அவர் அங்கு தொடர்ந்து பணியாற்ற அனுமதிக்கப்பட வேண்டும்என்று பான் கீ மூன் வலியுறுத்தினார்.

டாபி லான்ஸரின் பதவிக் காலம் விரைவில் முடிவடையவிருக்கும் நிலையில், அவரை நாட்டை விட்டு வெளியேற்ற முடிவு செய்திருப்பதாக தெற்கு சூடான் அரசு ஐ.நா.விடம் தெரிவித்தது.

எனினும், அந்த முடிவுக்கான காரணம் என்ன என்பதை தெற்கு சூடான் தெளிவுபடுத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வஞ்சகர் இன்சொல்லில் மயங்காதே
நல்லவர் வன்சொல்லில் கலங்காதே
- தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# எங்கள் பிள்ளைகளை வழிப்படுத்த நாங்கள் தவறியது பெருந்தவறு

யுத்தத்திற்குப் பின்பான ஈழத்தமிழர்களின் வாழ்வியல் எப்படியாக அமையும் என்பது பற்றி நம்மவர் பலர் சிந்தித்திருந்தனராயினும் அந்தச் சிந்தனை செயலுருப் பெறாமல் போயிற்று.

அதற்கான காரணம் தமிழர்களின் எந்தச் சிந்தனையும் தங்களுக்கு ஆபத்தானது என்று மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஆட்சியாளர்கள் நினைத்தமையாகும்.

இதனால் போரினால் பாதிக்கப்பட்டவர்கள் அடைந்த மனவடுக்களைக் கூட எங்களால் ஆற்றுப்படுத்த முடியாமல் போயிற்று.

வன்னிப் போரில் ஏற்பட்ட இழப்புகளைச் சொல்லி அழவும் எழுதி ஆறுதல் அடையவும் முடியாத அளவில் தமிழர்களின் வாழ்வியல் அமைந்து போனமை மிகப் பெரிய துரதிர்ஷ்டம்.

இறந்தவர்களை நினைவுகூருவதற்கே தடையென்றால் எங்களின் வாழ்வு எப்படியிருந்திருக்கும் என்பதை இனி வருகின்ற சந்ததிதான் ஆய்வு செய்து அறிக்கையிட வேண்டும். அந்தளவில் எங்கள் வாழ்வு அவலமாயிற்று.

இந்த அவலங்களைத் தாங்கி எங்கள் இழப்பிற்கு நாங்களே ஆறுதலும் சொல்லி இதுதான் வாழ்க்கை என்று, மனங்களை இறுக்கிக்கொண்டு மீளவும் வாழத் தலைப்பட, எங்கள் சமூகத்தில் எங்களால் ஏற்படுத்தப்படுகின்ற அக்கிரமங்கள், எழுந்தவன் தலையில் வீழ்ந்தது உச்சியடி என்பதாகிவிட்டது. போர்ச்சூழலின் பின்பான எங்கள் வாழ்வு ஆரோக்கியமற்றதாக மாறி விட்டது.

இடிந்த கட்டிடங்களைக் கட்டுவதிலும் உடைந்த வீதிகளைத் திருத்துவதிலும் உயர்ந்த மின்கம்பங்களில் மின்குமிழ்களைப் பொருத்துவதிலும் காட்டிய ஆர்வம் எங்கள் பிள்ளைகளின் ஆரோக்கியமான உளச் செயற்பாடுகளில்; அவர்களின் மனங்களை வழிப்படுத்தும் நெறிமுறைகளில்; அவர்களின் கல்வியில்; அவர்களின் ஆளுமையில்; வேலை வாய்ப்பில்; அவர்களைப் புரிதலில் நாம் எந்த அக்கறையும் காட்டவில்லை என்ற பெருங்குறையை இப்போது உணர்ந்தும் அனுபவித்தும் வருகிறோம்.

ஆம், பல்கலைக்கழகத்தில் பட்டம் முடித்தால் அரசு தேடிவந்து உத்தியோகம் தரவேண்டும் என்ற நினைப்பும்; சாதாரண தரம், உயர்தரம் படித்தால் வேலை இல்லையென்ற முடிவும் எங்கள் பிள்ளைகளை நெறி தவறச் செய்து விட்டது.

கல்விதான் வாழ்க்கை என்பதை மாற்றி வாழ்க்கைக்காகக் கல்வி என்ற உண்மையை உணர்த்தியிருந்தால், யுத்தம் முடிந்த கையோடு எங்கள் மண்ணில் எங்கள் இளைஞர்கள் தனித்தும் ஒருமித்தும் தொழில் முயற்சிகளை ஆரம்பித்திருப்பர்.

அரசாங்க வேலை என்பதை எதிர்பாராமல் சொந்தமாக – சுயமாக தொழில் முயற்சிகளைத் தொடங்கியிருப்பர்.

என்ன செய்வது? எங்கள் பிள்ளைகளை வழிப்படுத்தத் தவறிவிட்டோம். அச் சந்தர்ப்பத்தை சமூக விரோதிகள் தமக்குச் சாதகமாக்கிக் கொள்ள, மது பாவனையும் போதைப் பொருள் விற்பனையும் பான் பறாக் பாக்குப் பரிமாற்றமும் நடக்கலாயிற்று.

ஓ தமிழினமே! எங்கள் பிள்ளைகள் எங்களுக்குத் தேவை. சமூக அக்கறையோடு எங்கள் பிள்ளைகளை வழிப்படுத்த – நெறிப்படுத்த ஒன்று திரளுங்கள். மக்கள் சமூகம் நினைத்தால் திருத்தம் ஒரு கணப் பொழுதில் கிடைத்தாகும்.

மீண்டும் ஒரு தடவை எங்கள் பிள்ளைகளை நெறிப்படுத்துவது எங்கள் கடமை. மறந்துவிடாதீர்கள்.

# சைவசமயப் பண்பாட்டில் சம்பந்தர்

சம்பந்தர் பெருமான் அவதரிக்க சில நூற்றாண்டுக்கு முன் தமிழகம் சமண சமயத்தவர் ஆதிக்கத்தில் இருந்தது. அவர்கள் தமது கொள்கையை கடைப்பிடித்ததுடன் சைவபண்பாட்டு முறையை கண்டித்தும் சிவனை நிந்தித்தும் வந்தனர். இக்கால கட்டத்தில் சம்பந்தர் அவதரித்தார். தேவார பண்பாட்டினை நோக்கும் போது பதிகம் எனும் வடிவில் தெய்வத்தின் மாலையாக பதிகங்கள் பாடுவதுடன் கேட்போர் மனதில் இறை பக்தியை மலரச் செய்தார். அப்போது நாயன்மாரினால் பாடல் பெற்ற தலங்கள் 400 இருந்திருக்க வேண்டும்.

சம்பந்த குழந்தை அழுத அழுகை அவல அழுகையல்ல. தமிழின் மறைகள் வளரவும் ஆன்மா உய்யவும் என மறை பொருளில் சேக்கிழார்.

"கண்மலர்கள் நீர்ததும்பக் கைமலர்களால் பிசைந்து..." என்றார்.

தமிழ் மக்களின் சமயம் சைவசமயம் என்றும் சிவன் தமிழ் அறிந்த தமிழ் மொழியில் விருப்பம் உடைய கடவுள் என்று சம்பந்தர் பல பாடல்களில் விபரிக்கிறார். "முத்தமிழ் வல்ல ஞான சம்பந்தர்" என்று கூறப்படுகிறது. சமணத்தின் இறுக்கமான கொள்கை, கடுமையான துறவு போன்றவற்றை கூறி விமர்சிக்க சம்பந்தர் இறைவனையே குடும்ப தலைவனாக பாராட்டி "மாதர்பிறை கன்னியானை" என்று கூறினார். சம்பந்தர் கிட்டதட்ட 216 கோயில்களுக்கு சென்று பாடினார். அவ்வாறு செல்லும் போது கோயில் முன் செல்வோர் தங்கி நிற்க மடங்களையும் கட்ட வேண்டும் என விண்ணப்பித்தார். ஏனெனில் தொண்டு வாழ்க்கை பற்றி அறிய ஆலயங்களின் மடங்கள் உதவின.

"அன்புறு சிந்தையராகி யடியவர்
நன்புறு நல்லூர் பெருமணம்..."

இயற்கை அழகையும் இறை ஆற்றலையும் மக்கள் உணரச் செய்து தலங்கள் தோறும் சென்று பதிகங்கள் பாடினார்.

"மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்...!"

கலைகள் ஆலயங்களுக்கு ஊடாக வளர்க்கப்பட்டதையும் இசைக்கலை இதில் முதன்மை பெற்ற கலையாக இருந்ததை.

"நல்லிசை ஞான சம்பந்தன்" என்று கூறப்படுகிறது.

நாயன்மார்கள் இறைவனை தாயாக, தந்தை, தலைவனாக, தோழனாக பாவனை செய்தாலும் "தாய்" என்றும் "அன்னை" என்றும் அழைக்கும் மரபை சம்பந்தரும் பேணினார்.

"தாயலனுலகுத் தன்னொப்பிலாத் தூயவன்..." என்றார்.

இறைவனுடன் எமது மனதை சேர்த்துக்கட்டும் கயிறு ஒன்று எம்மிடம் உள்ளது. அதுவே அன்புக் கயிறாகும். இதையே "அன்புறு சிந்தையாகி" என்றார் சம்பந்தர். தேவாரங்களில் சைவ சித்தாந்த கருத்துக்கள் புரையேற இருப்பதனையும் முப்பொருள் சிந்தனையினை திரிமுதுகுன்ற பதிகத்தில்

"விளையாத தோர் பரிசில் வரு பசு
பாச வேதனையொன் தளை யாயின...."

தலைவன் சிவன் பதி பணிக்கப்பட்டது.

பசு, பிணிப்பது பாசம் என்றும் இறைவனது இயல்பினை "எண்ணிடை ஒன்றினர் இரண்டினர் உருவும் எரியிடை மூன்றினர் நான் மறையானர்..."

மேலும் "தல முதல்வர் சம்பந்தர்" என்பது சம்பந்தரின் கலை ஞானத்தை சேக்கிழார் சிறப்பித்தார். மேலும் ஞான நிலை என்பது அறிவே வடிவானது. அன்பினால் வழிபாடு செய்தால் ஞான நிலை கிட்டும் என்றார்.

கு.கோபிராஜ்
சண்டிலிப்பாய் வடக்கு.

# மீள்பரீட்சை

ஆசிரிய கலாசாலையில் 2011 (2012) ஆம் ஆண்டு மற்றும் 2014 ஆம் ஆண்டு நடைபெற்ற மேற்கூறப்பட்ட பரீட்சைக்குத் தோற்றி சித்தியடையாத அல்லது நூன சித்தி பெற்ற ஆசிரிய மாணவர்களுக்கான மீள்பரீட்சை நாளை மறுதினம் தொடக்கம் 11 ஆம் திகதி வரை அந்தந்த கலாசாலைகளில் நடைபெறும் என பரீட்சைத் திணைக்களத்தினூடாக கல்வி அமைச்சின் ஆசிரிய கல்வி நிர்வாகக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

சம்பந்தப்பட்டவர்கள் உரிய காலப் பகுதியில் பரீட்சைக்கு தோற்றுமாறும் மேலதிக விபரங்களுக்கு கலாசாலை அதிபருடன் தொடர்பு கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது. மேலும் ஆசிரிய கலா சாலையில் பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்த 2005/2006 கல்வி ஆண்டு ஆசிரிய மாணவர்களின் இறுதிப் பெறு பேற்றுச் சான்றிதழின் மூலப் பிரதி கிடை க்கப் பெற்றுள்ளது.

உரியவர்கள் கலாசாலைக் கடமை நேரத்தில் அதனைப் பெற்றுக் கொள்ளலாம் என கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் வீ.கருணலிங்கம் அறிவித்துள்ளார். (இ-3)

# பதிவு செய்க

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் சட்டமாணி கற்கை நெறிக்காக போட்டிப்பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான புதிய பதிவுகள் மற்றும் மீள் பதிவுகள் இன்றும் நாளையும் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணிவரை பிறவுண்வீதி, கொக்குவிலில் அமைந்துள்ள யாழ்.பிராந்திய நிலையத்தில் இடம் பெறும் என யாழ். பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (3)

# சம்பந்தரின் குருபூசை

யாழ்.வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் திருஞானசம்பந்தர் குருபூசை இன்று வியாழக்கிழமை காலை 8.45 மணியளவில் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.


பாடசாலை அதிபர் சு.திருநாவுக்கரசு தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் யாழ்.வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் கி.மாணிக்கராசா பிரதம விருந்தினராகவும் ஓய்வு நிலை அதிபர் மு.திருஞானசம்பந்தப்பிள்ளை, கோப்பாய் ஆசிரியர்கலாசாலைபிரதிஅதிபர்ச.லலீசன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)

## சத்திய தரிசனம்



### தொண்டனாக இரு

- எண்ணத்தில் ஒழுக்கம் இருந்தால், செயல்களிலும் அது பிரதிபலிக்கும்.
- சுயநலத்தைப் பின்னுக்குத் தள்ளினால் கடவுளின் தரிசனத்தைப் பெறலாம்.
- புற அழகைக் காட்டிலும், உள் மனதில் கிடைக்கும் அமைதியே உயர்ந்தது.
- கடவுளின் திருநாமத்தை பக்தியுடன் சொல்லவே நமக்கு நாக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது.
- "மண்ணில் பிறந்ததன் பயன் மற்றவர்க்கு உதவி செய்வதே" என்பதை நினைவில் கொள்ளுங்கள்.
- தலைவனாக விரும்பினால் முதலில் தொண்டனாக இருந்து பிறருக்குச் சேவை செய்யுங்கள்.



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### சிவபுராணம் கூறும் நோய்களும் அவை நீங்க வழிபடவேண்டிய தெய்வங்களும்


எல்லா தெய்வங்களும் நோய் நீக்கும் என்றாலும், சில குறிப்பிட்ட நோய்களுக்கு இன்ன தெய்வங்களை வழிபட வேண்டுமே என சுதமா முனிவர் சிவ புராணத்தில் விளக்கமாக எழுதியுள்ளார். அதன்படி அதற்குரிய தெய்வங்களை அந்தந்த கிழமைகளில் வழிபட்டால் நோய் நீங்கி நீண்ட ஆயுள் பெறலாம் என்பது ஐதீகம்.

அம்மை நோய்: மாரியம்மன்- ஞாயிற்றுக்கிழமை.
வயிறு சம்பந்தமான நோய்கள்: தட்சிணாமூர்த்தி, முருகன்- வியாழன், செவ்வாய்.
ஆஸ்துமா மற்றும் சுவாசக் கோளாறுகள்: மகா விஷ்ணு- சனிக்கிழமை.
ஆயுள், ஆரோக்கியம்: ருத்திரர்- திங்கட்கிழமை.
எலும்பு சம்பந்தமான நோய்கள்: சிவபெருமான், முருகன் -திங்கட்கிழமை, செவ்வாய்க்கிழமை.
கண் சம்பந்தமான கோளாறுகள்: சிவபெருமான், முருகன், பிள்ளையார்- திங்கள், செவ்வாய், புதன்.
காது மூக்கு தொண்டை நோய்கள்: முருகன்- செவ்வாய்
சொறி, சிரங்கு, படை போன்ற தோல் நோய்கள்: சங்கர நாராயணர்- வெள்ளிக்கிழமை.
தலைவலி, ஜுரம்: ஜுரஹரேஸ்வரர், பிள்ளையார்-திங்கள், புதன்கிழமை.
நீரிழிவு, சிறுநீரகக் கோளாறு: முருகன்- செவ்வாய்.
பெண்களுக்கான மாதப் பிரச்சினைகள்: ராஜராஜேஸ்வரி, வள்ளி, ஸ்ரீரங்கநாதர்-ஞாயிறு, செவ்வாய், சனிக்கிழமை.
பித்தப்பைக் கோளாறுகள்: முருகன்- செவ்வாய்.
புற்றுநோய்: சிவபெருமான்- திங்கட்கிழமை.
மாரடைப்பு, இதயக் கோளாறுகள்: துர்க்கை, சக்தி, கருமாரி, இதயாலீஸ்வரர்- திங்கள், ஞாயிற்றுக்கிழமை இராகு காலம்.
இரத்த சோகை, உயர் மற்றும் குறை இரத்த அழுத்தம்: முருகன்- செவ்வாய்க்கிழமை.
வாதக் கோளாறுகள்: சனி பகவான், சிவபெருமான்- சனிக்கிழமை இராகு காலம்.
வாயுக் கோளாறுகள்: ஆஞ்சநேயர்- சனிக்கிழமை.

தெய்வவழிபாட்டுடன், உணவுக்கட்டுப்பாடும், உடற்பயிற்சியும் செய்து நல்ல சிந்தனைகளோடு வாழ்ந்தால் [illegible] உணவு, நிறைவான தியானம், சுயநலமில்லாத பக்தியோடு இறைவனை வழிபட்டு வந்தால் நல்ல ஆரோக்கியத்துடன் நீண்ட நாள் ஆனந்தமாக வாழலாம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.பிரதேச செயலக வி.போட்டி





யாழ்.பிரதேச செயலகத்தின் விளையாட்டுப் போட்டி, பிரதேச செயலாளர் திருமதி சுகுணவதி தெய்வேந்திரம் தலைமையில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் கடந்த செவ்வாய்க் கிழமை நடைபெற்றது. திருக்குடும்ப கன்னியர் மட மாணவிகளின் உடற்பயிற்சி கண் காட்சி இதன்போது நடைபெற்றது. தொடர்ந்து நாவாந்துறை சென்.மேரிஸ்அணிக்கும் குருநகர் பாடும் மீன் அணிக்கும்இடையிலான காற்பந்தாட்டப்போட்டி நடைபெற்றது. இதில் சென்.மேரிஸ் அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியனாகியது.

யாழ்.மாவட்டச் செயலாளர் நாகலிங்கம் வேதநாயகன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு, பிரதேச செயலக கழகங்களுக்கிடையில் நடைபெற்ற விளையாட்டு விழாவில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களையும் கேடயங்களையும் வழங்கினார். யாழ்.கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சண்முககுமார், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அதிபர் எஸ்.கே. எழில்வேந் தன், யாழ். மாவட்ட விளையாட்டுஅதிகாரி எம்.ஆர்.மோகன தாஸ் ஆகியோர் கலந்துகொண்டனர். மாவட்டச் செயலர் தனது உரை யில், விளையாட்டின் போது வெற்றி தோல்வி என்பது சகஜமானது. தோல்வியடைந்தவர்கள் பொறுமையுடன் அவற்றியாளர்களுடன் சிநேகித மான முறையில் நடந்து கொள்வது சிறபபானது என்றார். (க)

## விதிமுறை மீறி பந்து வீசிய 128 பந்து வீச்சாளர்களுக்கு தடை

இலங்கையில் நடத்தப்பட்ட பந்துவீச்சு சோதனையில், விதிமுறைகளுக்கு புறம்பாக பந்து வீசியதாக அடையாளம் கண்டுபிடிக்கப்பட்ட 128 பந்துவீச்சாளர்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஐ.சி.சி.க்கும் இலங்கை கிரிக்கெட் வாரியத்துக்குமிடையே ஏற்பட்ட ஒப்பந்தப்படி, விதிகளுக்கு மாறாக பந்துவீசுபவர்களை உள்ளூரிலேயே அடையாளம் காணும் பணி நடைபெற்றது.

கடந்த 2014-15 ஆண்டுகளில் இலங்கை உள்ளூர் கிரிக்கெட் அளவில் 170 பந்துவீச்சாளர்கள் மீது சந்தேகம் ஏற்பட்டு அவர்களது பந்துவீச்சு பரிசோதனைக் குட்படுத்தப்பட்டது. இதில் 42 பந்துவீச்சாளர்களின் பந்துவீச்சு முறை சரியாக இருந்ததால் அவர்கள் தடையில் இருந்து தப்பினர்.

விதிகளுக்கு முரணாக பந்து வீசிய 128 பந்துவீச்சாளர்களுக்கு தடை விதிக்கப்பட்டது. கடந்த செப்டம்பர் மாதத்தில் பாகிஸ்தானில் 16 வீரர்களுக்கு தடை விதிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (க)

# ஆசிய சதுரங்க போட்டியில் கண்டி மாணவன்ஹரிகிஷன்



சிங்கப்பூரில் கடந்த 30 ஆம் திகதி ஆரம்பமான ஆசிய பாடசாலைகளுக்கு இடையிலான சதுரங்கப் (செஸ்) போட்டி-2015இல் 11 வயது பிரிவுக்குட்பட்ட பிரிவில் கண்டி, புனித திருத்துவ கல்லூரியில் 6ஆம் தரத்தில் பயிலும் மாணவனான கிருபாகர் ஹரிகிஷன், பங்குபற்றுகின்றார்.

இலங்கையில் மட்டுமன்றி வெளிநாடுகள் பலவற்றிலும் நடைபெற்ற சதுரங்கப் போட்டிகளில் தனது திறமையை வெளிப்படுத்தி சம்பியன் பட்டங்களையும் பதக்கங்களையும் சான்றிதழ்களையும் தம்வசப்படுத்திய இவர், போலந்து, இந்தியா, ரஷ்யா மற்றும் மலேசியா ஆகிய நாடுகளில் நடைபெற்ற சர்வதேச ரீதியிலான சதுரங்கப் போட்டிகளில் பங்கேற்று தனது திறமைகளை வெளிப்படுத்தியுள்ளார்.

இரண்டரை வயது முதல் சதுரங்கத்தில் தன்னுடைய திறமையை காண்பித்துவரும் ஹரிகிஷன், கடந்த ஆண்டு நடைபெற்ற 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்தி, கல்லூரிக்கு பெருமை சேர்த்ததோடு, 11 வயதுக்கு உட்பட்டவர்களுக்கான கராத்தே போட்டியில் முதன் முறையாக பங்கேற்று சம்பியன் பட்டத்தை சுவீகரித்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும். (க)

# பிரதேச செயலகங்களுக்கிடையிலான கரப்பந்தாட்ட போட்டி; தெல்லிப்பழை அணி வெற்றி






யாழ். மாவட்ட பிரதேச செயலகங்களுக்கிடையில் நடைபெற்ற கரப்பந்தாட்ட போட்டியில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கிடையிலான இரண்டு போட்டிகளிலும் தெல்லிப்பழை பிரதேச செயலக அணி வெற்றி பெற்றது.

யாழ். மாவட்ட விளையாட்டுத் துறை அதிகாரி ஆர். மோகனதாஸ் தலைமையில் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி விளையாட்டு மைதானத்தில் கடந்த சனிக்கிழமை இப்போட்டி நடைபெற்றது.

இறுதிச் சுற்றில் விளையாடிய கோப்பாய் பிரதேச செயலக ஆண்கள் அணியுடன் மோதிய தெல்'ப் பழை பிரதேச செயலக ஆண்கள் அணி 03:02 என்ற அடிப்படையில் தெல்லிப்பழை வெற்றியைத் தனதாக்கிக் கொண்டது. கரவெட்டி பிரதேச செயலக பெண்கள் அணியும் தெல்லிப்பழை பிரதேச செயலக பெண்கள் அணியும் மோதியதில் 2:0 அடிப்ப டையில் தெல்லிப்பழை அணி முத லாம் இடத்தை தனதாக்கிக்கொண்டது. (க)

# காலிறுதியிலிருந்து வெளியேறினார் சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர்



பிரெஞ்சு ஓபன் டென்னிஸ் போட்டியின் காலிறுதியில் சுவிட்சர்லாந்தின் நட்சத்திர வீரர் ரோஜர் பெடரர் போராடி தோல்வியடைந்தார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டங்கள் நேற்றுமுன்தினம் நடைபெற்றன. இதில், 2 ஆம் தரநிலை வீரரான பெடரர், 8ம் தரநிலையில் உள்ள சக நாட்டு வீரரான ஸ்டான் வாரிங்காவை எதிர்கொண்டார். விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் பெடரருக்கு அதிர்ச்சி அளிக்கும் வகையில் விளையாடிய வாரிங்கா, 6-4, 6-3, 7-6(7/4) என்ற செட்கணக்கில் வெற்றி பெற்றார்.

இவர்கள் இருவரும் [illegible] முன் மோதிய 18 ஆட்டங்களில் 2 முறை மட்டுமே பெடரர் தோல்வியைத் தழுவியது குறிப்பிடத்தக்கது.

17 முறை கிராண்ட் ஸ்லாம் பட்டம் வென்றுள்ள பெடரர், வாரிங்காவின் சர்வீஸ்களை முறியடிக்க முடியாமல் தடுமாறியதை இந்த ஆட்டத்தில் காண முடிந்தது. வாரிங்காவின் ஆட்டம் உண்மையில் சிறப்பாக இருந்ததாக பெடரர் பாராட்டினார்.

இந்த வெற்றியின் மூலம் முதல் முறையாக பிரெஞ்சு ஓபன் அரையிறுதிக்கு முன்னேறியுள்ள வாரிங்கா, அரையிறுதியில் ஜோ-[illegible] உள்ளார். (க)

# பிரெஞ் ஓபன் டென்னிஸ் போட்டி அரையிறுதியில் இவானோவிச்



கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான பிரெஞ் ஓபன் டென்னிஸ் போட்டி பாரீஸ் நகரில் நடந்து வருகிறது. இதில் நேற்று முன் தினம் நடந்த பெண்கள் ஒற்றையர் கால்இறுதி ஆட்டத்தில் தரவரிசையில் 7ஆவது இடம் வகிக்கும் அனா இவானோவிச்சும் (செர்பியா), 19ஆம் நிலை வீராங்கனை எலினா ஸ்விடோலினாவும் ( உக்ரைன்) மோதினர்.

அனுபவம் வாய்ந்த இவானோவிச்சின் ஆக்ரோஷமான ஷாட்டுகளுக்கு ஈடுகொடுக்க முடியாமல் திணறிய ஸ்விடோலினா எதிர்ப் பின்றி சரண் அடைந்தார். 75 நிமிடங்கள் நடந்த ஆட்டத்தில் 2008ஆம் ஆண்டு சம்பியனான இவானோவிச் 6-3, 6-2 என்ற நேர் செட்டில் எளிதில் வெற்றி பெற்று அரைஇறுதிக்கு முன்னேறினார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 28-வது ஆண்டு நிறைவையொட்டி விளையாட்டுப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம் எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி 28 ஆண்டுகால மனிதநேய சேவையை நிறைவு செய்வதை முன்னிட்டு ஜெய்ப்பூர் நிறுவனப் பயனாளிகளாகவுள்ள ஆண்களுக்கும் பெண்களுக்குமாக தனித் தனியான விளையாட்டு போட்டிகள் நடத்தப் படவுள்ளது.

கிரிக்கெட், ஓட்டப்போட்டிகள், தடை தாண்டல் ஓட்டம், முச்சக்கர வண்டி ஓட்டம், முள்ளந்தண்டு பாதிக்கப்பட்டவர்களுக்கிடையேயான கரபந்தாட்டம், விநோத உடை, சைக்கிள் ஓட்டம் (மெதுவாக) பட்மின்டன் ஆகிய போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் ஜெய்ப்பூர் நிறுவனப் பயனாளிகள் நேரில் தொடர்பு கொண்டு தமது பதிவுகளை தாமதமின்றி மேற்கொண்டு 28 ஆவது ஆண்டு நிறைவு விழா சிறப்பாக நடைபெறுவதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (இ-3)

# திருகோணமலை ஆயராக றோயல் கிறிஸ்டியன் நியமிப்பு

(திருகோணமலை)

திருகோணமலை ஆயராகப் பணியாற்றிவந்த ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்கள் பணி ஓய்வுபெற விரும்பி அனுப்பியிருந்த விண்ணப்பத்தை திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் ஏற்றுக்கொண்டு புதிய ஆயராக 55 வயதான அருள்பணி நோயெல் எம்மானுவேல் கிறிஸ்டியன் அவர்களை நியமித்துள்ளார்.

கடந்த 32 ஆண்டுகளுக்கும் மேலாக ஆயராகப் பணியாற்றி வந்த ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்கள் திருகோணமலை - மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் ஆயராக 1983-ம் ஆண்டு நியமிக்கப்பட்டார்.

பின்னர் 2012-ம் ஆண்டு, திருகோணமலை தனி மறைமாவட்டமாக பிரிக்கப்பட்டதும் அதன் ஆயராக கடந்த மூன்று ஆண்டுகள் பணியாற்றி வந்தார்.

78 வயதான ஆயர் சுவாம்பிள்ளை அவர்கள் பணி ஓய்வு பெறுவதைத் தொடர்ந்து அருள்பணி நோயெல் எம்மானுவேல் கிறிஸ்டியன் அவர்கள் ஆயராக நியமனம் பெற்றுள்ளார்.


1960-ம் ஆண்டு திருகோணமலையில் கிறிஸ்துபிறப்பு நாளான டிசம்பர் 25-ம் திகதி பிறந்த நோயெல் எம்மானுவேல் கிறிஸ்டியன் அவர்கள் 1986-ம் ஆண்டு அருள்பணியாளராக அருள்பொழிவு பெற்றார்.

மட்டக்களப்பு இருதயபுரம் அக்கரைப்பற்று ஆகிய இடங்களில் பங்குத்தந்தையாகப் பணியாற்றி வந்த அருள்பணி கிறிஸ்டியன் அவர்கள் ஈராண்டுகள் உரோம் நகர் உர்பானியா பல்கலைக் கழகத்தில் உயர் கல்விபெற்றபின் தாயகம் திரும்பினார்.

2001-ம் ஆண்டு முதல் கண்டி தேசிய குருமடத்தில் பேராசிரியராகப் பணியாற்றிவந்த அருள்பணி கிறிஸ்டியன் அவர்கள் 2011-ம் ஆண்டு முதல் திருகோணமலை முதன்மை குருவாகவும் 2012-ம் ஆண்டு முதல் அம்மறைமாவட்டத்தின் பொருளாளராகவும் பணியாற்றிவந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (11)

# சச்சின் டெண்டுல்கர் சாதனையை முறியடித்தார் அலிஸ்டயர் குக்





டெஸ்ட் கிரிக்கெட்டில் 9,000 ஓட்டங்களை குறைந்த வயதில் எடுத்ததற்கான சச்சின் டெண்டுல்கர் சாதனையை அலிஸ்டயர் குக் முறியடித்தார்.

ஹெடிங்லியில் நியூஸிலாந்துக்கு எதிரான 2-வது டெஸ்ட் போட்டியில் அவர் இந்த சாதனையை நிகழ்த்தினார்.

அதாவது சச்சின் டெண்டுல்கரை விட 94 நாட்கள் முன்னதாகவே அலிஸ்டயர் குக் 9,000 ஓட்டங்களை எடுத்து சாதனை புரிந்துள்ளார்.

30 வயது, 159 நாட்களில் அலிஸ்டயர் குக் 9,000 ஓட்டங்களை எட்ட, சச்சின் டெண்டுல்கர் தனது 9,000 டெஸ்ட் ஓட்டங்களை 30 வயது, 253 நாட்களில் எடுத்தார்.

ஆனால் 31 வயதுக்கு முன்பாகவே டெஸ்டில் 9,000 ஓட்டங்களை எடுத்த வீரர்கள் சச்சின் மற்றும் குக் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் 204 இன்னிங்ஸ்களில் 9,000 ஓட்டங்களை எடுத்த தன் மூலம் குறைந்த இன்னிங்சில் இந்த மைல்கல்லை எட்டிய வீரர்கள் பட்டியலில் 10-ம் இடத்தில் உள்ளார் அலிஸ்டயர் குக். சச்சின் டெண்டுல்கர் 179 இன்னிங்ஸ்களில் 9000 ஓட்டங்களை எட்டினார் என்பது குறிப்பிடத்தக்கது.

சங்கக்கரா 172 இன்னிங்ஸ்களிலும், ராகுல் டிராவிட் 176 இன்னிங்ஸ்களிலும் பிரையன் லாரா 177 இன்னிங்ஸ்களிலும் ரிக்கி பொண்டிங் 177 இன்னிங்ஸ்களிலும் மஹேல ஜெயவர்தன 178 இன்னிங்ஸ்களிலும் 9,000 டெஸ்ட் ஓட்டங்கள் என்ற மைல்கல்லை எட்ட சச்சின் 179 இன்னிங்ஸ்களில் எடுத்து 6-ம் இடத்தில் உள்ளார்.

இவருக்குப் பின்னால் ஜக் கலிஸ் (188), சுனில் கவாஸ்கர் (192), கிரேம் ஸ்மித் (195), அலிஸ்டயர் குக் (204), அலன் போர்டர் (207), ஸ்டீவ் வோ (216), சந்தர்போல் (216) ஆகியோர் உள்ளனர்.

சச்சின் டெண்டுல்கர் 2004-ம் ஆண்டு அவுஸ்திரேலியாவுக்கு எதிராக சிட்னி டெஸ்ட் போட்டியில் அடித்த இரட்டைச் சத இன்னிங்ஸ் மூலம் 9,000 ஓட்டங்களைக் கடந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

# பிரெஞ்சு ஓபன் டென்னிஸ் போட்டி அரையிறுதிக்கு முன்னேறினார் செரினா

பிரான்சில் நடைபெற்று வரும் பிரெஞ்சு ஓபன் டென்னிஸ் போட்டியில் நேற்று நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் செரினா வில்லியம்ஸ் வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறினார்.



ஒற்றையர் தரவரிசைப்பட்டியலில் முதலிடத்தில் உள்ள செரினா வில்லியம்ஸ், தரவரிசைப்பட்டியலில் 17-வது இடத்தில் உள்ள சாரா எர்ரானியை எதிர்கொண்டார். இதில் 6-1, 6-3 என்ற நேர் செட்டில் செரினா வெற்றிபெற்றார். (க)

# சந்தேக நபர்...

**சந்தேக நபர்கள் மீதான குற்றங்கள் தொடர்பாக மன்றில் பொலிஸ் அறிக்கை சமர்ப்பித்தது.**

இவ்வழக்கு விசாரணையின் போது நீதித்துறையின் நலனைக் கருத்தில் கொண்டு இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் ஜெப்ரி அழகரட்ணம் மன்றில் ஆஜராகியிருந்தார். மேலும் 15 இற்கும் மேற்பட்ட சட்டத்தரணிகள் வழக்குத் தொடுநர் பொலிஸார் சார்பில் மன்றில் ஆஜராகியிருந்தனர்.

சந்தேக நபர்கள் சார்பிலும் 5 இற்கும் மேற்பட்ட சட்டத்தரணிகள் மன்றில் ஆஜராகியிருந்தனர்.

இதன் போது பொலிஸாரினால் தடுத்து வைக்கப்பட்டுள்ள சந்தேக நபர்கள் மீதான குற்ற அறிக்கை பொலிஸாரினால் மன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

நீதிமன்றத்தின் மேல் நடத்தப்பட்ட தாக்குதலில் 10 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் பெறுமதியான பொருட்கள் சேதமாக்கப்பட்டுள்ளதாக நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

இத் தாக்குதல் சம்பவமானது நீதி நிர்வாகத்திற்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தலாகும். மேலும் முழு நாட்டின் சமாதானத்திற்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தலாகும்.

இத் தாக்குதல் தொர்பில் கைது செய்யப்பட்டவர்களில் 4 பேர் பாடசாலை மாணவர்கள். ஏனையவர்கள் மீதான விசாரணைகளும் பெறப்பட்டுள்ள புகைப்படங்கள், வீடியோக்கள் மூலமாக நடைபெற்று வருகின்றது.

இருப்பினும் சம்பவத்தில் கைது செய்யப்பட்டவர்களில் மரணச் சடங்கு ஒன்றிற்கு சென்று பான்ட் வாத்தியம் இசைத்துவிட்டு தமது இடம் நோக்கி வந்து கொண்டிருந்தவர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களை பிணையில் விடுதலை செய்வதில் எந்த ஆட்சேபனையும் பொலிஸாருக்கு இல்லை.

ஆனால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய பிரஜைக்கு பிணை வழுங்குவது தொடர்பாக பொலிஸார் கடும் ஆட்சேபனையை தெரிவித்தனர்.

குறித்த இந்திய பிரஜையின் கையடக்கத் தொலைபேசியில் அங்கு நடைபெற்ற வன்முறை சம்பவங்கள் தொடர்பான அதிக புகைப்படங்கள் இருந்தமை பொலிஸாரினால் சுட்டிக்காட்டப்பட்டது.

சந்தேக நபர்கள் சார்பாக ஆஜரான சட்டத்தரணிகளால் பிணை விண்ணப்பம் மன்றில் சமர்ப்பிக்கப்பட்டது

மன்றில் ஆஜர் செய்யப்பட்டவர்கள் பெரும்பாலும் சம்பவ இடத்தில் கைது செய்யப்படவில்லை. வேறு எங்கோ வீதிகளில் கைது செய்யப்பட்டு நீதிமன்ற தாக்குதல் சம்பவத்துடன் இணைக்கப்பட்டு வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அவர்கள் என்ன குற்றங்களைச் செய்தார்கள் என்று பொலிஸாரினால் நிரூபிக்கப்படவில்லை. இது தொடர்பாக கடந்த மாதம் 25 ஆம் திகதி மன்றுக்கு பொலிஸார் சமர்ப்பித்த குற்ற அறிக்கையில் இருந்து தெட்டத் தெளிவாக தெரிகின்றது.

எனவே சந்தேக நபர்களை மன்று விடுவிக்க வேண்டும். இல்லையேல் அவர்கள் பிணையில் வெளிச் செல்ல மன்று அனுமதிக்க வேண்டும் என்றும் தடுத்து வைக்கப்பட்டுள்ள பாடசாலை மாணவர்களை அசாதாரண சந்தர்ப்பங்களினைப் பயனபடுத்தி விடுதலை செய்ய வேண்டும் என்றும் சட்டத்தரணிகள் மன்றில் 5 பிணை விண்ணப்பங்களை சமர்ப்பித்திருந்தனர்.

எனினும் மன்றில் சமர்ப்பிக்கப்பட்ட பிணை விண்ணப்பங்கள் எவையும் உடனடியாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட வில்லை.

**சந்தேக நபர்களாலும் மன்றில் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன**

அனுராதபுரம் சிறைச்சாலையில் உள்ள தாம் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்ட நிலையில் கை, கால் முறிவடைந்துள்ளது.

சிறைச்சாலைக் குள் உள்ள வைத்தியசாலையி லேயே தாம் அனுமதிக்கப்பட்டுள் ளோம்.

அங்கு சீரான சிகிச்சை வழங்கப்படுவதில்லை. தம்மை பரிசோதனை செய்யவரும் வைத்தியர் நீதிமன்றத்தில் அனுமதி பெற்று சட்ட வைத்திய அதிகாரியிடம் செல்லுமாறு கூறியிருந்தார். எனவே தம்மை யாழ்ப்பாண போதனா வைத்திய சாலையில் அனுமதித்து சிகிச்சை பெறுவதற் கான அனுமதி வழங்குமாறு 3 சந்தேக நபர்கள் நீதவானிடம் கோரியிருந்தனர்.

அதுமட்டுமல்லாமல் ஒருவர் தான் காலை, மாலை, இரவு ஆகிய 3 வேளையும் நோய் காரணமாக ஊசி போடுவதால் தன்னால் தொடர்ந்து சிறைச்சாலையில் தங்கியிருக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும் தடுத்து வைக்கப்பட்டுள்ள தம்மில் பலருக்கு சட்டத்தரணிகள் ஆஜராகவில்லை. எனவே எமது நிலை தொடர்பாக மன்றிற்கு தாமே தெரிவிக்க அனுமதி வழங்க வேண்டும் என்றும் சிலர் கோரியிருந்தனர்.

**நீதவானின் உத்தரவு**

பிணை விண்ணப்பங்களை சமர்ப்பித்த 33 ஆவது சந்தேக நபர் மீதான பிணை விண்ணப்பம் எதிர்வரும் 8 ஆம் திகதியும், 14 ஆவது சந்தேக நபருடைய பிணை விண்ணப்பம் 5 ஆம் திகதி 45 ஆவது சந்தேக நபருடைய பிணை விண்ணப்பம் 6 ஆம் திகதியும், 34 ஆவது சந்தேக நபருடைய பிணை விண்ணப்பம் 12 ஆம் திகதியும் கட்டளைக்காக மன்றில் எடுத்துக் கொள்ளப்படும்.

இதுவரை 3 பகுதிகளாக குற்றங்கள் பிரிக்கப்பட்டு மன்றில் ஆஜர் செய்யப்பட்ட அனைவரையும் எதிர்வரும் 12 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டிருந்தார்.

மேலும் சந்தேக நபர்கள் தெரிவித்த கருத்துக்கள் தொடர்பாக சிறைச்சாலை அதிகாரியின் ஊடாக சத்தியக் கடிதம் ஒன்றினை மன்றில் சமர்ப்பிக்குமாறும் நீதவான் அறிவித்திருந்தார்.

இதேவேள்ளை சம்பவத்தில் தொடர்புபட்டவர்கள் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்ட 130 பேரில் 43 பேர் தொடர்பான வழக்கு கடந்த முதலாம் திகதி நீதீமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

மேலும் ஒரு தொகுதியினர் இன்றைய தினம் விசாரணைக்கு உட்படுத்தப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும். (4-9,11)

CNR WORLD WIDE EXPRESS & TRAVELS யாழ்ப்பாணத்தில் மங்களகரமான ஆரம்பம்
'அலுவலக திறப்பை முன்னிட்டு நீங்கள் அனுப்பும் பொதிகளுக்கு விசேட விலைக்கழிவு வழங்கப்படுகிறது'.
வெளிநாட்டு/ உள்நாட்டு துரித தபால் பொதிகள் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி சேவை.
அனுப்பும் பொதிகளுக்கான பாதுகாப்பு மற்றும் காப்புறுதி உத்தரவாதம் (உங்கள் வீட்டில் இருந்தவாறு அனுப்பும் வசதி)
சர்வதேச விமான பயணச்சீட்டுக்கள் (AirTicket) மீள் உறுதிப்படுத்தல், திகதி மாற்றம் (Date Change) செய்து கொள்ளலாம்.
கடல் /ஆகாய மார்க்க பெரிய பொதிகள் மற்றும் கார்கோ சேவை (Bulk Cargo)
சி.என்.ஆர். எக்ஸ்பிரஸ் பொதிகள் சேவை

401, Clock Tower Road, Jaffna (பெருமாள் கோவில் அருகில்) அழையுங்கள்: 077 293 1062
(C-1161)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் - கொழும்பு முன்னணி நிறுவனங்கள் மற்றும் வர்த்தக மையங்களில்

**உடனடி வேலைவாய்ப்புக்கள்**

**1000 ற்கும் மேற்பட்ட வெற்றிடங்கள்**

சுயவிபரக்கோவையுடன் ஜூன் 8 க்கு முன் நேரில் வரவும்

**சிகரம் தொழில் வங்கி**

SIKARAM
Get Set for Careers & Take off Your Dreams

(C-1164)

Sikaram (Pvt) Ltd.
275-2/1 & 2/2, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம் (வைத்தியசாலை பின்புறம்)
Tel: 077 36 16 798



## பங்குச்சந்தை முதலீட்டு நுட்பங்கள்

எதிர்வரும் சனிக்கிழமை காலை 9.30 - 10.30 (06.06.2015)

**பங்குப்பரிவர்த்தனை - யாழ்கிளை கேட்போர்கூடம்**

மேலதிக தகவல்களுக்கு

**INVEST** என **TYPE** செய்து

**SMS** அனுப்புங்கள் **0777822014**

**147, 2/3, கே.கே.எஸ் வீதி, (சத்திரச்சந்தி) யாழ்ப்பாணம்.**

(C-1163)



## விசா நிராகரிக்கப்பட்டுள்ளதா?

**கவலையை விடுங்கள்!**

15 வருடங்களுக்கு மேற்பட்ட விசா சேவை நிபுணத்துவ அனுபவம் கொண்ட கொழும்பு சட்ட வல்லுநர்கள் ஊடாக...

**எந்தவொரு நாட்டுக்குமான எந்த வகை விசா என்றாலும்...**

**நாங்கள் மீளப் பெற்றுத்தருகிறோம்!**

STUDENT VISA - SPOUSE VISA - DEPENDANT VISA
WORK VISA - SKILLED MIGRATION - VISIT VISA

FREE Assessment
Send Rejection Letter
info@sikaram.lk

www.sikaram.lk

SIKARAM
Education Abroad
Work, Migration & Visa Solutions

(சி-1158)

Sikaram (Pvt) Ltd.
275-2/1 & 2/2, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம் (வைத்தியசாலை பின்புறம்)
Tel: 0777 32 4004, 021 222 00 11



## காணி விற்பனைக்கு

கடற்கரை வீதி, கற்கோவளம் பருத்தித்துறையில் கடல் அண்மித்த நன்நீர் மின்சார வசதிகளுடைய 4 ஏக்கர் காணி விற்பனைக்கு உண்டு. பகுதியாகவும் விற்கப்படும்.

**தொடர்புகளுக்கு:-0776225033**

(சி-1162)



**ALLIANCE FRANÇAISE DE JAFFNA**

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

**af பிரெஞ்சு மொழி**



கற்பதற்கு FRENCH EMBASSY யின்கீழ் இயங்கும் முதல்தர சர்வதேச நிறுவனம் AF மட்டுமே. (யாழில் 1976 முதல்) 136+ நாடுகளில் 1040+ கிளைகள். உயர் தகுதியுடைய ஆசிரியர்கள் (பிரெஞ் ஆசிரியர் உட்பட) சரியான உச்சரிப்பு, CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS. யாரும் படிக்கலாம். ஓரிரு மாதங்களும் படிக்கலாம்.

விரைவில் புதிய பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன. உடன் பதிவு செய்யுங்கள். (640)

021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.



**வலம்புரி**

விளம்பரத் தொடர்புகளுக்கு

**021 221 7603, 021 567 1543**



# BBA (MANAGEMENT) MEDIUM-TAMIL

**இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம் (வெளிவாரி)**

- மேற்படி பல்கலைக்கழகத்தினால் புதிய ஆண்டுக்கான பதிவுகள் கோரப்பட்டுள்ளன.
- இக்கற்கைநெறியானது மூன்று ஆண்டுகளாகும்.
- A/L ல் கலை, வர்த்தகம், கணிதம், விஞ்ஞானம் ஆகிய பிரிவுகளில் மூன்று பாடம் சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள் ஆவர்.
- இப்பிரிவுக்குரிய விரிவுரைகள் ஆரம்பம் 06/06/2015 காலை 8 மணி

***குறிப்பு:விரிவுரைகளில் பங்கேற்கும் வெளிமாவட்ட மாணவர்களுக்கு தங்குமிட வசதி இலவசம்***

**புதிய உயர்கல்லூரி**
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

விபரங்களுக்கு:
S.அருள்நங்கை
T.P 0212228148

(சி-1150)


## நாடாளு...

அவையில் ஏற்பட்ட குழப்பநிலை காரணமாக அவையமர்வை 5 நிமிடங்களுக்கு சபாநாயகர் ஒத்திவைத்தார்.

நாடாளுமன்றத்தை கலைக்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கையை அடுத்து ஏற்பட்ட குழப்ப நிலை காரணமாகவே அவை நடவடிக்கை 5 நிமிடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து கட்சித்தலைவர்கள் கூட்டம் நடத்தப்பட்டது. அக்கூட்டத்தில் தீர்மானம் எதுவும் எட்டப்படாததையடுத்தே நாடாளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டது. (11)

## நீதி...

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட 131 பேரில் ஒருதொகுதியினரின் வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

அந்த வழக்கின் போதே பொலிஸாரால் மேற்குறித்த சேத மதிப்பீடு மன்றில் அறிக்கையிடப்பட்டது. (11,9)

## தமிழ்...

கொழும்பு கொட்டாஞ்சேனை பகுதியில் நிகழ்ந்த கடத்தல் சம்பவங்களுடனும் தொடர்பிருப்பதாக தமது விசாரணைகளில் தெரியவந்திருப்பதாகவும் ரஞ்சித் முனசிங்க நீதிமன்றத்தில் தெரிவித்திருக்கிறார்.

இந்த வழக்கின் மேலதிக விசாரணை எதிர்வரும் 23 திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது. (11)

## புதிய...

மன்றத் தேர்தலில் தமது கூட்டணியின் நிலைப்பாடு குறித்து தேர்தல் சமயத்தில் அறிவிக்கப்படும் எனவும் மனோ கணேசன் தெரிவித்தார்.


வடக்கில் பிரபல்யமான

**கையடக்கத் தொலைபேசி திருத்தும் பாடநெறி**

**Mobile Phone Repairing Course**

"மீண்டும் வவுனியா மண்ணில்"

மாதம் 50,000 முதல் 100,000 இற்கு மேல் வருமானம் பெறும் நிரந்தர உள்நாட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு

**June 13ஆம் திகதி காலை 9.00 மணி முதல் 13, 14, 15, 16 ஆகிய நான்கு தினங்களில்**

- ஆரம்பம் முதல் சரளமாக கற்பிக்கப்படும்.
- சகல கேள்விகளுக்கும் தெளிவான விளக்கம்.
- தனிப்பட்ட கவனிப்பு.
- 1000 இற்கு மேற்பட்ட கையடக்கத் தொலைபேசி திருத்தும் இரகசியங்கள் .
- சுயமாக வேலை செய்யும் அளவுக்கு பயிற்சியளிக்கப்படும்.

**இலவசமாக:**

- இரகசியங்கள் அடங்கிய (CD) வழங்கப்படும்.
- கையேடு

குறைந்த முதலீட்டில் உடனடியாக தொழில் தொடங்குவதற்குத் தேவையான அனைத்து தகவல்களும்

Special Trainer **Ganesh Sir**

பாடநெறிக் கட்டணம் 8500/- | பதிவுக் கட்டணம் 2000/-

வயதெல்லை இல்லை. ஆரம்ப அறிவு, ஆங்கிலம் தேவையற்றது

மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகள் என்பதால் முன்கூட்டியே பதிவு செய்யவும்.

Asian Resource Center
108/15 Nelukkulam, Vavuniya

(638) 077 6131358



## வேலைவாய்ப்புகள்

எங்களுடன் இணைய உங்களுக்கு விருப்பமா???

Granton International!!!

நீங்கள் 18-30 வயதிற்குட்பட்ட O/L அல்லது A/L சித்தியடைந்தவராயின் எங்களுடன் இணைய முடியும். (பயிற்சியுடன் வேலைவாய்ப்பு என்பதால் அனுபவம் அவசியமில்லை)

Rs.15,000/- பயிற்சி காலத்தில் பின் 35,000/-

Call today & Start tomorrow
0774458134, 0214993166
No. 225, 3ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

**We are looking for**

- Store Keepers
- Sales Excecutive
- Supervisors
- Assistant Managers
- Managers

(With ETF/ EPF, மருத்துவ வசதி, வெளிநாட்டு பயணங்கள், தங்குமிட வசதியும் உண்டு)

(639)



## ENGLISH LITERATURE

தரம் 10 மற்றும் 11ஆம் ஆண்டுக்கான English Literature புதிய பிரிவுகள் ஆரம்பம்.

Audio, Video வடிவில் Poem, drama மற்றும் Novel என்பவற்றை இலகுவான முறையில் கற்பித்துக் கொடுக்கப்படும்.

**STUDENT SUCCESS CENTRE**

320 A, 1/2 Main Street, Jaffna.

0776169470 **புதிய பிரிவுகள்**

(646)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும்

### அமரர் அரிகரிதாசன் டெறஸ்கோ (டெறஸ்)

(மயிலிட்டி வீரமாணிக்க தேவன்துறை)

| பிறப்பு | இறப்பு |
| --- | --- |
| 06 - 05 - 1967 | 06 - 05 - 2015 |



**சோடியிழந்த அன்றிலைப் போல்**
**துடிக்கின்றேன் ஐயா!**
**என் மங்கலம் பறித்து**
**எங்கு சென்றீர்**
**ஓடிவர மாட்டீரோ? எம்**
**ஒரே மகனைக் காண்பதற்கு**

கடந்த 06/05/2015 (புதன்கிழமை) அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் **அரிகரிதாசன் டெறஸ்கோ (டெறஸ்)** அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 05/06/2015 நாளை வெள்ளிக்கிழமை அதிகாலை 5 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெறும்.

அந்நிகழ்விலும் தொடர்ந்து அன்னாரது இல்லத்தில் நண்பகல் 12 மணியளவில் நடைபெறும் சபிண்டீகரண நிகழ்விலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

டிப்போ பின் வீதி,
பருத்தித்துறை.

இங்ஙனம்
குடும்பத்தினர்

(சி-1149)

## கண்ணீர் அஞ்சலி

### அமரர் அம்பலவாணர் தங்கமுத்து

(ஆலங்குழாய் வீதி, சண்டிலிப்பாய்)



எமது கல்லூரி ஆசிரியர் திருமதி பி.ஸ்ரீக்குமரன் அவர்களது அன்புத் தாயார் அம்பலவாணர் தங்கமுத்து அவர்களது மறைவையொட்டி அன்னாரது குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி

(644)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.06.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org